விலை : 20.00
பக்கங்கள் : இருபது நான்கு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 பங்குனி 30 ஞாயிற்றுக்கிழமை (13.04.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 115

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## பிரித்தானியா எச்சரிக்கை

எச்சரிக்கையுடன் பயணம் செய்ய வேண்டிய நாடுகளின் வரிசையில் பிரித்தானியா. இலங்கையை இணைத்துக் கொண்டுள்ளது.

இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் குறித்து திருப்தி கொள்ள முடியாது எனத் தெரிவித்துள்ள பிரித்தானியா.

இலங்கையில் தொடர்ந்தும் மனித உரிமை மீறல்கள் இடம் பெற்று வருவதாகவும்,

குடி பானங்களில் போதைப் பொருட்கள் கலக்கப்பட்டு வருவதாக குற்றம் சுமத்தியுள்ளது.

இலங்கையின் தென்பகுதிகளில மதுபானசாலைகள், விடுதிகள் போன்றவற்றில் வழங்கப்படும் பானங்களில் போதைப்

24 ஆம் பக்கம் பார்க்க..

### — மூன்று புலிகள் கொல்லப்பட்டதால் —

# இராணுவ பிரசன்னம் வடக்கில் அவசியமே!

## கூறுகிறது அரச தரப்பு

**கோபி உள்ளிட்ட மூன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்கள் கொல்லப்பட்டதன் மூலம் வடக்கில் இராணுவப் பிரசன்னம் நியாயமானது என்பது நிருபணமாகியுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.**

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மனித உரிமைகளுக்கான விசேட பிரதிநிதி மஹிந்த சமரசிங்க, கண்டி அஸ்கிரி,மல்வத்து பீடாதிபதிகளை நேற்றுச் சந்தித்த போது இதனைத் தெரிவித்துள்ளார்.

வவுனியா நெடுங்கேணி பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் கோபி உள்ளிட்ட மூன்று உறுப்பினர்களும் ஒரு இராணுவ புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தரும் கொல்லப்பட்டனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கில் இராணுவத்தின் பிரசன்னம் குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் கேள்வி எழுப்பப்பட்டதாகவும் நெடுங்கேணி சம்பவம் இதற்கான பதிலை அளித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மேற்குலக நாடுகள் இராணுவ பிரசன்னத்தை குறைக்குமாறு கோரிவந்த போதிலும் இறைமையுடைய நாடு என்ற ரீதியில் இலங்கை அந்த கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை.

எனினும் அரசாங்கத்தின் இந்த தீர்மானம் நியாயமானது என்பதனை சர்வதேச சமூகத்திற்கு இந்த சம்பவம் உணர்த்தியிருக்கும்.

அத்துடன் இலங்கை அரசு ஒருபோதும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் நிறைவேறப்பட்ட தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. அதனை அமுல்படுத்தவும் போவதில்லை எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் உள்ளக பொறிமுறைமை

24 ஆம் பக்கம் பார்க்க..

## மூவர் சுட்டுக்கொலை சோடிக்கப்பட்ட நாடகம்

### விசாரணை கோருகிறது கூட்டமைப்பு

புலிகள் மீளிணைகிறார்கள் எனச் சொல்லப்பட்ட தகவல். அதன் பின்னணியில் மூன்று தமிழ் இளைஞர்கள் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்கள் ஆகியன தொடர்பில் அரசும் இராணுவமும் கூறும் கதைகளில் எமக்கு எள்ளளவும் நம்பிக்கை இல்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. எனவே இந்தப் படுகொலைச் சம்பவங்கள் குறித்து சர்வதேச. சுயாதீன விசாரணை ஒன்று நடத்தப்பட்டு உண்மை கண்டறியப்பட வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளருமான மாவை சேனாதிராஜா வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை அரசு இந்த விடயங்கள் தொடர்பில் நீதியான விசாரணை ஒன்றை நடத்தும் என்பதிலும் எமக்கு நம்பிக்கை இல்லை. எனவே சர்வதேச தலையீட்டில் இந்த

23 ஆம் பக்கம் பார்க்க..

## கொல்லப்பட்ட தேவியன் புலிகளின் விமானி?



இராணுவத்துடன் வவுனியா, நெடுங்கேணியில் இடம்பெற்ற மோதலில் சுட்டுக் கொல்லப்பட்ட

தேவியன், தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் ராதா படையணியின் முக்கிய விமானி என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

விடுதலைப் புலிகளின் இரண்டு விமானங்கள் இலங்கை இராணுவ நிலைகள் மீது தாக்குதல் நடத்திய போது அதை செலுத்தியவர்களில் ஒருவர்தான் தேவியன் என்று கூறப்படுகிறது.

குறிப்பாக விடுதலைப்புலிகளால் பேரழிவுக்குட்படுத்தப்பட்ட அனுராதபுரம விமானப் படை தளம் மீதும் கொலன்னாவை

23 ஆம் பக்கம் பார்க்க..

## மூவரின் சடலங்களும் அடக்கம் செய்யப்பட்டன

அநுராதபுரம் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டிருந்த கோபி. அப்பன். தேவியன் ஆகிய மூன்று பேருடைய சடலங்களும் அரச செலவில் அநுராதபுரம் விஜயபுர பொது மயானத்தில் நேற்றுச் சனிக்கிழமை அடக்கம் செய்யபபட்டதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்திருக்கின்றார்.

இந்த மூவரும் பதவியா பகுதிக்கு உட்பட்ட காட்டுப்பகுதியில் உயிரிழந்ததையடுத்து. இந்தச் சடலங்கள் மீதான மரண விசாரணையை கெப்பிட்டிகொல்லாவ நீதவான் நடத்தினார் என்றும் அவருடைய உத்தரவுக்கமைய அநுராதபுரம் சட்ட வைத்திய அதிகாரி மருத்துவ பரிசோதனைகளை மேற்கொண்டிருந்தார் என்றும் பொலிஸ் பேச்சாளர் கூறினார்.

நீதவானுடைய உத்தரவுக்கமைய இந்தச் சடலங்கள் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்ட போதிலும், இறந்தவர்களை அவர்களின் உறவினர்கள் அடையாளம் காட்டுவதற்கும் இறுதிக்கிரியைகளில் அவர்கள் பங்குபற்றுவதற்கும் அவரவர் கலாசாரத்திற்கமைவாக கிரியைகளை மேற்கொள்வதற்கும் வசதிகள் செய்யப்பட்டிருந்ததாகவும் பொலிஸ் பேச்சாளர்

23 ஆம் பக்கம் பார்க்க..

## வடக்கு மாகாணம் முழுவதும் இராணுவ சோதனை மும்முரம்

யாழ்.மாவட்டம் உட்பட வடக்கு மாகாணத்தில் இராணுவத்தினரின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரித்து வரும் அதேவேளை பொலிஸாரும் இராணுவத்தினருடன் இணைந்து ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

தென்பகுதியில் இருந்து வடக்கு நோக்கி செல்லும் பயணிகளை சோதனை செய்யும் நடவடிக்கையினை ஓமந்தை சோதனைச் சாவடியில் படையினர் மீண்டும் ஆரம்பித்துள்ளனர்.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் மற்றும் வன்னிக்கு செல்லும் மக்களை ஆள்அடையாள அட்டையினை சோதனை செய்து அவர்களின் விபரங்களை திரட்டும் நடவடிக்கையில் படையினர் ஈடுபட்டுள்ளார்கள்.

இதேவேளை பேருந்துகளில் செல்லும் பயணிகளை ஓமந்தையில சோதனைச்சாவடியில் இறக்கி அவர்களை அடையாளப்படுத்தி சோதனை செய்யும் நடவடிக்கையினைப் படையினர் தீவிரப்படுத்தியுள்ளார்கள்.

அத்துடன் ஏ-9 வீதியின் இருமருங்கிலும் அதிகளவான படையினர் குவிக்கப்பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலான ஆனையிறவு. பளை போன்ற பகுதிகளில் பொலிஸாருடன் படையினரும் இணைந்து சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

வடக்கு மாகாண சபைத் தேர்தலை முன்னிட்டு ஓமந்தை சோதனைச் சாவடியில் இராணுவத்தினரின் சோதனை நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தன.

23 ஆம் பக்கம் பார்க்க..

WORLD
இலங்கையில் முதன் முறையாக மூன்று வருட உத்திரவாதத்துடன் கூடிய
HP,SAMSUNG, LENOVO, ASUS
கணினிகள் இப்பொழுது எம்மிடமிருந்து!
2013ம் ஆண்டு O/L எடுத்த மாணவர்களுக்கு 10% விலைக் கழிவு
- வட்டி இன்றிய கொடுப்பனவு
- விசேட விலைக் கழிவுகள்
- 3வருட உத்திரவாதம்
இல-106,கே.கே.எஸ் வீதி,யாழ்ப்பாணம் 021-2219291
இல-125,கே.கே.எஸ் வீதி,சுன்னாகம் 021-2242335
இல-17/3,கண்டி வீதி,கிளிநொச்சி 021-2283755
(C-7001)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

QA TECHNIC

A

wish
Wickramarachchi Institute of Speech & Hearing

Cochlear™

அன்பார்ந்த வாடிக்கையாளர்களே உங்கள் அனைவருக்கும் சித்திரை புது வருட நல்வாழ்த்துக்கள்

**J.M.WICKramarachchi & Co** இல் சித்திரை புதுவருட தினத்தை முன்னிட்டு மூக்குக் கண்ணாடிகளுக்கான விசேட விலைக்கழிவு 50% வரை வழங்கப்படும். மற்றும் கண் மற்றும் காது பரிசோதனைகளும் இம்மாத முழுவதும் இலவசமாக வழங்கப்படும்.

மற்றும் 40 வயது தொடக்கம் 50 வயது வரை உடையவர்களுக்கான வாசிப்பதற்குரிய மூக்குக் கண்ணாடிகளும் 16-ம் திகதி தொடக்கம் 17-ம் திகதிவரை இலவசமாக வழங்கப்படும்.

நன்றி

**ஜெ.எம்.விக்கிரமாராச்சி அன்ட் கம்பனி**

இல.229, 231 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தொ.இல:- 021 2219 288, 0777511260

(சி-7013)



# கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்ட "A" தரமான பிறிமா புறோயிலர் குஞ்சுகள், சிவப்பு, வெள்ளை, பேட்டுக்குஞ்சுகள் நியாய விலையில் 22/04/2014 செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும். எம்மிடம் கோழிக் குஞ்சு வாங்குபவர்களிடம் புறோயில் கோழி உடன் பணத்துக்கு கொள்வனவு செய்யப்படும்.



**நல்லூர் பாம் சென்டர்**
**19, முருகேசர் ஒழுங்கை,**
**நல்லூர் யாழ்.**

**சுட்டி பாம் சென்டர்**
**வட்டுக்கோட்டை.**

(6134)



## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து

Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER

(C-7003)



வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532


# மது போதையில் வாகனம் செலுத்திய 379 பேர் கைது

(கொழும்பு)

மதுபோதையில் வாகனங்களை செலுத்துகின்ற சாரதிகளை கைது செய்வதற்கான நடவடிக்கையில் நேற்றுக்காலை 6 மணி வரையிலும் 379 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த விஷேட வேலைத்திட்டம் 10 ஆம் திகதி மாலை 6 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது என்றும் அத்திணைக்களம் அறிவித்துள்ளது. (செ-6)


# விற்பனைக்கு

| | |
|---|---|
| Trible Bed | - 1 |
| Single Bed | - 1 |
| Dinning table | - 1 |
| Teachers Table | - 2 |
| Small table | - 1 |
| Tuition Desk | - 1 set |
| Wood Screen | - 1 |
| Wood Easy chair | - 1 |
| Wood Book Stand | - 1 |

Contact :
077 523 0931
021 221 2221

(சி-709)



## வீடு வாடகைக்கு

யாழ்.பிறவுண் வீதியில் வீடு வாடகைக்கு உண்டு.

(6084)

தொடர்பு: 0716274916



# இம்முறை புத்தாண்டுப் பண்டிகையை DHL துணையுடன் குதூகலத்துடன் கொண்டாடுவோம்

இம்முறை புத்தாண்டு பண்டிகைக் காலத்தில் வெளிநாடுகளிலுள்ள உங்களது அன்பிற்குரியவர்களுக்கு பரிசுகளை அனுப்பிவைப்பதற்கு DHL வழங்கும் சலுகையை தவறவிடாதீர்கள்.

ஏப்ரல் மாதம் 1 ஆம் திகதி முதல் மே மாதம் 15 ஆம் திகதி வரை கிடைக்கின்ற இந்த புத்தாண்டுச் சலுகையை தவறவிடாமல் உபயோகித்து பயனடையுங்கள்.

விரையுங்கள்!

இம்முறை புத்தாண்டை எம்முடன் இணைந்து இன்னும் சிறப்பாகக் கொண்டாடுங்கள்.

வாடிக்கையாளர் தொடர்பு இலக்கம்
0772211356, 0214923528




**இல: 94.K.K.S வீதி யாழ்ப்பாணம்.**

(பிரதம தபாலகம் அருகாமை) (631)

EXCELLENCE SIMPLY DELIVERED DHL



# நாளை தேர் உலா வரும் யாழ். அத்தியடிப் பிள்ளையார்

திருக்காட்சி காணவாரீர்!



**வசந்த மண்டப பூசை காலை 8.15**
**எம்பெருமான் தேருக்கு எழுந்தருளல் 9.00**
**தேர்ப் பவனி ஆரம்பம் 9.30**

புத்தாண்டு சிறப்பு தீபாராதனை காலை 6.11

–கோயில் நிர்வாகம்–


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகாமைத்துவ உதவியாளர் தரம் III பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் வகுப்பு III (தொழில்நுட்பம் சார்-வகுதி 3) சேவைத் தரத்திலான செய்து காட்டுநர் பதவிக்காக திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு செய்வதற்காக மரவேலை நிபுணத்துவம் (வெற்றிடங்கள்-15), உலோக வேலை நிபுணத்துவம் (வெற்றிடங்கள் -15), மோட்டார் இயந்திர நிபுணத்துவம் (வெற்றிடங்கள்-15), மின்னியல் நிபுணத்துவம் (வெற்றிடம்-13), கட்டட நிர்மாண நிபுணத்துவம் (வெற்றிடங்கள்-15) ஆகிய துறைகளில் உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கல்வித் தகைமைகளாக க.பொ.த (சா/த) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ ஆங்கிலமொழி/ கணிதம் மற்றும் மேலும் இரண்டு பாடங்கள் உள்ளடங்கலாக நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் 6 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் மூலம் பதவிக்குப் பொருத்தமான துறையில் தேசிய தொழில் தகைமை (NVQ) 5ஆம் மற்றும் 4ஆம் மட்டத்தின் பாடநெறி ஒன்றை பூர்த்தி செய்து சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

திறந்த ஆட்சேர்ப்பு பரீட்சைக்கான வயதெல்லை 18 வயது முதல் 30 வயது வரையும் மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு பரீட்சைக்கான வயதெல்லையாக விண்ணப்பதாரி 25 வயதிற்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை பணிப்பாளர் நாயகம், தொழில் நுட்ப பயிற்சித் திணைக்களம், த.பெ. இல.557, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரிக்கு எதிர்வரும் மேமாதம் 12ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

மேலதிக விபரங்களை இம்மாதம் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை வெளியான வர்த்தமானியிலோ வலம்புரி அலுவலகத்திலோ பார்வையிடலாம். (அ)

## முதலாவது வினைத்திறமை தடைகாண் பரீட்சை

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளிவிபர உத்தியோகத்தர் தரம் I மற்றும் II பதவிக்கான அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு முறை ஏற்பாடுகளின் பிரகாரம் முதலாவது வினைத்திறமை தடைகாண் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எதிர்வரும் ஜூலை மாதத்தில் நடைபெறும் இப் பரீட்சைக்கு அரச சேவை ஆணைக்குழுவின் கீழ் நியமிக்கப்பட்ட இயைபுடைய உத்தியோகத்தர்கள் மட்டும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பங்களை எதிர்வரும் மே மாதம் 12 ஆம் திகதிக்கு முன்னர், பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், அமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் பிரிவு, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். (அ)

## பரீட்சை தரவுகள் உதவியாளர் பதவிக்கு விண்ணப்பிக்குக

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் முகாமை உதவியாளர் தொழில்நுட்ப முறைசாரா தொகுதி 2 சேவைப் பிரிவின் பரீட்சைத் தரவுகள் உதவியாளர் தரம் III பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யும் திறந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கல்வித்தகைமைகள் : ஒரே அமர்வில் க.பொ.த.(சா/த) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் உட்பட்ட மேலும் இரண்டு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் மற்றும் க.பொ.த.(உ/த) பரீட்சையில் பொதுப்பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்த்து ஒரு பாடத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரி 18 வயது முதல் 30 வயதுக்கு இடைப்பட்டவராக வேண்டும். விண்ணப்பங்களை எதிர்வரும் மே மாதம் 9 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த.பெ. இல.1503, கொழும்பு என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும் (அ)

# தொழில் முயற்சியாளருக்கு திறன்விருத்தி பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

பெண் தொழில் முயற்சியாளருக்கான தொழில் முயற்சியாண்மை திறன் விருத்தி பயிற்சி நெறியானது யாழ். மாவட்ட இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதி தொடக்கம் 9 ஆம் திகதி வரை யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நடத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.கைத்தொழில் அபிவிருத்தி சபை பிரதிப் பணிப்பாளர் சி.சிவகொங்காதரன் அறிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் பெண் தலைமைத்துவமுடையோர், வறுமைக்கோட்டின் கீழ் வாழ்பவர் மற்றும் இடர்பாடுகளால் பாதிக்கப்பட்ட, தொழில் முயற்சியை ஆரம்பிக்க விருப்பமுள்ள பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மேலும் இப்பயிற்சிநெறியின் பின்னர் இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் தொழில் முயற்சியை ஆரம்பிப்பதற்கான மேலதிக உதவிகளும் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பயிற்சிநெறியில் கலந்து கொள்ள விரும்பும் பெண் தொழில் முயற்சியாளர்கள் இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை கட்டடம், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரியுடன் எதிர்வரும் 25 ஆம்திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறும், மேலதிக விபரங்களை 021-222-2421 என்ற தொலைபேசி மூலம் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# தேசிய பாடசாலைகளில் அதிபர் பதவி வெற்றிடம்

வடமாகாணம், மன்னார் மாவட்டத்தில் ம/புனித சேவியர் ஆண்கள் கல்லூரி, ம/புனித சேவியர் மகளிர் கல்லூரி மற்றும் வவுனியா இறம்பைக்குளம் தேசிய பாடசாலை ஆகிய பாடசாலைகளில் அதிபர் பதவிக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி கல்வி நிர்வாக சேவையின் I,II,III ஆம்வகுப்பு அல்லது அதிபர்சேவையின் I ஆம் வகுப்பின் உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும். அல்லது தேசிய பாடசாலைக்கு நிரந்தர நியமனம் பெற்ற அதிபராயின் நிரந்தர நியமனம் பெற்று மூன்று வருடங்களைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பம் கோரும் இறுதித் தினமன்று 57 வயதிற்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், கல்வி அமைச்சு, இசுறுபாய, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும்.

மேலதிக விபரங்களை வலம்புரி காரியாலயத்தில் பார்வையிடலாம். (அ)

# பொலிஸ் கொஸ்தாபல் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் பொலிஸ் திணைக்களத்தில் பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கல்வித்தகைமைகள் க.பொ.த.(சா/த) பரீட்சையில் கணிதம் மற்றும் ஊடக மொழி உட்பட இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது 6பொடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும். முதல் தடவையில் 5 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். விண்ணப்பதாரி 18 வயது முதல் 28 வயது வரை இருத்தல் வேண்டும்.

உடற் தகைமைகளாக உயரம் 5அடி 2அங்குலம் (ஆகக்குறைந்தது) சிறந்த விளையாட்டுத்திறமையுடைய தேசிய மட்டத்தில் விளையாட்டுப்போட்டிகளில் திறமை காட்டியுள்ள அல்லது சர்வதேசப்போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரி ஒருவரின் உடற்தகைமைகள் சற்று குறைவாக இருப்பின் அவர் பிற தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ்மா அதிபரின் தற்துணிவின் படி தகைமை பெறுவர்.

விண்ணப்பங்களை எதிர்வரும் ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்குமுன்னர் பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு) பயிலுநர் ஆட்சேர்ப்பு அலுவலகம் இல. 375, 1ஆம் [illegible] மாவத்தை, கொழும்பு 06 என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். (அ)

## இராசி பலன்

13.04.2014

(பங்குனி 30, ஞாயிற்றுக்கிழமை )

சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
திரயோதசி பிற்பகல் 1.01 மணிவரை
உத்தரம் முன்னிரவு 10.04 மணிவரை
இராகுகாலம் 4.36-6.06 மணிவரை
சுபநேரம் 9.06-10.36 மணிவரை

**மேடம்** கலகலப்பான தகவல்கள் காலை நேரத்திலேயே வந்து சேரலாம், மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள், தேகநலன் கருதி எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் கிடைக்கும்.

**இடபம்** பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், கனவுகள் நனவாக கண்ணனை வழிபட வேண்டிய நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்** யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கலாம், ஆலய வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், பிரபலமானவர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம்.

**கடகம்** புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், ஆடம்பரப் பொருட்கள் வாங்குவதில் பிரியம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, உறவினர்களின் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**சிங்கம்** புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், நாவன்மையால் நல்லபெயர் எடுப்பீர்கள், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும்.

**கன்னி** ஆன்மீக சிந்தனை மேலோங்கும், விரும்பிய உணவுகளை சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**துலாம்** வரவைக் காட்டிலும் செலவு கூடினாலும் அதற்காக கவலைப்பட மாட்டீர்கள், புகழ் மிக்கவர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், சுபகாரிய அலைச்சல்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்** வருமானம் திருப்திதரும்,குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் ஏற்படலாம், புதிய பொருட்சேர்க்கையுண்டு, பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயர்வடையும்.

**தனுசு** புதிய திட்டங்கள் கைகூடும், குடும்ப ஒற்றுமை மேலோங்கும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரும் நாள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள்,

**மகரம்** அரைகுறையாக இருந்த பணிகளை ஒவ்வொன்றாக செய்து முடிப்பீர்கள், தேவையற்ற அச்சங்கள் உருவாகும், பயணங்களால் பலனுண்டு, உடல் உழைப்பில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கும்பம்** கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் இழுத்தடிக்கப்படலாம், சிலர் கௌரவக் குறைவாக நடந்து கொள்ளலாம், போசன சுகமுண்டு.

**மீனம்** தெய்வீக சிந்தனை மேலோங்கும், உறவினர் வழியில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறலாம், கௌரவமான நாள்.

வளவன்

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 80 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 90 | 100 |
| தக்காளி | 40 | 40 | 30 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 | 40 |
| கோவா | 40 | 20 | 35 | 40 |
| கரட் | 100 | 80 | 80 | 120 |
| பூசணி | 30 | 30 | 35 | 40 |
| புடோல் | 60 | 50 | 40 | 50 |
| வாழைக்காய் | 30 | 30 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 100 | 80 | 80-90 | 80 |
| பெரிய வெங்காயம் | 70 | 60 | 70 | 80 |
| பாகற்காய் | 200 | 120 | 90 | 100 |
| வெண்டிக்காய் | 70 | 60 | 50 | 60 |
| கருணைக் கிழங்கு | 50 | 50 | 40 | 60 |
| பயற்றங்காய் | 120 | 100 | 70 | 80 |
| லீக்ஸ் | 80 | 80 | 80 | 100 |
| பீற்றூட் | 40 | 50 | 50 | 60 |
| கறிமிளகாய் | 70 | 70 | 90 | 100 |
| முருங்கைக்காய் | 100 | 150 | 150 | 200 |
| போஞ்சி | 200 | 160 | 90 | 140 |
| கத்தரிதம்புள்ள | 60 | 70 | 60 | 80 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 80 | 100 | 100 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 40 | 40 | 35-40 |
| இராசவள்ளி | 80 | 80 | 100 | 80 |

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கடல்நீரை நன்னீராக மாற்றி விநியோகிக்க நடவடிக்கை

(மானிப்பாய்)

நெடுந்தீவில் கடல் நீரினை நன்னீராக மாற்றி குடிநீராக பயன்படுத்தவுள்ளதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் சமூகவியலாளர் திருமதி.பாலகுமாரி ஐங்கரன் தெரிவித்துள்ளார்.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபையில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சமூகமயப்படுத்தப்பட்ட கிராமிய நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டத்தின் கீழ் இந்த நன்னீர் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.


இதற்கமைய, நெடுந்தீவில் தலா 50 மீற்றர் கியூப் நீரினை உற்பத்தி செய்யக்கூடிய இரண்டு இயந்திரங்கள் பொருத்தப்பட்டு இந்த திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

இது மூன்று மாதகாலப்பகுதியில் சாத்தியமாகும் எனவும் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து நெடுந்தீவுக்கு குடிநீர் கொண்டு செல்லும் செலவினைப் பாக்கிலும் கடல் நீரினை நன்னீராக மாற்றும் செலவு குறைவானது.


ஆனால், இந்த திட்டத்தினை யாழ் மாவட்டம் முழுவதும் செயற்படுத்தமுடியாது ஏனெனில் இதன் செலவு மிகவும் அதிகமாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(அ-6-23)



நன்றி: ஐலண்ட்

# மாணவர்களின் தொலைபேசியை பெற்றோரே கண்காணியுங்கள் பொலிஸார் அறிவுறுத்து



(சாவகச்சேரி)

பாடசாலை மாணவர்களுக்கு கைத்தொலைபேசி வாங்கிக் கொடுக்கவேண்டாமெனவும் அவ்வாறு வாங்கிக்கொடுத்தால் அவர்களின் தொலைபேசிகளை கண்காணிக்குமாறும் கொடிகாமம் பொலிஸ் அதிகாரி தென்னக்கோன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொடிகாமம் பொலிஸ் நிலையத்திற்குட்பட்டவர்களுக்கான சிவில் பாதுகாப்பு ஆரம்பக் கூட்டம் கடந்த வியாழக்கிழமை ஜே/326 கிராம சேவையாளர் அலுவலகத்தில் கொடிகாமம் பொலிஸ் அதிகாரி எதிரிசிங்க தலைமையில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

பாடசாலை மாணவர்களுக்கு கைத்தொலைபேசி வாங்கிக்கொடுக்க தடைசெய்யப்பட்டுள்ளது.

அத்துடன் சட்டவிரோத செயல்களில் ஈடுபடுவோர் விபரங்களை எமக்குத் தெரியப்படுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்டவர்களில் 25பேர் சிவில் பாதுகாப்பு உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் கொடிகாமம் வர்த்தகர்களின் உதவியுடன் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (2-29)

# வடமராட்சி கிழக்கு மணல் அகழ்வு தொடர்பாக அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சி கிழக்கில் மேற்கொள்ளப்பட்டுவரும் மணல் அகழ்வு தொடர்பாக அப்பிரதேச மக்கள் வடக்கு மாகாண விவசாய, கமநலசேவைகள்,கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சில் பல்வேறு முறைப்பாடுகளைப் பதிவு செய்துள்ளனர்.

இம் முறைப்பாடுகள் தொடர்பாக விரிவான கலந்துரையாடல் ஒன்று மேற்படி துறைகளுக்குப் பொறுப்பான அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் எதிர்வரும் 16 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இல. 295, கண்டி வீதி, அரியாலையில் அமைந்துள்ள மாகாண விவசாய அமைச்சின் அலுவலகத்தில் நடைபெறவுள்ள இக் கலந்துரையாடலில் வடமராட்சி கிழக்கில் மண் அகழ்வதற்கு புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப்பணியகத்திடம் அனுமதி பெற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், மணல் ஏற்றி இறக்குவதில்பங்கேற்கும் உழவூர்திகள் மற்றும் பாரவூர்திகள் சங்கங்களின் பிரதிநிதிகள், வடமராட்சி கிழக்கு பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் வர்த்தக சங்கங்களின் பிரதிநிதிகளை இக்கலந்துரையாடலில் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு விவசாய அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-6)




# புத்தாண்டு விழா விசேட அபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு 12 ஆம் வட்டாரம் தல்லயபற்று ஸ்ரீ சங்கரமூர்த்தி முருகமூர்த்தி ஆலய சித்திரைப் புத்தாண்டு விஷேட அபிஷேக பூஜை நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 6.11 மணிக்கு ஆரம்பமாகும்.

பூஜையின் பின்னர் முருகப்பெருமான் வள்ளி, தெய்வானை சமேதராக வீதியுலா வரும் காட்சி நடைபெறும்.

அன்றைய தினம் மதியம் சித்திரா பௌர்ணமி அபிஷேக ஆராதனை மற்றும் சித்திரைக் கஞ்சி விழாவும் நடைபெறவுள்ளது. (அ)

# முற்போக்கு தமிழ்த்தேசியக்கட்சி நேற்றைய தினம் அங்குரார்ப்பணம்

யாழ்.மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் சுந்தர்சிங் விஜயகாந்தினை செயலாளர் நாயகமாக கொண்ட முற்போக்கு தமிழ்த் தேசிய கட்சி என்ற புதிய கட்சி நேற்று யாழ்ப்பாணத்தல் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தக்கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பு யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் ஹோட்டல் ஒன்றில நேற்று பிற்பகல் இடம்பெற்றது. இதன்போதே முற்போக்கு தமிழ்த்தேசிய கட்சி உருவாக்கப்பட்டுள்ளதாக அக்கட்சியின் செயலாளர் நாயகம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதேவேளை அக்கட்சியின் தலைவராக ஆசிரியர் செல்லன் உதயகுமார் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தச்சந்திப்பில் அக்கட்சியின் செயலாளர் விஜயகாந்த் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த்தேசிய இனத்தின் வரலாற்றில் அதிமுக்கியத்துவமான காலகட்டத்தில் நாம் இருக்கின்றோம். தமிழ் மொழிக்கு ஆட்சி மொழி அந்தஸ்து தேவை. கோரிக்கைகள் மேலெழும்பிய காலகட்டத்தில் குறித்த அந்த பிரச்சினையை சரியான திசையில் கொண்டு செல்லத்தவறிய எமது அரசியல் தலைவர்களால் தமிழர்கள் அகதிகளாக்கப்பட்டு, இந்தச் சின்னஞ்சிறு தீவில் கூட்டுக்கிளிகள் போன்ற அழகிய வாழ்வு தொலைக்கப்பட்டு கூடிழந்த குருவியாக எமது தமிழினம் இன்று உலகமெல்லாம் சிதறுகின்றது.

தமிழனுக்கு மட்டும் ஏன் இந்த விதி, பிறந்த ஒரு நாடு, பிழைக்க ஒரு நாடு, என்று விதியின் கொடிய கரங்களில் அகப்பட்டு இழுபட்டுச்செனறு கொண்டிருக்கின்றார்கள். எமது தமிழ் இளைஞர்கள், கொடிய யுத்தத்தில் விதவைகளாககப்பட்டோர், அநாதைகளாக்கப்பட்டோர், தமிழ் பெண்களின் வாழ்வு, அவர்களின் இளமை இவற்றுக்கெல்லாம் விடைதான் என்ன என்ற கேள்வி இன்று எம்முன்னே எழுகிறது. போரால் பாதிக்கப்பட்ட இலட்சக்கணககான மக்களுக்கு மறுவாழ்வு யார் கொடுப்பார்கள், இலங்கைத் தமிழ் மக்களின் எதிர்கால முடிவு என்ன?

இந்தக்கேள்விகளுக்கு விடையாகத்தான், எமது மக்களை மீட்டெடுக்கத்தான், மறு வாழ்வு கொடுக்கத்தான் முற்போக்கு தமிழ்த் தேசிய கட்சி என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது.

இரத்தம் சிந்தும் அரசியல் என்றால் யுத்தம், இரத்தம் சிந்தாத யுத்தம் என்றால் அது அரசியல் என்ற உள்ளார்ந்த கோட்பாட்டின அடிப்படையில் எமது அரசியல் இயக்கமானது எழுச்சிபெறும் மகிழ்ச்சி என்ற அளவுகோலை வைத்து மக்களின் வாழ்வை நாம் அளந்து பார்க்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அக்கட்சியின் பிரதித்தலைவர்கள்,பொருளாளர், நிர்வாக செயலாளர், ஊடகப்பேச்சாளர், தேசிய அமைப்பாளர், சர்வதேச இணைப்பாளர், இளைஞர் பேரவைத்தலைவர், மகளிர் பேரவைத் தலைவர் என அக்கட்சியின் உறுப்பினர்கள் பங்கு கொண்டிருந்தனர் (அ-6)

# இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பொற்பதி இந்து விளையாட்டுக்கழகம் 10 ஆவது ஆண்டாக இரத்ததான நிகழ்வு நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பொற்பதி அறிவாலயம், பொற்பதி வீதி, கொக்குவில் எனும் முகவரியில் நடத்தவுள்ளது.

அன்றைய தினம் குருதிக்கொடையாளர்களை ஊக்குவிக்குமுகமாக பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளன. (அ)

# தேடப்பட்டு வந்த நபர் பொலிஸாரிடம் சரண்

(கரணவாய்)

நெல்லியடி துன்னாலை பகுதியில் இளம் யுவதி ஒருவரை வன்புணர்வுக்கு உட்படுத்தியதாக பொலிஸாரால் தேடப்பட்டு வந்த துன்னாலை குடவத்தை பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சட்டத்தரணி ஊடாக பருத்தித்துறை நீதிமன்றத்தில் சரணடைந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

18 வயதுநிரம்பிய இளம் யுவதி ஒருவரை கடத்திச்சென்று இருவர் வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த 7 ஆம் திகதி நெல்லியடி துன்னாலைப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இவ்வன்புணர்வில் பிரதான சந்தேக நபர் ஏற்கனவே நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நெல்லியடி பொலிஸ் பிரிவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் இரண்டாவது சந்தேக நபர் இவ்வாறு சரணடைந்துள்ளார்.

இச் சந்தேக நபர் இருவரையும் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நேற்று முன்தினம் உத்தரவிட்டார். (அ-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மக்களுக்கு சமாதானம் கிடைக்கட்டும்!


## அமெ.இராஜாங்க செயலர் வாழ்த்து

(கொழும்பு)

இலங்கையில் உள்ள அனைத்தின மக்களுக்கும் நீதியும், மறுசீரமைப்பும், சமாதானமும் மலர்ந்துள்ள புத்தாண்டில் கிடைக்க வேண்டும் என்று, அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஜோன் கெரி தெரிவித்துள்ளார்.

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்து அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் ஜனநாயகம் மேலோங்கிய நாட்டை கட்டியெழுப்ப அமெரிக்கா தொடர்ந்து ஒத்துழைக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா சார்பிலும், அமெரிக்க மக்கள் சார்பிலும், அனைத்து இலங்கை மக்களுக்கும், புலம் பெயர்ந்து வாழ்கின்ற இலங்கையர்களுக்கும் அவர் வாழ்த்துக்களைத் தெரிவித்துள் ளார். (அ)

# பொதுபல சேனா அமைப்புக்கு முஸ்லிம் காங்கிரஸ் கண்டனம்

(கொழும்பு)

பொதுபல சேனா அமைப்பின் நடவடிக்கைகளுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜாதிக பல சேனா என்ற அமை ப்பினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பிற்கு பொது பல சேனா அமைப்பு இடையூறு ஏற் படுத்தியது.

பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலபொடத்தே ஞானசார தேரர், பகிரங்கமாக பௌத்த பிக்களுக்கும், முஸ்லிம் மதகுருமாருக்கும் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

எனினும், இந்த நடவடிக்கைகள் தொடர்பில் கொம்பனித்தெரு பொலிஸார் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

தொலைக்காட்சி ஊடகங்களில் ஒளிபரப்பான காட்சிகள் இதற்கு சான்று பகர்கின்றன.

நாட்டின் சட்ட திட்டங்களுக்கு அமைவான வழி களில் தங்களது எதிர்ப்புக்களை எந்த தரப்பினரும் வெளியிடுவதில் தவறி ல்லை என்ற போதிலும், சட்டத்தை கையில் எடுப்பதற்கு அனுமதியளிக்க முடியாது.

அரசியல் உரிமைகள் மற்றும் சிவில் சுதந்திரத்தை உறுதி செய்யக் கூடிய ஓர் கட்டமைப்பைக் கொண்ட ஆட்சி முறைமை யொன்று அவசியமாகின்றது.

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கும் பொறிமுறைமையின் மூலமே இந்தப் பிரச்சினைகளுக்கு காத்திரமான தீர்வு வழங்கப்பட முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(அ)

# சர்வதேச விசாரணை இலங்கைக்கு பாதகமான விளைவை ஏற்படுத்தும்

## முன்னாள் இராஜதந்திரி தயான்

(கொழும்பு)

சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட்டால் இலங்கைக்கு பாதக விளைவுகள் ஏற்படக் கூடுமென முன்னாள் இராஜதந்திரி தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள் ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள் மனிதவுரி மைப் பேரவையினால் இலங்கைக்கு எதிராக விசாரணை நடத்தப்பட்டால், சர்வதேச நீதிமன்றில் வழக்குத் தொடரப்படக் கூடிய அபாயம் காணப்படுகிறது.

சர்வதேச விசாரணைகளுக்கு இலங்கை உரிய முறையில் ஒத்து ழைப்பு வழங்காவிட்டால், வேறு வழிகளில் இலங்கை மீது மேற் குலக நாடுகள் அழுத்தங்களை பிரயோகிக்கக கூடும்.

ஐக்கிய நாடுகள் மனிதவுரி மைப் பேரவையின் தீர்மானத்தின் அடிப்படையிலான விசாரணைகளுக்கு இலங்கை ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பது தமது நிலைப்பாடு கிடையாது.

விசாரைணகளின் மூலம் பாதி ப்புக்கள் ஏற்படக் கூடிய சாத்திய ங்கள் அதிகளவில் காணப்படு கின்றது. இலங்கை விவகாரம் தொடர்பில் சர்வ தேச குற்றவியல் நீதிமன்றில் விசாரணை நடத்தப்பட முடியும் என அவர் சுட்டிக்காட்டி யுள்ளார். (அ)

# வடக்கு மாகாண செயற்குழுக்கள் செயற்பட ஆரம்பித்துள்ளன

## அவைத் தலைவர் சீ.வீ.கே.தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையினால் நியமிக்கப்பட்ட செயற்குழுக்கள் தற்பொழுது செயற்பட ஆரம்பித்துள்ளதாக வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

சபை நடவடிக்கைகளுக்கான குழுக் கூட்டம் கடந்த மார்ச் மாதம் 17 ஆம் திகதி முதல் செயற்படத் தொடங்கியுள்ளது.

இதனையடுத்து பொதுமக்கள் முறைப்பாட்டுக் குழு கடந்த 9 ஆம் திகதி கூடியது. இச்செயற்குழு தமது நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்ந்ததுடன் பொதுமக்களுக்கு இதனை எவ்வாறு வெளி ப்படுத்துவது, தீர்மானங்கள் எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது தொடர்பில் ஆராய்ந்துள்ளது.

இதனையடுத்து அமைச்சு மட்டத்திலான குழுக்களில் கல்வி பண்பாட்லுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வடக்கு மாகாண சபை பேரவைச் செயலகத்தில் அமைந்துள்ள குழுக்கூட்ட மண்டபத்தில் அமைச்சர் த. குருகுலராசா தலைமையில் நடைபெற்றது.

இதன்போது இக்குழுவின் எதிர்கால நடவடிக்கைகள் மற்றும் அமைச்சின் கீழ் வரும் துறைகள் கலந்துரையாடப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டன.

இம்முடிவுகளை நிர்வாக ரீதியாக அமைச்சின் திணைக்களங்கள் மூலமாகவும் கொள்கை தொடர்பான விடயங்கள் அமைச்சின் வாரிய தீர்மானங்கள் மூலமும் வடக்கு மாகாண சபையின் தீர்மானங்கள் மூலமும் முன்னெடுக்கப்படுமென தீர்மானிக்கப் பட்டது என அவர் தெரிவித்துள்ளார்.

(அ)

கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 1<br>கி.பா: 28<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: HNDA, CAB - II / அறிக்கை நிரல்படுத்துனர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: B/1269 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 6 சூரி செவ் 3 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BSc<br>தொ.இ: G/1832 |
| பிறப்பு: 1981 கிறிஸ்தவம்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: A/L, National Diploma in Business and Finance / Bank Marketing Asst.<br>தொ.இ: B/1270 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 4<br>கி.பா: 28.25<br>உயரம்: 4'3"<br>தகைமை/தொழில்: A/L / முகாமைத்துவ உதவியாளர்<br>தொ.இ: G/1834 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 77.75 செவ் 8 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: BBA / வங்கி உத்தியோகத்தர்<br>தொ.இ: B/1271 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 1<br>கி.பா: 36 செவ் 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/1837 |
| பிறப்பு: 1971 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 18 .75<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L / தனியார் வேலை (UK - PR)<br>தொ.இ: B/1275 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 2<br>கி.பா: 17 .75 செவ் 4 ல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: O/L (பிரான்ஸ் - Not PR)<br>தொ.இ: G/1840 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி இரணைமடு கனகாம்பிகை அம்மன் பெருங்கோயில் இரதோற்



### வாழ்த்துச்செய்தி

கிளிநொச்சி மாவட்டத்தின் எழிலுக்கும் செழி ப்புக்கும் காரணமாய் இருக்கின்ற கனகராயன் ஆற்றினை மறித்து கட்டப் பட்ட இரணைம டுக்குளம் என்றால் மிகையாகாது. இக்குள த்தின் வடகிழக்கு மூலையில் குளம்பார்க்க வீற்றிருந்து இர ணைமடுக் குளத்தினையும் அதன்நீர்பாயும் மருத நிலைக ளையும் காப்பவள் கனகாம்பிகை அம்பாள் என்றால் யாராலும் மறுக்கமுடி யாது. இக்குளம் கோவிலும் அமைப்பதற்கு நீர்ப்பாசன திணைக்களம் உருவாக்கப்பட்டு முதன்முதலில் கட்டப்பட்ட குளம் இரணைமடு. அதேபோல் கனகாம்பிகை அம்பாள் பெருங்கோவில் அமைப்பதில் முக்கிய பங்காற்றி யவர்.

நீர்ப்பாசன திணைக்களத்தில் இரணைமடு களஞ்சிய காப்பாளராக இருந்த செல்லப்பா சுவாமிகளின் சீடரான யோகர் சுவாமிகளின் முன்னைய அரசாங்க அதிபராக இருந்த சிறீகாந்தா அவர்களது வழிகாட்டலில் சென்ற குழுவிற்கு கருடன் வழிகாட்டிற் சென்று இடம்காட்டியது வரலாறு. இவ்வாறு நீர்ப்பாசன திணைக்களத்துடன் இரண்டறக் கலந்த கனகாம்பிகை அம்பாள் எமது தமிழ் வருடப்பிறப்பன்று முத்தேரேறி வலம் வந்து பக்த அடியார்களுக்கு அருளாசி வழங்க இருப்பது முப்பேறும் பெற்று பெருவாழ்வு வாழ்வதற்கு சமன். அவ்வாறான இனிய இந்நாளில் எல்லா உயிர்களும் ஆனந்தமாய் இருக்க வேண்டும் என்று அம்பாளின் ப்ாதார விந்தங்களை வேண்டி நிற்போம்.

எந்திரி சி.விகிர்தன்

உபதலைவர், அறங்காவலர் சபை, அருள்மிகு கனகாம்பிகை அம்பாள் பெருங்கோயில், நீர்ப்பாசன பொறியியலாளர்,நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம், நீர்ப்பாசனத் திணைக்களம், கிளிநொச்சி.



### ஆசிச்செய்தி

*இரணைமடு கனகாம்பிகை அம்மன் பெருங் கோவில் தேர்த்திருவிழா*

இந்த ஆலயம் யாழ்ப்பாணத்து சுவாமி என அழைக்கப்படுகின்ற சிவயோக சுவாமிகளின் சிந்தனைக்கு இணங்க அக்காலத்தில் அரச அதிபர் ஸ்ரீகாந்த ஐயா உதவி அரச அதிபர் தி.முருகேசப்பிள்ளை அவர்களுடைய சிந்தனைக்கு இணங்க உருவாக் கப்பட்டது அற்புதமே. அற்புதத்திற்கு மேல் அற்புதம் சித்தர்களுடைய சிந்தனை க்கு உலக மக்கள் என்றைக்கும் தவறமாட்டார்கள். சகலருடைய உள்ளத்திலும் உருக்குகின்ற அற்புதச் செய்தி 9 ஆம் திருவிழா ஆகிய தேர்த்திருவிழாவிலே கலந்து தேர்வடத்தைப்பிடித்து தங்களு டைய துன்பங்கள் நீக்குவதற்கு அம்பா ளுக்கு அரோகரா என்ற நாமம் பிரதிப லிக்க ஓங்க தேவர்கள் பூமாரி பொழிய திருவருட்காட்சி காண அனைவரும் வருக.

இறைபணி
ஈணேசானந்த மகாதேவ சுவாமிகள்



### வாழ்த்துச்செய்தி

இரணைமடுவில் இன்புற்றிருக்கும் எம் அருமை
கனகாம்பிகைத்தாயே! தேரோடிவந்து உன் மக்களுடன்
எம் மக்கள் குறை தீர்த்திடுவாய்-உன் கடைக்கண்
பார்வையினால்
எங்கள் குறைகள் தீர்த்திடுவாய் கண் இமைபோல் இருந்து
எம்மைக் காத்திடுவாய் கனகாம்பிகைத்தாயே!

திருமதி ஞா.சுப்பிரமணியம்
கிராம அலுவலர்



### இரணைமடு- கனகாம்பிகை அம்மன் அருள் தரணியெங்கும் பொங்கிப் பொலியட்டும்

பசுமையும் நிறைவும் மகிழ்வும் பூக்கும் கிளிநொச்சியின் உயிர்ப்பை தன் மடியின் அருளாகக் கொண்டமைந்த இரணைமடு கனகாம்பிகை அம்மன் கிளிநொச்சி மக்களின் ஆதாரத் தெய்வம். இரணைமடுக்குளத்தின் மேட்டில் குடிகொண்டிருக்கும் கனகாம்பிகையின் அருள் உலா கிளிநொச்சி மாவட்டத்தின் ஊர்கள் தோறும் நிகழ்ந்த காலங்கள் பொலிவானவை. அம்மனின் உலா ஊர்களையும் மக்களையும் அருள்பாலித்துப் புத்தெழுச்சியூட்டி மனமகிழ் வாழ்வைத் தந்தது. நீராடும் தெய்வமாக எழுந்தருளி கிளிநொச்சி விவசாயிகளின் இதயத்தில் நிறைந்த கனகாம்பிகைத்தாய் எல்லோர் வாழ்வையும் நிறைத்த கருணைத்தாய். பச்சை மரகதப் பொன்னென மக்களின் மனங்களில் நிறைந்த கனகாம்பிகை அம்மனின் பொற்பாதங்களை வணங்கி அருள்பெற்றவர்கள் ஆயிரமாயிரம். அடியவரின் மனங்குளிர்ந்து களிப்புற அன்னை அருளிய வாழ்வின் காணிக்கையாக எமது மக்கள் முத்தேரை அமைத்து அம்மனை வீதியுலா, தேருலா என அழைத்து வரும் காட்சி வன்னியின் தனி முத்திரை. சித்திரத்தேருலா வரும் கனகாம்பிகைத்தாயின் அருள்பெற்று எங்கள் மண்ணைச் செழிப்பாக்குவோம். அம்மனின் அருளினால் எங்கள் வாழ்வை இனிதாக்குவோம். வன்னியின் சிறப்பை பொலிவிக்கும் காவல் தெய்வமாகக் குடியமர்ந்த அன்னையின் பொற்பாதங்களை வணங்கிச் சக்தி பெறுவோம்.

**கனகாம்பிகைத்தாயின் புகழும் அருளும் இத்தரணியெங்கும் ஓங்கி ஒலிக்கட்டும்.**

முருகேசு சந்திரகுமார்,பாராளுமன்ற உறுப்பினர்,
பாராளுமன்ற குழுக்களின் பிரதித்தலைவர்.



திருவருள்மிகு இரணைமடு கனகாம்பிகை அம்பாள், புத்திரர்கள் சகிதமாய் சித்திரத் தேரேறி வரும் இந்நாளில் வெளிவரும் சிறப்பு மலரினூடாக வாழ்த்துவதற்குக் கிடைத்த வாய்ப்பிற்காய் அன்னையவள் பாதம் பணிகின்றேன்.

விவசாயிகளுக்கு மட்டுமல்லாது கிளிநொச்சி மாவட்டத்திற்கே வரப்பிரசாதமாய் அமைந்த இரணைமடுக்குளத்தை தன் அருட்பார்வையால் பாதுகாத்து அருளும் கனகாம்பிகை அம்பாள் தேரேறிவந்து அருள்பாலிக்கும் காட்சியைக் காணக் கண் கோடி வேண்டும். கனகாம்பிகை நாயகியாய் கருணை மலர்த்தேனமுதாய், அற்புதங்கள் தனை நிகழ்த்தும் ஆனந்தபைரவியாய் பொற்தேரிலே வரும் பூங்குழல் தாயவள் ஏராளர் குறை நீக்கி தாராளமாய் வரமருள வேண்டுகின்றேன்.

இறையருளால் எனக்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தில் இணையக் கிடைத்த வாய்ப்பும் அதன்மூலம் அம்பிகைக்கு திருத்தொண்டாற்றக்கிடைத்த சந்தர்ப்பத்தையும் பெரும்பேறாகக் கொள்கிறேன்.

சர்வலோக நாயகியாய் இருந்து அருளாசி செய்யும் அம்பாள் சகலருக்கும் நல்லருள் புரியவேண்டுமென வாழ்த்தி வணங்குகின்றேன்.

எந்திரி என். சுதாகரன்
பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர்
கிளிநொச்சி பிராந்தியம்.

**மலரமைப்பு:
துரைராசா டெசிகரன்**

## 14.04.2014 சித்திரைப் பு




### திருத்தேர் வடம்பிடிக்

இந்த ஆண்டு தவத்திரு யோகர் சுவாமிகளுடைய 50 ஆவது குருபூசை தின விழ உருக்கொண்டு அறிவுரைகளால் வளர்ந்துவரும் இவ்வாலயத்தில் ஆண்டுத் திருவிழ மகிழ்ச்சியடைகின்றோம். சுவாமிகள் இரணைமடுக்குளக் கட்டுமானப் பணி நடந்தவே தூய திருவடிகளைச் சுமந்து புனிதமடைந்தது இத்திருத்தலம். இவ்விடத்திற்கும் இக்கா கனகாம்பிகை அம்மனை நிலைநிறுத்தி வழிபடுவதோடு சித்திரை பூரணைதோறும் மக்களை ஆயிரம் பானைகள் வைத்துப் பொங்குங்கள் என்று சு சுவாமிக ஆண்டுகளுக்கு மேலாக பெருவிழா எடுத்து பொங்கி பெருமகிழ்படைபவர் கிளிநொ பங்குனி முதலாம் திங்கள் முதல் 12 நாட்களில் ஊர்தோறும் ஊருலா அழைத்து வீதி நாட்டி மாவிலை தோரணம் கட்டி பூரண கும்பம் வைத்து நிறைவான பெருங்கொடை

வானம் பொய்த்தாலும் வானம் முரண்பட்டாலும் கிளிநொச்சியை நெற்களஞ்சியமா அம்மனின் பணி எதுவானாலும் ஆண் பெண் பாராமல், சிறியவர் முதியவர் பாராம செய்யும் பணிகள் அளப்பல. ஆண்டுதோறும் வளர்ச்சி, ஆண்டுக்கு ஆண்டு உய தாமும் வாழ்ந்து அயலவர்களையும் வாழவைக்கும் நிகழ்வு போற்றுதற்குரியது. மு இன்று குடிநீர்த்திட்டம், கிணற்று உவர்நீரை நன்னீராக்கும் திட்டம் என உயர்வான புடம்போட்டு புகழ்பெற வாழ வைத்தமையால் யோகர்சுவாமிகள் மக்கள் மனதைவிட்ட தலம், தீர்த்தச் சிறப்புடைய அம்மன் மக்கள் வாழ்வியலை வளம்படுத்துபவர். கட பெருமாட்டி வன்னிப் பெரு நிலப்பரப்பில் 3 அழகிய சித்திரத்தேர்களில் மைந்த அழகொளிக்கும் மாட்சி நாளாந்தம் வழிபடுவோரின் துயர்துடைக்கும் சீமாட்டி நைந் கனகாம்பிகையின் திருத்தேர் வடம்பிடித்து இறையுலகில் இடம்பிடிக்க வாரீர்!

நா.சோதிநாதன் ,தர்மக

**புவியரசன்**
சிங்கர் தையல் இயந்திர விற்பனையாளர்.
சிங்கர் SINGER Dealer உத்தரவு பெற்ற விற்பனையாளர்
Prop- Siva
TP: 0772822116
A9-Road, Kilinochchi.

சாக்கு, பாக் படங்கு, கிடுகு என்பனவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.
**சக்தி ரேடர்ஸ்**
**59, ஏ9 வீதி.**
**கிளிநொச்சி.**
077 1527 363

**நியூ சிவா ரேடிங் கோ**
**பல்பொருள் வாணிபம்**
**29, 30 ஏ-9 வீதி,**
**கிளிநொச்சி.**
**021 228 3714**

**அறிவு நதி புத்தகசாலை**
**கனகபுரம் வீதி,**
**கிளிநொச்சி.**
**021 228 5395,077 6737535**

**HURU HARDWARE**
All Buildings Materiels & Paint Suppliers
Leading Hardware Merchants in Kilinochchi
Proprietor: N. Sivakumar T.P. 021 228 0111
Mobile: 077 869 1045 Fax: 021 228 0222
No. 175, Karadippokku Junction, A9 Road, Kilinochchi.

**MURUGAVEL WELDING WORKS**
Kanagapuram Road,
Kilinochchi.
TP: 077 3210350

**Selvi Spare Parts**
செல்வி உதிரிகள் வாணிபம்
DEALERIN TRACTOR & MOTOR SPARE PARTS
A 9- Road,
Karadippokku Junction Kilinochchi. TP. 021 3734702

**KUMARAN HARD WARE & MOTOR STORES**
Karadipokku, Jaffna Road,
Kilinochchi.
T.P. 077 2474128,07781 71 200

**KILINOCHCHI TRANSPORT**
**TRANSPORT AGENT FROM**
**Colombo to Kilinochchi.**
No.160, Wolfendhal Street, Colombo- 13
Tel. 0114 906961, 077 247 4905
KUMARAN HARDWARE
Karadippokku Junction, Kilinochchi.
Tel: 077 247 4128, 077 444 3105

**Gayathiry Textile**
நீதிமன்றம் முன்பாக
A-9 , Road, Kilinochchi.
Tel:0774201330,
0750334465.

**RAVI FANCY**
**ரவி (F) பான்சி**
சகல விதமான பான்சி, சில்வர், பிளாஸ்ரிக், பேக் வகைகள், சொப்பின் வகைகள் என்பன மொத்தமாக பெற்றுக் கொள்ளலாம்.
A9 Road, Opposite Kachchery Kilinochchi TP: 077 8881873

**Yaso Baby Choice & Fancy**
T.Yacotharan Proprietor
Near the Bus Stand, Kanagapuram Road, Kilinochchi.
Tel: 0779792880

**Sri Kanesha Closari Center**
**A9 Road, Kilinochchi.**
மக்கள் வங்கி முன்பாக

**அன்பு மருத்துவ நிலையம்**
A9 Road, Kilinochchi.
Tel: 0214914002
சகல விதமான நோய்களுக்கும் மருத்துவ ஆய்வு கூட பரிசோதனை மருந்தக·சேவை வைத்தியர்.

**Paramarasa Multi Shop**
Dealers in Fancy & Gift Items
A 9 Road, Kilinochchi.
Tel: 077 6498862, 077 7165139

**பண்டிதர் பரந்தாமன் கவின் கலை கல்லூரி**
இல. 09,2 ம் குறுக்குத்தெரு கலைபுரம்
கிளிநொச்சி.
0772880530, 0778049166.

**லிங்கேஸ்வரா- மின்னொட்டும் தொழிலகம்**
இல. 05, கனகபுரம் கிளிநொச்சி
தொ.பே.இ. 0770470050
கேற் கிரில் கூரை வேலைகள்.

**சிவா பதிப்பகம் Siva Pathippakam**
05, கனகபுரம், கிளிநொச்சி.
Email: R.Sivapathippakam@gmail.com
No.05, Kanagapuram, Kilinochchi
T.P. 021 2285534
புத்தகங்கள், துண்டுப்பிரசுரங்கள், விளம்பப்பலகை, அலுவலக ஆள் அடையாள அட்டை, திரை அச்சு (Screen Print) முதலான அனைத்து வகையான அச்சக வேலைகளையும் ஒரே இடத்தில் செய்து பெற்றுக் கொள்ளலாம்.
இறப்பர் முத்திரை ஒரு மணி நேரத்தில் செய்து பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பு: 15.04.2014 9 மணிக்கு இரணைமடு வாவியில் தீர்த்தத் திருவிழா இடம்பெறும். போக்குவரத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப்புலிகளுக்கு இனி நாட்டில் இடமில்லை

## இராணுவப் பேச்சாளர்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புதிய தலைவராக செயற்பட்ட செல்வநாயகம் கஜீபன் என குறிப்பிடப்படும் கோபி உள்ளிட்ட மூவர் உயிரிழந்துள்ளதாகவும் இனி எந்த சந்தர்பத்திலும் நாட்டினுள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீண்டும் தலைதூக்குவதற்கு இடமளிக்கப்போவதில்லை எனவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

புத்தாண்டின் போது வடக்கு மக்கள் அச்சமின்றி இருப்பதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# புத்தாண்டு விளையாட்டு விழா

சாவகச்சேரி நகராட்சி மன்றமும் சாவகச்சேரி பொலிஸ் பிரிவும் இணைந்து நடத்தும் புத்தாண்டின் விளையாட்டு விழா சாவகச்சேரி நகராட்சி மன்ற விளையாட்டு மைதானத்தில் நாளை திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ் விளையாட்டு விழா சாவகச்சேரி நகராட்சி மன்ற தவிசாளர் இ.தேவசகாயம் பிள்ளை மற்றும் சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டபிள்யூ.எ.கே.டி. வன்னியாராச்சி ஆகியோர் தலைமையில் இடம்பெறவுள்ளது. மேலும் இந்நிகழ்வில் வடமாகாண அவைத் தலைவர் சி.வி. கே.சிவஞானம், வடமாகாண சபை உறுப்பினர் கே.சயந்தன், யாழ்.மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பி.எம்.திலகரட்ண. யாழ் மாவட்டபிரதிப் பொலிஸ்மா அதிபர் வி.ரோகண டயஸ், யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ.பி.விமலசேன, பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கோ.ஜக்சில், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் க.அருந்தவபாகன், சாவகச்சேரி ஆதார வைத்திய அதிகாரி த.குகதாஸன், கொடிகாமம் பொலிஸ் பொறுப்பதிகாரி எஸ்.பி.எதிரிசிங்க, யாழ்.கச்சேரி மாவட்ட விளையாட்டு அலுவலர் எம்.ஆர்.மோகனதாஸ் ஆகியோரும் கலந்து இவ் விளையாட்டு விழாவை சிறப்பிக்கவுள்ளனர்.

இவ் விளையாட்டு விழாவின் விளையாட்டுப் போட்டியானது காலை 6 மணிக்கு மரதனோட்டப் போட்டியும் தொடர்ந்து கயிறிழுத்தல், முட்டி உடைத்தல், கரைப்பந்தாட்ட இறுதிப் போட்டி மற்றும் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் இடம்பெறவுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-29)

✦ ✦ ✦ ✦ ✦ ✦

புங்குடுதீவு சிவலைப்பிட்டி சனசமூக நிலையமும் , அம்பாள் விளையாட்டுக்கழகமும் இணைந்து புதுவருடப்பிறப்பை முன்னிட்டு நடத்தும் தீவுப் பகுதி மக்களுக்கான சைக்கிளோட்டப் போட்டி நாளை திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு சிவலைப்பிட்டி சனசமூகநிலையத் தலைவர் வ.சதீஸ்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 6.30 மணிக்கு ஆண்களுக்கான 35 மைல் சைக்கிள் ஓட்டமும் காலை 7.30 மணிக்கு ஆண்களுக்கான 10 மைல் மரதன் ஓட்டமும் காலை 8.30 மணிக்கு பெண்களுக்கான 10 மைல் சைக்கிள் ஓட்டமும் ஆரம்பமாகும் .

மாலை நிகழ்ச்சிகள் பிற்பகல் 3 மணிக்கு காளி கோவில் முன்பாக உள்ள மைதானத்தில் ஆரம்பமாகும். இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வணிகபீட முகாமைத்துவக் கற்கைகள் பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி கலந்து கொண்டு சிறப்பிப்பார் .சிறப்பு விருந்தினர்களாக வேலணை பிரதேச மத்தியஸ்தர் சபை தவிசாளர் எஸ்.கே. சண்முகலிங்கம், புங்குடுதீவு புனித சவேரியார் ஆலய பங்குத்தந்தை அருட்தந்தை எஸ். எல். ஆம்ஸ்ரோங், வர்த்தகர் தில்லை பரம்ராஜா, யாழ்/ புங்குடுதீவு சித்தி விநாயகர் மகா வித்தியாலய அதிபர் ந.கலைநாதன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள். (அ)

# மழலைகளின் விளையாட்டுவிழா

புங்குடுதீவு -4 சிவலைப்பிட்டி முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு காளிகோவில் முன்பாக உள்ள விளையாட்டு மைதானத்தில் சிவலைப்பிட்டி முன்பள்ளி ஆசிரியர் திருமதி கு.பிரவீனா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வேலணைப் பிரதேச சபைத் தவிசாளர் சி.சிவராசா கலந்து கொண்டு சிறப்பிப்பார். (அ)

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 11 02 1963

மறைவு 13 04 2013

## அமரர் கணேஸ் மகேந்திரன் (சுட்டா)

ஆண்டொன்று ஆனபோதும் ஆறவில்லை எம்மனது
ஓராண்டென்ன எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உன் நினைவுகள் எப்பொழுதும்- எம்
நெஞ்சங்களில் கலந்திருக்கும்

கடந்த 02.04.2014 அன்று அன்னாரின் தாயாரின் இல்லத்தில் நடை பெற்ற முதலாம் ஆண்டு நினைவு ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெற்ற மதிய போசன நிகழ்விலும் கலந்து கொண்ட உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கந்தசாமி கோயிலடி,
உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

தாய் றோசம்மாவும்
உறவினர்களும்.

(6130)

# பிரிவுத்துயர் பகிர்வு

## திருமதி சின்னத்துரை நாகம்மா



மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் , கனடா Scarborough, மீசாலை ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை நாகம்மா நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று நடைபெற்று பூதவுடல் மீசாலை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

## திருமதி வேலுப்பிள்ளை இலட்சுமி



கரவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை இலட்சுமி கடந்த 9 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 16 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மண்க்கு Oshwal Mahajanwadi, 1 Campbell Road, Croydon,Surrey, CRO 2SQ, UKஎன்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.


## திருமதி நாகலிங்கம் பரமேஸ்வரி



புன்னாலைக்கட்டுவன் வடக்கைச் சேர்ந்த நாகலிங்கம் பரமேஸ்வரி கடந்த 9 ஆம் திகதி புதன் கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிள்ளையான் காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


## திருமதி சங்கரப்பிள்ளை சிவக்கொழுந்து



புலோலி தெற்கு, சாரையடியைப் பிறப்பிடமாகவும் மருதங்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை சிவக்கொழுந்து நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று அவரது சாரையடி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 9 மணிக்கு ஆனை விழுந்தான் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

## பசுபதி பரசோதிலிங்கம்



கோட்டைக்காட்டைப் பிறப்பிடமாகவும் திருநாவற்குளம், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட பசுபதி பரசோதிலிங்கம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் கட்டுப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


## திருமதிசக்திவேல்பிள்ளை தெய்வநாயகி



சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடா Scarbarouh, ஐ தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சக்தி வேல்பிள்ளை தெய்வநாயகி 10 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 9 மணிக்கு Ogden Funeral Homes, 4164 Sheppard Avenue East, Toronto, ON M1S 1T3, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

## திருநாவுக்கரசு கைலாயநாதன்



கரம்பொன் கிழக்கு, காளி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் யாழ். ஐயனார் கோயிலடி, வண்ணார் பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு கைலாயநாதன் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10 மணிக்கு கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

## வீரகத்தி நாகரட்ணம்



புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் கொழும்பு கொச்சிக்கடையை வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தி நாகரட்ணம் நேற்று சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் பிற்பகல் 5 மணிக்கு பொறளை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

# சைவப்புலவர் தேர்வு 18 ஆம்திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தால் ஆண்டுதோறும் நடத்தப்படும் சைவப்புலவர், இளஞ்சைவப் புலவர் தேர்வுகள் எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் 20 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வரையிலான மூன்று தினங்கள் மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு, யாழ்ப்பாணம், லண்டன் ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளன என சைவப் புலவர் சங்க தேர்வுச் செயலாளர் அறிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சைகள் கொழும்பில் பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியிலும் யாழ்ப்பாணத்தில் நாவலர் மகாவித்தியாலயத்திலும் மட்டக்களப்பில் ஆனைப்பந்தி பெண்கள் மகா வித்தியாலயத்திலும் திருகோணமலையில் கோணேஸ்வரா இந்துக் கல்லூரியிலும் லண்டனில் சைவ முன்னேற்றச் சங்கத்திலும் நடைபெறும்.

மேலதிக விபரங்களுக்கு தேர்வுச் செயலாளரின் 077 749 7100 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

விண்ணப்பித்தவர் களுக்குரிய நுழைவுச் சீட்டுக்கள் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளன.

இதுவரையில் கிடைக்காதவர்களும் நேரில் பரீட்சை நிலையங்களுக்கு சென்று நுழைவுச்சீட்டுப்பிரதியைப் பெற்றுத் தேர்வு எழுத முடியும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# பாலவிஹார்முகாம்

(யாழ்ப்பாணம்)

என்றும் புன்னகை சின்மய பாலவிஹார் முகாம் நிகழ்வின் நிறைவும் பரிசளிப்பும் இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணி தொடக்கம் 6 மணி வரை சின்மயா மிஷன், இல 9, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர் என்ற முகவரியிலமைந்துள்ள சின்மய ஞானவேல் ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது. (அ)


# திருமலையில் பட்டிமன்றம்

(திருகோணமலை)

பிரபல பட்டிமன்றப் பேச்சாளர் சொல்வேந்தர் பொன் சுகந்தன் தலைமையில் யாழ். பட்டிமன்றக் குழுவினர் வழங்கும் சிறப்புப்பட்டி மன்றம் திருகோணமலை சாம்பல் த்தீவு மாங்கணாய் மாரி அம்மன் ஆலயத்தின் பூங்காவனத் தினமாகிய நாளை மறுதினம் இரவு 8 மணியளவில் நடைபெறவுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மான் கராத்தே - திரைவிமர்சனம்



மான் கராத்தே : ஏ.ஆர்.முருகதாஸின் திரைக்கதையாம். ஜெயம் ரவி நடித்த எம்.குமரன் சன் ஒஃப் மகாலக்ஷ்மி திரைப்படத்தையோ, சிவகார்த்திகேயன் நடித்த எதிர்நீச்சல் திரைப்படத்தையோ முருகதாஸுக்கு யாரும் போட்டுக் காண்பிக்கவில்லை போலும். இறுதி 30 நிமிடங்களுக்கே சீரியஸ் கரக்டர், அது வரை கதாநாயகி பின்னால் வழிந்தோடிக் கொண்டே இருக்கும் அதே அப்பாவிப் பையன் கரக்டர் என இதுவும் இன்னுமொரு சிவகார்த்திகேயன் சினிமா தான்.

சத்யம் கம்ப்யூட்டர்ஸில் வேலை பார்த்துக் கொண்டிருக்கும் ஐந்து நண்பர்கள் ஒன்றாக சுற்றுலா புறப்பட்டு காட்டுக்கு சென்றிருக்கும் போது அங்கு தவம் செய்து கொண்டிருக்கும் ஒரு சித்தரை காண்கிறார்கள், அவரை கலாய்த்துக் கொண்டே வரம் கேட்கிறார்கள். ஏதேனும் ஒரு வரம் மட்டும் கேளுங்கள் என்கிறார் சித்தர். ஐந்து பேரும் ஆளுக்கொரு வரத்தை தமது கைத்தொலைபேசியில் எழுதி சித்தர் முன்னே வைத்து இதில் யாருக்கு வரம் கொடுக்க வேண்டும் என்பதை நீங்களே தீர்மானியுங்கள் என்கிறார்கள்.

அதில் வம்சி கிருஷ்ணா வரம் எழுதி வைத்த கைத் தொலைபேசியை தெரிவு செய்து அவர் கேட் வரத்தையே கொடுத்து மறைந்து போகிறார் சித்தர். என்ன வரம் அது? ஆயுத பூஜை அன்றைக்கு தினத்தந்தி பத்திரிகை வருமா? வந்துவிட்டது. பத்திரிகையை எடுத்து செய்திகளை ஒவ்வொன்றாக வாசிக்க அடுத்து சில மாதங்களுக்கு, அதாவது ஆயுத பூஜை வரை தமிழ் நாட்டில் என்னென்ன நடக்கப் போகிறது என தெரியவருகிறது.

அதில் பீட்டர் எனும் பெயருடைய பாக்ஸிங் வீரரால் இவர்களுக்கு 2 கோடி ரூபாய் பணப்பரிசு கிடைக்கப் போகிறது என எழுதியிருக்கிறது. யார் அந்த பீட்டர் என தேடத் தொடங்குகிறார்கள் ஐவரும். சிவகார்த்திகேயன் அறிமுகமாகிறார் ராயபுரம் பீட்டராக.

பாக்ஸிங் என்பது ஒரு ஸ்போர்ட்ஸ் என்பது கூட தெரியாத ஆசாமி. 2 கோடி ரூபாய்க்கு ஆசைப்பட்டு அவரை கஷ்டப்பட்டு பாக்ஸிங் வீரர் ஆக்குகிறார்கள் ஐவரும். தான் காதலிக்கும் யாழினி (ஹன்சிகா)க்கு ஸ்போர்ட்ஸ் பிடிக்கும் என்பதற்காக சிவகார்த்திகேயனும் ட்ரெய்னிங் போகிறார்.

பத்திரிகையில் போட்டிருந்தது போன்றே அதே திகதியில் பொக்ஸிங் கோப்பை வருகிறது. அரையிறுதி வரை மான் கராத்தே உத்தியில் (தன் மீது ஒரு அடியும் படாமல் தப்பித்துக் கொண்டே எதிராளியை ஒரே அடியில் கோ - இன்ஸிடண்டில் வீழ்த்துவதாம்) முன்னேறுகிறார் பீட்டர் சிவா.

இறுதிப் போட்டியில் அதே பீட்டர் எனும் பெயரில் இன்னுமொரு புரொஃபஷனல் பாக்ஸிங் வீரர் களமிறங்குகிறார். ஒரே அடியில் சிவகார்த்திகேயனை சாகடிப்பேன் என சவால் விடுகிறார்.

இறுதிப் போட்டியில் கலந்து கொள்ளாமல் போனால் ஹன்ஷிகாவுக்கு தான் பாக்ஸிங் வீரரே இல்லை என்ற உண்மையெல்லாம் தெரிந்து தன்னை விட்டு போய் விடுவாளோ என அஞ்சும் சிவா என்ன செய்கிறார் என்பது தான் இறுதி 30 நிமிடக் காட்சிகள்.

இறுதிப் போட்டிவரை சிவாவைக் கொண்டுவந்து விடுவதில் போட்டி நடுவராக களமிறங்கும் சூரி அடிக்கும் லூட்டிகள் செம ரகளை. ஆனால் அரையிறுதியில் நடுவரான தன் மீதே கைவைத்து விட்ட கோபத்திற்காக எதிர் வீரரை நாக் அவுட் செய்து, சிவாவை இறுதிப் போட்டிக்கு சூரி அனுப்புவதிலிருந்தே மிகப்பெரும் லொஜிக் மீறல்கள் ஆரம்பித்துவிட்டன.

ஒரே நாள் ட்ரெய்னிங்கில் இறுதிப் போட்டியில் சிவகார்த்திகேயன் நம்பிக்கையோடு களமிறங்கி எதிர்வீரரை வீழ்த்த நினைப்பது வரை லொஜிக் மீறல்கள் கூட லாஜிக்கே இல்லாமல் தொடர்கின்றன.

பாட்டுக்களுக்கும், அதற்கு சிவகார்த்திகேயனின் நடனமும், காட்சி அமைப்பும், கமெரா ஒளிப்பதிவும், பின்னணி இசையும் மாத்திரமே கண்ணுக்கு குளிர்ச்சியாகவும், கொஞ்சம் புதுசாகவும், ரசிக்கக் கூடிய வகையிலும் இருக்கிறது.

சிவகார்த்திகேயனைத் தவிர வேறு எந்த கதாபாத்திரங்களிலும், ஹன்சிகா உட்பட வலுவில்லை. மனதில் பதியவும் இல்லை.

படம் முழுவதும் இறுதிக் காட்சியை தவிர நீங்கள் வீழ்ந்து வீழ்ந்து சிரிப்பதற்கு உத்தரவாதம் இருக்கிறது. அந்தளவுக்கு சில டைமிங் காமெடி களைகட்டுகின்றன. ஆனால் சிரிப்பைத் தவிர, தப்பான மெசேஜ்கள் பல இருக்கின்றன. குடியை போற்றி தேவா பாடிய பாடல் மாற நினைத்தால் ஒரே நாளில் வெற்றி வந்து விடும் எனும் உத்தரவாதம் கொடுக்கும் காட்சிகள், வேலை தேவையில்லை, காசு தேவையில்லை, லவ் பண்ணிச் சுற்ற ஒரு பெண் இருந்தால் போதும், என்ன செய்யவேண்டுமானாலும் செய்யலாம் எனும் நம்பிக்கை காட்சிகள்.

ரூ.20 கோடியில் எடுக்கப்பட்ட படம், முதல் நாளே தமிழ்நாடு, இந்தியா, உலகம் முழுவதும் என ரூ 8.5 கோடி வசூலித்துவிட்டது. முதல் இரு நாள் கலெக்ஷன் ரூ 14.83 கோடி. சிவகார்த்திகேயனுக்கு ஓப்பனிங் காட்சியில் அதிக வசூலை அள்ளிக் கொடுத்த படமும் இதுதான்.

தயாரிப்பாளர்களுக்கு நம்பிக்கை கொடுக்கும் இன்னுமொரு தமிழ்நாட்டு கொமர்ஷியல் கதாநாயகனாக சிவகார்த்திகேயன் முழுவீச்சாக புறப்பட்டுவிட்டார். ஆனால் எதிர்நீச்சல், மான் கராத்தே ட்ராக்கில் இன்னுமொரு படம் இப்படி வந்தால், சிவாவின் இத்திரைப்பட வெற்றிப் பயணம் நீண்ட நாட்களுக்குள நிலைத்து நிற்காமல் போய்விடும் ஆபத்து இருக்கிறது.

சிவாவின் இயல்பான காமெடி சென்ஸையும், யதார்த்தமான நடிப்பையும நம்பும் இளைஞர்கள் இன்னும் சிவாவிடமிருந்து ஒரு உருப்படியான திரைப்படத்தை எதிர்பார்த்திருக்கிறாரகள்.

ஒன்றுக்கும் உதவாமல் ஊர் சுற்றும் கிராமத்து, நகரத்து இளைஞர்களை போன்ற கதாபாத்திரங்களில் அல்லது ஒரு திடீர் ஸ்போர்ட்ஸ் வீரராக அல்லது உங்களுக்கு சம்பந்தமே இல்லாத ஒரு விடயத்தை, படத்தின் கதை இதில் தான் இருக்கிறது என நம்பி ரிஸ்க் எடுப்பதாக ஏமாற்ற நினைக்கும் போலிக் கதாபாத்திரங்களை விட்டு வெளியில் வாருங்கள் சிவா. கொமர்ஷியல் ஹிட் மாத்திரம் சினிமா இல்லை. அப்பாவியாக தன்னை தாழ்த்திக்



# சிக்கலில் சிக்கிய விஜயின் கத்தி




தமிழ்ஈழப் பிரச்சினையால் சமீபத்தில் வெளிவந்த இனம் திரைப்படம் முடக்கப்பட்டு தற்போது திரையரங்கில் ஓடாமல் நிறுத்தப்பட்டிருக்கிறது.

இந்த கத்தி இப்பொழுது விஜய் பக்கம் திரும்பியுள்ளது. விஜய், ஏ.ஆர்.முருகதாஸ் கூட்டணியில் வெளிவர இருக்கும் கத்தி திரைப்படம் பெரிய பட்ஜெட் என்பதால் ஐங்கரன் இண்டர்நஷனல் மட்டுமில்லாமல் லைகா மொபைல்ஸும் இணைந்து தயாரிக்க இருந்தனர்.

இந்நிலையில் லைகா மொபைல்ஸ் நிறுவுநர் பல நாடுகளில் வியாபார நோக்கில் தொடர்பு வைத்திருப்பது போல் இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவுடனும் தொடர்பு வைத்திருப்பதால் இப்படத்திற்கான எதிர்ப்பு குரல்கள் எழும்பி வர உள்ளது.


இதற்கு முன் விஜய் நடித்திருந்த தலைவா படத்திலும் பல சர்ச்சைகள் எழுந்த நிலையில் பல படிகளை தாண்டி வெளிவந்த அப்படம் வீழ்ச்சியை கண்டிருந்தது.

இத்தருணத்தில் இதுபோன்ற சர்ச்சையில் மாட்டியிருக்கும் இப்படம் இதிலிருந்து மீளுமா என்பது கேள்விகுறி தான்?

## அந்த நாள் ஞாபகம்



அன்புள்ள அங்கிள் அன்புள்ள ரஜனி காந்த படத்தில் ரஜனியுடன் குழந்தை நட்சத்திரமாக மீனா



அவதார்: தேர்ந்த ஒப்பனையாளரின் கைவண்ணத்தில் கிருஷ்ணரான அவதாரம் எடுக்கும் என்.டி. ராமராவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா.உறுப்பு நாடுகளின் மனிதவுரிமை நிலைமை குறித்து மீளாய்வு நடவடிக்கை

## ஐ.நா.பொதுச்சபை அங்கீகாரம்

**சர்வதேச மனிதவுரிமைகள் அறிக்கைகளுக்கு கடந்த புதன்கிழமை ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட மீளாய்வு திட்டத்தின் ஊடாக உந்துசக்தி கிடைத்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. உறுப்பு நாடுகள் தமது மனிதவுரிமை மீறல்களை மதித்து நடக்கின்றன என்பது குறித்து மீளாய்வு செய்து அதனை வலிமைப்படுத்தும் திட்டத்துக்கு ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை கடந்த புதன்கிழமை அங்கீகாரம் வழங்கியது.**

இந்த யோசனையின்படி, ஜெனீவாவை தளமாகக் கொண்ட 10 இணக்க அமைப்புக்களை புதுப்பிப்பதே நோக்கமாக உள்ளது.

இந்த இணக்க அமைப்புக்கள், உறுப்பு நாடுகள் சர்வதேச மாநாட்டு விழுமியங்களை எவ்வாறு நடைமுறைப்படுத்துகின்றன. குறிப்பாக சித்திரவதைக்கு எதிராகவும் சிறுவர் உரிமைகள் தொடர்பாகவும் நாடுகள் எவ்வாறு நடந்துகொள்கின்றன என்பதை இந்த அமைப்புக்கள் மீளாய்வு செய்கின்றன.

அதாவது இந்த அமைப்புக்கள், சர்வதேச மனிதவுரிமை பாதுகாப்பு திட்டத்தின் இதயங்களாக விளங்குகின்றன.

இவை, உறுப்பு நாடுகளின் மனிதவுரிமைகள் குறித்த உடனடியாகவே எச்சரிக்கைகளை விடுப்பது, மனிதவுரிமைகளுக்கான வழிமுறைகளை ஏற்படுத்துதல் போன்ற கடமைகளை கொண்டிருப்பதாக ஐக்கிய நாடுகளின் மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் குறித்த அமைப்புக்கள் நான்கு அல்லது ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை சிவில் குழுக்கள், ஜெனீவாவின் அமர்வுகளில் பங்கேற்கும் அரசுகளின் பிரதிநிதிகளின் கருத்துக்களை மையமாகக் கொண்ட முறையான அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும் என்று கோரப்படும்.

அத்துடன் இந்த அமைப்புக்கள் பிரச்சினைகளை அடையாளம் கண்டு அதற்கான பரிந்துரைகளையும் வழங்கும் அதிகாரத்தை கொண்டிருக்கின்றன என்று நவநீதம்பிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை கடந்த புதன்கிழமையன்று ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட யோசனையின்படி ஜெனீவாவின் இணக்க அமைப்புக்களுக்கு தகவல்கள் மூலம் பங்களிப்பு செய்யும் தனிப்பட்டோர் மற்றும் குழுக்களுக்கு எதிராக செயற்படல், அச்சுறுத்தல் விடுத்தல், சிவில் குழுக்களின் தகவல் வழங்குதலை தடுத்தல் மற்றும் ஐக்கிய நாடுகளின் மனிதவுரிமைகள் பேரவைக்கு தகவல்களை வழங்கும் மனிதவுரிமை காப்பாளர்களை நோக்காக கொண்டு அச்சுறுத்தல் விடுத்தல் போன்ற நடவடிக்கைகள் கண்டிக்கப்பட்டுள்ளன. (2)

# பொதுபலசேனாவின் அடாவடியை அரசாங்கம் கவனிப்பதில்லை

## அமைச்சர் வாசு குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஏனைய இனங்களின் மத தலங்களுக்குள் பலவந்தமாக புகுந்து பொதுபல சேனா தாக்குதல் நடத்தி வருகிறது என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

பொதுபல சேனாவின் இந்த அடாவடியை தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால் அந்த அமைப்பின் செயற்பாடுகளுக்கு கட்டாயம் அரசாங்கத்தின் ஒத்துழைப்பு உள்ளது எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுபல சேனா அமைப்பு அண்மையிலும் அதற்கு முன்னரும் சட்டத்தை மீறி செயற்பட்டதை காண முடிந்தது. இதனால் இவ்வாறான அமைப்புக்கு எதிராக நாட்டின் சட்டம் செயற்படுத்தப்பட வேண்டும்.

அவ்வாறு சட்டத்தை செயற்படுத்தாது போனால் அதனை பொலிஸ் அல்லது அரசாங்கத்தின் குறையாக காணமுடியும். பௌத்த உரிமைகளை பாதுகாப்பதாக கூறி பொதுபல சேனா அமைப்பு மேற்கொள்ளும் இவ்வாறான தாக்குதல்களையும், தீவைப்புகளையும் எவராலும் அனுமதிக்க முடியாது.

பௌத்த மதத்திற்கு பிரச்சினை இருக்குமாயின் அதனை தீர்க்க தனியான அமைச்சு உள்ளது. அதன் ஊடாக அழுத்தங்களை கொடுத்து பிரச்சினைகளை தீர்க்க வேண்டும்.

இதனை விடுத்து கலகொட அத்தே ஞானசார தேரருக்கு சட்டத்தை செயற்படுத்த அனுமதிப்பதன் மூலம் நாட்டின் சட்டத்திற்கும், மத நல்லிணக்கத்திற்கும் பாரிய அச்சுறுத்தல் ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## வருடப்பிறப்பு வழிபாடுகள்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணலிங்கேஸ்வரர், கண்ணகி அம்மன் ஆல யங்களில் வருடப்பிறப்பு அன்று காலை 06 .11 மணிக்கு விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறும்.

மாலை 5 மணிக்கு கண்ணகியம்மனுக்கு லலிதா சகஸ்ரநாம அர்ச்சனையும் இடம் பெறவுள்ளது. (அ)



வண்ணார்பண்ணை காமாட்சி அம்மன் ஆலயத்தின் மஞ்சத் திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற போது.... (படம்: மானிப்பாய் செய்தியாளர்)


## பொது மக்களுக்கான அறிவித்தல்

**பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியினால் உரிமமளிக்கப்பட்ட நிறுவனங்கள்**

(08.04.2014 இல் உள்ளவாறு, அகரவரிசைப்படி)

### உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்

1. அக்சிஸ் பாங்க் லிமிடெட்
2. அட்டன் நசனல் பாங்க் பிஎல்சி
3. அமானா பாங்க் லிமிடெட்
4. இந்தியன் ஓவசீஸ் பாங்க்
5. இந்தியன் பாங்க்
6. இலங்கை வங்கி
7. எம்சிபி பாங்க் லிமிடெட்
8. ஐசிஐசிஐ பாங்க் லிமிடெட்
9. ஹபிப் பாங்க் லிமிடெட்
10. கார்கில்ஸ் பாங்க் லிமிடெட்
11. கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
12. சம்பத் பாங்க் பிஎல்சி
13. சிற்றி பாங்க் என்ஏ
14. செலான் பாங்க் பிஎல்சி
15. டீஎவ்சீசீ வர்தன பாங்க் பிஎல்சி
16. டொயிச் பாங்க் ஏஜி
17. த ஹொங்கொங் அன்ட் சங்காய் பாங்கிங் கோப்பிரேசன் லிமிடெட்
18. நெசனல் டிவலொப்மன்ட் பாங்க் பிஎல்சி
19. நேசன்ஸ் ரஸ்ட் பாங்க் பிஎல்சி
20. பப்ளிக் பாங்க் பேர்காட்
21. பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் பிஎல்சி
22. மக்கள் வங்கி
23. யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி
24. ஸ்ரான்டட் சார்ட்டட் பாங்க்
25. ஸ்ரேற் பாங்க் ஒவ் இந்தியா

### உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்

1. அரச ஈட்டு முதலீட்டு வங்கி
2. இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
3. எம்பீஎஸ்எல் சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
4. சணச டிவலொப்மன்ட் பாங்க் பிஎல்சி
5. சிறிலங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
6. டிஎவ்சீசீ பாங்க்
7. தேசிய சேமிப்பு வங்கி
8. பிரதேசிய சங்வர்த்தன பாங்க்
9. லங்காபுத்திர டிவலொப்மன்ட் பாங்க் லிமிடெட்

### உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்

1. அபான்ஸ் பினான்ஸ் பிஎல்சி
2. அலயன்ஸ் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
3. அசோசியேட்டட் மோட்டார் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
4. ஆர்பிகோ பினான்ஸ் கம்பனி பிஎல்சி
5. இந்திரா பினான்ஸ் லிமிடெட்
6. ஈ.ரி.ஐ பினான்ஸ் லிமிடெட்
7. எம்சிஎஸ்எல் பினான்ஷியல் ஸர்விஸஸ் லிமிடெட்
8. எல் பீ பினான்ஸ் பிஎல்சி
9. ஏசியன் பினான்ஸ் லிமிடெட்
10. ஏஎம்டபிள்யூ கபிட்டல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
11. ஏசியா அசெற் பினான்ஸ் பிஎல்சி
12. ஐடியல் பினான்ஸ் லிமிடெட்
13. ஓரியன்ட் பினான்ஸ் பிஎல்சி
14. கன்றிச் பினான்ஸ் லிமிடெட்
15. கப்பிட்டல் எலையன்ஸ் பினான்ஸ் பிஎல்சி
16. கொமர்ஷல் கிறடிட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
17. கொமர்ஷல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
18. சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி
19. சிலோவ் பினான்ஸ் பிஎல்சி
20. சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சி
21. சிட்டி பினான்ஸ் கோப்பிரேசன் லிமிடெட்
22. சியபத பினான்ஸ் லிமிடெட்
23, சிற்றிசன்ஸ் டிவலொப்மென்ட் பிசினஸ் பினான்ஸ் பிஎல்சி
24. சென்றல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி*
25. சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
26. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி
27. சொவ்ற்லொயிக் பினான்ஸ் பிஎல்சி
28. ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பிஎல்சி
29. த பினான்ஸ் கம்பனி பிஎல்சி
30. த ஸ்ரான்டட் கிறடிற் பினான்ஸ் லிமிடெட்
31. தேசோதய டெவலப்மென்ட் பினான்ஸ் கம்பனி லிமிடெட்
32. நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி
33. ப்ரெக் லங்கா பினான்ஸ் பிஎல்சி
34. பார்ட்லீட் பினான்ஸ் பிஎல்சி
35. பிம்புத் பினான்ஸ் பிஎல்சி
36. பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் லிமிடெட்
37. பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
38. பீப்பிள்ஸ் மர்ச்சன்ட் பினான்ஸ் பிஎல்சி
39. மல்ரி பினான்ஸ் பிஎல்சி
40. மர்க்கன்டைல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
41. மெல்ஸ்டா ரீகல் பினான்ஸ் லிமிடெட்
42. யூ பீ பினான்ஸ் கம்பனி லிமிடெட்
43. ரிகேஎஸ் பினான்ஸ் லிமிடெட்
44. ரிச்சர்ட் பீரிஸ் ஆர்பிகோ பினான்ஸ் லிமிடெட்
45. லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் பிஎல்சி
46. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி
47. ஸ்வர்ணமகால் பினான்ஷியல் ஸர்விஸஸ் பிஎல்சி
48. ஜோர்ஜ் ஸ்டுவர்ட் பினான்ஸ் பிஎல்சி

* இலங்கை மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட முகாமைத்துவ முகவரினால் முகாமைத்துவம் செய்யப்படுவதுடன் மீள்கட்டமைப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. அதே வேளை, வைப்புக்களைத் திரட்டுதல் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

### நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய விடயங்கள்

➢ மேற்கூறப்பட்ட நிறுவனங்கள் அவற்றின் வர்த்தக நடவடிக்கைகளை மதிநுட்பமாக நடாத்துவதை ஊக்குவிப்பதன் மூலம் பொதுமக்களின் வைப்புக்களைப் பாதுகாப்பதற்காக மத்திய வங்கிக்கு அவற்றை ஒழுங்குபடுத்தி மேற்பார்வை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும், வைப்புக்களுக்கு உத்தரவாதம் அளிக்கவோ அல்லது இதில் ஏதாவதொரு நிறுவனம் ஒருபோதும் முறிவடையாது என்று உறுதிப்படுத்தவோ சட்டரீதியான அதிகாரம் மத்திய வங்கியிடம் கிடையாது. மத்திய வங்கி, அதனால் மேற்பார்வை செய்யப்படும் ஒரு வங்கி அல்லது ஒரு நிதிக் கம்பனி முறிவடையுமிடத்து வைப்பாளர் ஒருவருக்கு அவரின் மொத்த வைப்புக்களின் தொகையில் உயர்ந்த பட்சம் ரூபா 200,000 கொண்ட தொகையினை 2012 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் மீள்கொடுப்பனவு செய்யப்படுவதற்கு உத்தரவாதம் அளிப்பதற்காக வைப்புக் காப்புறுதி திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

➢ மேலுள்ள ஏதாவதொரு நிறுவனமொன்றில் பணத்தை வைப்பிலிடும்போது தயவுசெய்து உங்கள் வைப்புக்களின் பாதுகாப்பு தொடர்பாக அதிக கவனம் செலுத்தல் வேண்டும்.

**இலங்கை மத்திய வங்கி**

வங்கிகள் - தொ.பேசி.: 2477100, 2477105, 2477120, 2477129 தொ.நகல்: 2477711, மின்னஞ்சல்: banksup@cbsl.lk

நிதிக் கம்பனிகள் - தொ.பேசி.: 2477500, 2477504 தொ.நகல்: 2477738, மின்னஞ்சல்: secdsnbfi@cbsl.lk

(அ-701)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கரவெட்டி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட சமுர்த்தி மகா சங்கத்தின் வாழ்வின் எழுச்சி புத்தாண்டுச் சந்தை அண்மையில் இடம்பெற்றது. இதன்போது யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் நாடாவை வெட்டி சந்தையினை திறந்து வைப்பதையும் வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட பெண் ஒருவருக்கு கரவெட்டி பிரதேச செயலர் ச.சிவசிறி தையல் இயந்திரம் வழங்குவதையும் சந்தையில் கலந்துகொண்ட ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள் :- கரணவாய் செய்தியாளர்)

நிழலின் நிழல்கள்





மெய்கண்டான் சுழிபுரம் - பண்ணாகம் வித்தியாலத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந் நிகழ்வின் போது வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராசா பரிசில் வழ்ங்குவதையும் வெற்றிபெற்ற மாணவர்களுடன் வித்தியாலய அதிபர் த.கணேசதாசன் நிற்பதையும் இந்து கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் மாணவர்களின் பவனியையும் படங்களில் காணலாம்.

(படங்கள் :- அல்லைப்பிட்டி செய்தியாளர்)




மறவன் புலோ மேற்கு முன்பள்ளி வருடாந்த மெய்வல்லுநர் திறனாய்வு அண்மையில் இடம்பெற்றபோது...





வலிகாமம் கிழக்கு, கோப்பாய் பிரதேச செயலகம் சமுர்த்தி வாழ்வின் எழுச்சி புத்தாண்டுச் சந்தை நேற்று கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் அரசாங்க அதிபர் சுந்தரம் அருமை நாயகம் தலைமையில் இடம்பெற்றபோது...

(படங்கள் :- மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

....மரத்தைச் சுற்றி இரண்டு பாதைகள். எந்த பாதையில் செல்வது?

குரல் கொடுத்துக் கொண்டே சென்றதில் தூரத்தே செடிகொடி அசைவில் ஆட்கள் செல்வதற்கான அறிகுறிகள் காணப்படவே மீண்டும் குரல் கொடுத்தோம். இப்போது எதிர்க்குரல் கேட்டது. அப்பாடா! ஓட்டமும் நடையுமாகச் சென்று அவர்களுடன் சேர்ந்து கொண்டோம். போன உயிர் திரும்பி வந்தது.

இதற்குப் பக்கத்தில் பிரியும் பாதை சன்னாசி வனத்திற்குச் செல்லுமாம். அந்த சன்னாசி வனத்தில்தான் பறவைப் பாம்பு, பறவைக்கீரி, பறவைக் கோட்டான் போன்றவை காணப்படுமாம். அவைகள் பறக்கும் போது குறுக்கே போய்விட்டால் இடித்துத் தள்ளி விட்டுப் போய் விடுமாம்.


கீழே வனத்துறை அறிவிப்புப் பலகையில் பறக்கும் சாம்பல் நிற அணில் பற்றி குறிப்பிடப்பட்டிருந்தது நினைவுக்கு வந்தது.

"அந்த வனத்திற்குப் போகலாமா?" நாகராஜனிடம் கேட்டோம்.

"போகலாம், ஆனால் நீங்கள் ஆசைப்பட்ட ஏடு எழுத்தாணி பாறையைப் பார்க்க முடியாது. வேறு வழியாகக் கீழே இறங்க வேண்டியதிருக்கும், பரவாயில்லையா?" என்றார் சிரித்தபடியே.

"அந்த சன்னாசி வனப் பாதைக்குத் தெற்கே ஒரு ஓடையும் சங்கிலிப் பாறையும் இருக்கிறது. அதைமட்டும் பார்த்துவிட்டுக் கீழே இறங்குவதற்குத்தான் நேரம் சரியாக இருக்கும். நாம் இந்த வழியே சென்றால் சித்தர் குளத்தையும் பார்க்கலாம்" என்றார் நாகராஜ்.

சன்னாசி வனத்தில் வேறு ஏதேனும் விசேடம் உள்ளதா?



"ம்... அங்கே ஒரு பெரிய அத்திமரம் இருக்கிறது. அதில் ஏராளமான கருங்கழுகுகள் அமர்ந்திருக்கும். அவை ஆள் வாடையைக் கண்டால் ஓடிவிடும். கழுகுகள் ஓடிவிட்டால் குரங்குகள் தொல்லை தாங்க முடியாது. ஏதேனும் ஒன்றை நாம் எதிர்கொள்ளத்தான் வேண்டும்" என்றார் சிரித்தபடி.

நாங்கள் அதற்குமேல் பேச முடியவில்லை. கீழே இறக்கத்தில் மிகப் பெரிய புல்வெளி எங்களை ஆச்சரியப்பட வைத்தது. ஆனால் இந்த கோரைப் புற்களின் நடுவே நடந்துதான் அக்கரையை அடைய வேண்டுமென்பது மலைக்க வைத்தது.

வனத்தின் சரிவில் இறங்கும் போது விழுந்துவிடாமல் இருப்பதற்கு ஓர் ஊன்றுகோல் தேவைப்படவே, ஆளுக்கு ஒரு கழியை உடைத்துக் கொண்டோம்.

கோலை ஊன்றி மெதுவாக சரிவில் இறங்குவதற்குள் நாகராஜ் அந்த மலைப் புல்லின் ஊடே மறைந்து போனார்.

அப்போதுதான் தெரிந்தது அந்த மலைப்புற்கள் எவ்வளவு உயரத்திற்கு வளர்ந்திருக்கிறது என்று.

**ஆன்மீகம் 91**

ஏ! கருப்பசாமி! உமா குரல் கொடுத்தார்.

வாங்க, வாங்க, கையிலிருக்கிற கம்பாலே புல்லை நீக்கிப் பாருங்கள், பாதை தெரியும் என்று நாகராஜ் பதில் குரல் கொடுக்க அந்த மலைப்புல்லின் இடையே நடக்க ஆரம்பித்தோம்.

தோள் அளவு வளர்ந்திருந்த புற்களினூடே பாதையொன்றும் சென்று கொண்டிருந்தது. நாகராஜின் தலைப்பாகையை அடையாளம் வைத்துக் கொண்டு கையிலிருந்த கோலால் புல்லை விலக்கிக் கொண்டு வேகமாகப் பின் தொடர்ந்தோம்.

அவரின் அந்த நடை வேகத்திற்கு எங்களால் ஈடு கொடுக்க முடியவில்லை என்பது உண்மைதான்.


எனக்குத் திடீரென்று ஒரு சந்தேகம். சித்தர் நூல்களில் குறிப்பிடப்படும் ஜோதிப்புல் என்பது இதுதானா? சந்தேகத்தை நாகராஜிடம் கேட்டேன்.

இல்லையில்லை, ஜோதிப்புல் என்பது சுமார் அரையடி நீளத்திற்கு இருக்கும். இம்மாதிரி பழுப்பு நிறமாக இருக்காது. நல்ல மஞ்சள் நிறமாக இருக்கும். இரவில் தீபம் ஏற்றியது போல வெளிச்சம் கொடுக்கும் என்றார் நாகராஜ்.

(தொடரும்)

டாக்டர். சி. எஸ். முருகேசன், எம்.ஏ., பி.எச்.டி

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்



**10**

என்னை நினைவிருக்கிறதா டீச்சர்?

கொஞ்சம் உங்கள் நினைவுகளைத் தோண்டிப் பாருங்கள்.

கறுப்பாய் ஒல்லியாய், கண்கள் மட்டும் பிரகாசமாய் அறுபதுகளின் இறுதிகளில் உங்களோடு பழகி வந்த பையன்.

அந்தப் பள்ளி நாட்களில் எல்லாச் சபைகளிலும் நிராகரிக்கப்பட்ட என் கவிதைகளை உங்கள் செவிகளில் மட்டும் அழுதுகொண்டே அரங்கேற்றியவன்.

சகாராவில் பறந்து கொண்டிருந்த பருவத்தில் உங்களிடம் மட்டும் சில மழைத்துளிகளைப் பரிசு பெற்றவன்.

உங்கள் ரசிகன்.

ஆமாம் டீச்சர்! அந்த வைரமுத்துதான் நான்!

என் பெயர் வேண்டுமானால் இப்போது விண்ணிலும் காற்றிலும் எழுதப்பட்டிருக்கலாம்; நான் தரையில்தான் இருக்கிறேன்.

என்னை உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா டீச்சர்?

உங்களை எனக்கு ஞாபகமிருக்கிறது.

மழை நின்ற பிறகும் மரங்கள் மட்டும் சொட்டிக் கொண்டிருப்பது மாதிரி இருபத்தொரு வருடங்களுக்குப் பிறகும் அந்த நினைவுகள் மட்டும் இன்னும் துளித் துளிகளாய்... துளித் துளிகளாய்...

நான் பார்த்த முதல் நவநாகரிக நங்கை நீங்கள்.

அதிர்ந்து பேசாத வீணை.

உங்கள் மெல்லிய இளங்கறுப்பு நிறத்துக்கு ஏற்றதாக நித்தமொரு புடைவை கட்டி, குடை பிடித்த கொடியாய் நீங்கள் பள்ளிக்கு வரும்போது பள்ளியெங்கும் மதிப்போடு கூடிய ஒரு பரவசம் பரவப் பார்த்திருக்கிறேன்.


உங்களிடம் என்னை பாதித்தது எது தெரியுமா?

உங்கள் சோகம்.

உங்கள் கண்களில் ஒரு சோகம்; உங்கள் சிரிப்பில் ஒரு சோகம்.

உங்கள் கூந்தலில் எப்போதாவது அத்திப்பூவாய்ப் பூக்கும் ஒரு ரோஜாப் பூவிலும் கூட, கண்ணீர் சொட்டுச் சொட்டாய்ச் சொட்டுவதாய் ஒரு சோகம்.

மலைப் பிரதேசத்தில் மட்டுமே மலரும்




ஒரு பூச்செடியைத் தரையில் பெயர்த்து நட்டு வைத்த மாதிரி ஏதோ ஒரு வாட்டம் இருந்தது உங்களுக்குள்.

உங்கள் பூர்வீகம் யாது? உங்கள் உள்ளார்ந்த சோகத்தின் உள்ளர்த்தம் என்ன? என்று கேட்டறியும் வயதோ உரிமையோ வாய்க்கவில்லை எனக்கு.

ஏதோ ஒரு நடுத்தர வர்க்கத்துக் குடும்பத்தில் பிறந்து வறுமைக் கோட்டின் கீழே வௌவ்வாலாய் வளர்ந்து, அரும்பாடுபட்டு ஆசிரியர்ப் பயிற்சி முடித்து தண்ணீரில் பாதி தரையில் பாதி என்று தவளை வாழ்க்கை வாழ்ந்த சோகம் தான் உங்களுடையதாய் இருக்குமென்று இப்போது என்னால் அரை குறையாய் அனுமானிக்க முடிகிறது.

ஆனால் அப்போது...? சோகம் எப்படி சோகத்தை விசாரிக்கும்?

கண்ணீர் எப்படிக் காயத்தைக் கேள்வி கேட்கும்?

உங்களை நான் நேசித்த காரணம் உங்கள் சோகமென்றால் என்னை நீங்கள் நேசித்த காரணம் என் சோகம் தானோ?

நிறமற்ற வாழ்க்கையால் சாரமற்ற சம்பவங்களால் சலித்துக் கிடந்த என்னை சந்தோஷத்தின்பால் ஆற்றுப்படுத்தியது எப்போதும் கவிதை; எப்போதாவது நீங்கள்.

என்னைச் சுற்றி வயல்கள் இருந்தன; நெல் மணிகள் இல்லை.

என்னைச் சுற்றி மரங்கள் இருந்தன; நிழல்கள் இல்லை.

என்னைச் சுற்றி உறவுகள் இருந்தன; உற்சாகம் இல்லை.

என் கனவுகளுக்கும் என் எதார்த்தங்களுக்குமிடையே நுரைகளுக்கும் முத்துக்களுக்கும் உள்ள வித்தியாசம் இருந்தது.

சிலந்தி தன் வாயிலிருந்து உமிழும் திரவத்தில் வலை பின்னுமாமே- அப்படி வாலிபம் வருவதற்கு முன்பே என் சோகங்களே வலை பின்னியிருந்தன.

மீசை முளைப்பதற்கு முன்பே நரைத்தவனுக்குரிய துயரம் என் தோள்களிலிருந்தது.

எனவே பள்ளிக் கூடத்தில் பலரோடும் பேசாதவனாகவும்- குஞ்சாகப் பொரிக்கப்பட்ட பிறகும் அடிக்கடி முட்டைக்குள் போக ஆசைப் பட்டவனாகவும்- தனிமையோடு மட்டுமே சம்பாஷிப்பவனாகவும் இருந்த என்னை ஒரு சோக தேவதையான நீங்கள் அடையாளம் கண்டதில் ஆச் சரியமில்லை.

என்னால் இப்போதும்கூட புரிந்து கொள்ள முடியவில்லை டீச்சர்.

உங்களை யாராவது கேலி செய்தால் என் சட்டையில் ஏன் தீப்பிடித்தது?

நீங்கள் விடுமுறையில் சொந்த ஊர் போனால் என் கண்களில் ஏன் கண்ணீர் கப்பியது?

எனது ஒவ்வொரு புதுப் பேனாவும் முதன் முதலில் உங்கள் பெயரை ஏன் எழுதிப் பார்த்தது?

பாசம்- ஏதோ ஒரு பாசம்; சொல்ல முடியாத சோக பந்தம்.

-வைரமுத்து-

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பாகப்பிரிவினை

வஜ்ரபுரியிலிருந்த ஜெயராமன் பெரிய செல்வர்.

இளமையில் வறுமையில் உழன்ற அவர் தனது கடும் உழைப்பினாலும், திறமையினாலும் வியாபாரத்தில் பல



இலட்சங்களைக் குவித்தார்.

ஆனால் சிறு வயதில் தான் ஏழ்மையினால் உண்ண உணவின்றி அடைந்த துன்பங்களை அவர் மறக்கவில்லை.

அதனால் பசியுடன் யார் அவர் வீட்டை நாடி வந்தாலும் வயிராற உணவளித்தார்.


அதனால் அவர் வீடு ஒரு தர்ம சத்திரம் போல் திகழ்ந்தது.

அவருக்கு மூன்று பிள்ளைகள் இருந்தனர்.

ரகுபதி, ராகவன், ராஜாராமன் என்ற அவருடைய பிள்ளைகள், தனித்தனியாக தந்தையின் கீழ் வியாபாரத்தில் ஈடுபட்டு அவருக்கு செல்வம் தேடித் தந்தனர்.

வயதாக, வயதாக, ஜெயராமனுக்கு வியாபாரத்தை விட்டு ஓய்வெடுக்கத் தோன்றியது.

தனது வியாபாரத்தை முழுவதுமாக தன் பிள்ளைகள் அவரவர்கள் செய்து வந்த துறைகளிலேயே விட்டுவிட எண்ணினார்.



முழுப் பொறுப்பையும் அவர்களுக்கு அளித்து விட்டு, தான் அமைதியாகக் காலம் கழிக்க எண்ணினார்.

தன்னுடைய நண்பர் குமரனிடம் அதைப் பற்றி ஒருநாள் தீவிரமாக ஆலோசனை செய்தார்.

குமரனுடைய ஆலோசனைப்படி சொத்துகளை மூவருக்கும் சமமாகப் பங்கிட முடிவு செய்தார்.

ஆனால் மாளிகை போன்ற தன் வீட்டை பாகப்பிரிவினை செய்ய அவர் விரும்பவில்லை.

குமரனிடம் "என் வீடு சாட்சாத் அன்னபூரணி வாசம் செய்யுமிடம்! இங்கு தினமும் பசியுடன் வரும் பலர் உணவு உண்டு செல்கின்றனர்.

இந்த அன்னதானப் பணி நான் காலஞ் சென்ற பிறகும் தொடர வேண்டும் என்பதே என் அவா! அதனால் எந்த ஒரு மகன தொடர்ந்து அன்னதானம் செய்வானோ, அவனிடம் வீட்டை முழுமையாக விட்டுச் செல்ல எண்ணுகிறேன்.

ஆனால் என் பிள்ளைகள் மூவருமே நல்லவர்கள் தான்! ஆனால், நான் நடத்தி வரும் அன்னதானப் பணியைத் தொடர்ந்து செய்யும் மனப்பான்மை உடைய மகன் யார் என்று என்னால் சரிவர நிர்ணயிக்க முடியவில்லை! அதற்கு நீ யோசித்து எனக்கு ஆலோசனை கூறுவாய்!" என்றார் ஜெயராமன்.

"மிகவும் சிரமமான ஒரு வேலையை என்னிடம் ஒப்படைக்கிறாய்! இருந்தாலும் உனக்காக இதைச் செய்கிறேன்" என்று கூறிய குமரன் விடை பெற்றார்.

மூன்று நாட்கள் யோசித்த பின், குமரனுக்கு ஒரு யோசனை தோன்றியது.

அதைப் பற்றி ஜெயராமனுக்குத் தெரிவிக்க, அவரும் இசைந்தார்.

பிறகு தன் யோசனையை செயலாக்கக் குமரன் முன்வந்தார்.

முதலில் அவர் ஜெயராமனின் முதல் பிள்ளையான ரகுபதியை அழைத்து, "ரகுபதி, இமயமலையில் இருந்து சில நாட்களுக்கு முன் திரும்பி வந்த யோகி ஒருவர் என் வீட்டிற்கு விஜயம் செய்தார்.

அவர் நான்கு சக்திவாய்ந்த பழங்கள் கொண்டு வந்தார். அவற்றை உண்பவர்கள் அசுவினி தேவர்களின் அருளினைப் பெறுவார்கள் என்றும், தீர்க்க ஆயுள், ஆரோக்கியம், ஐஸ்வரியம் அனைத்தையும் அடைவார்கள் என்றும் கூறி அவற்றை எனக்கு அளித்துவிட்டுப் போனார்.

நான் வயதானவன் என்பதால், அவற்றில் எதையும் நான் உண்ணாமல், என்பிள்ளைகள் மூவருக்கும் அவற்றைப் பகிர்ந்தளித்து விட்டேன்.

எஞ்சியது ஒன்றுதான்!" என்று தான் கொண்டு வந்த மாம்பழத்தைக் காட்டினார்......

(தொடரும்)

## 13.04.2014 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1111 - ஐந்தாம் ஹென்றி புனித ரோம் பேரரசின் மன்னனாக முடி சூடினான்.
- 1605 - ரஷ்யாவின் சார் மன்னன் பொரிஸ் குடுனோவ் மரணமானான். இரண்டாம் ஃபியோ தர்சார் மன்னனானான்.
- 1829 - பிரித்தானிய நாடாளுமன்றம் உரோமன் கத்தோலிக்கர்களுக்கு மதவுரிமை அளித்தது.
- 1849 - ஹங்கேரி நாடு குடியரசானது.
- 1861 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: சம்ட்டர் கோட்டை அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்புப் படைகளிடம் சரணடைந்தது.
- 1868 - பிரித்தானிய மற்றும் இந்தியப் படைகள் மக்டாலாவைக் கைப்பற்றியதில் அபினீசியப் போர் முடிவுக்கு வந்தது.
- 1930 - மகாத்மா காந்தியின் உப்புச் சத்தியாக்கிரகதிற்கு ஆதரவாக தென்னிந்தியாவில் ராஜாஜி தலைமையில் பாத யாத்திரை தொடங்கப் பட்டது.
- 1939 - இந்தியாவில் இந்திய செம்படை என்ற இராணுவ அமைப்பு பிரித்தானியர்களுக்கு எதிரான ஆயுதப்போராட்ட அமைப்பு ஆரம்பிக் கப்பட்டது.
- 1941 - ஜப்பானுக்கும் சோவியத் ஒன்றியத்துக்கும் இடையில் அணிசேரா உடன்பாடு எட்டப்பட்டது.
- 1943-இரண்டாம் உலகப் போர்: போலந்தில் கட்டின என்ற இடத்தில் சோவியத் படைகளால் சுட்டுக் கொல்லப்பட்ட போலந்து போர்க் கைதிகளின் புதைகுழிகளைத் தாம் கண்டுபிடித்ததாக ஜேர்மனி அறிவித்தது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியில் கார்டெலகான் என்ற இடத்தில் ஆயிரம் போர் மற்றும் அரசியல் கைதிகள் நாசிகளினால் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1953 - இயன் ஃபிளமிங் தனது முதலாவது ஜேம்ஸ பொண்ட் புதினத்தை வெளியிட்டார்.
- 1954 - காமராசர் சென்னை மாநிலத்தின் முதல்வரானார்.
- 1970 - அப்பல்லோ 13 விண்கலத்தில் ஒட்சிசன் தாங்கி வெடித்தது.
- 1974 - ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது வணிக செய்மதி வெஸ்டார் 1 ஏவப்பட்டது.
- 1975 - லெபனானில் 27 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதை அடுத்து அங்கு உள்நாட்டுப் போர் ஆரம்பமானது.
- 1979 - இலங்கையில் சுயாதீன தொலைக்காட்சி சேவை ஆரம்பிக்கப்பட்டது.
- 1984 - இந்தியா காஷ்மீரின் சியாச்சென் கிளேசியரை ஆக்கிரமித்தது.
- 1987 - மக்காவு தீவை மக்கள் சீனக் குடியரசிடம் 1999 இல் ஒப்படைக்கும் ஒப்பந்தம் போர்த்துக்கலுக்கும் சீனாவுக்கும் இடையில் கைச்சாத்தானது.
- 1997 - டைகர் வூட்ஸ் கோல்ஃப் மாஸ்ரர்ஸ் வென்ற இளம் வீரரானார்.
- 2006 - கூகிள் காலண்டர் வெள்ளோட்டம் விடப்பட்டது.
- 2007 - பிரபல தமிழ் தொலைக்காட்சி நடிகை வைஷ்ணவி தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.
- 2012- வட கொரியா ஏவிய ஊனா-3 என்ற ஏவூர்த வானில் வெடித்துச் சிதறியது.

### பிறப்புகள்

- 1743 - தோமஸ் ஜெபர்சன், மூன்றாவது அமெரிக்க ஜனாதிபதி (இ. 1826)
- 1906 - சாமுவேல் பெக்கெட், நோபல் பரிசு பெற்ற ஐரிஷ் எழுத்தாளர் (இ. 1989)
- **1930 - பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியர் (இ. 1959)**
- 1934 - டேம் ஜேன் குட்டால், சிம்பன்சி பற்றி ஆராய்ந்த ஆங்கிலேயப் பெண்மணி
- 1939 - சீமுஸ் ஹீனி, நோபல் பரிசு பெற்ற ஐரிஷ் எழுத்தாளர்
- 1941 - மைக்கல் பிரௌன், மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்.
- 1949 - கிறித்தபர் ஃகிச்சின்சு, அமெரிக்க எழுத்தாளர், ஊடகவியலாளர்
- 1963 - காரி காஸ்பரோவ், ரஷ்ய சதுரங்க ஆட்டக்காரர்.
- 1979 - பேரன் டேவிஸ், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்.

### இறப்புகள்

- 1605 - பொரிஸ் குடுனோவ், ரஷ்யப் பேரரசன் (பி. 1551)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்




தமிழ் நாடு மாநிலம் தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை அருகே உள்ள சங்கம் படைத்தான் காடு என்னும் சிற்றூரில் அருணாச்சலனார் - விசாலாட்சி ஆகியோருக்கு இளைய மகனாக '13.04.1930 இல் எளிய விவசாய குடும்பத்தில் பிறந்தார். இவர் ஒரு சிறந்த தமிழ் அறிஞர், சிந்தனையாளர், பாடலாசிரியர் ஆவார். எளிமையான தமிழில் சமூக சீர்திருத்தக் கருத்துகளை வலியுறுத்திப் பாடியது இவருடைய சிறப்பாகும். இவருடைய பாடல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டுள்ளன.

பள்ளிப்படிப்பு மட்டுமே கற்க முடிந்த கல்யாணசுந்தரம் திராவிட இயக்கத்திலும், கம்யூனிசத்திலும் ஈடுபாடு கொண்டிருந்தார். இவருடைய துணைவியார் பெயர் கௌரவாம்பாள். 1959-ஆம் ஆண்டு இவர்களுடைய குழந்தை குமரவேல் பிறந்தது. அதே ஆண்டில் (08.10. 1959) இவர் அகால மரணம் அடைந்தார்.

# "ஜய" வருட ராசிபலன்கள்

# கடகம்



புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்

**ராகு மாற்றமும் கேது மாற்றமும் யோகம் தரும்!**
**பொதுநலத்தில் ஈடுபட்டு புகழ் குவிக்கும் கடக இராசி நேயர்களே!**

பிறக்கும் புத்தாண்டில் ஜய வருடம் சந்திரனுக்குரிய ஓரையில், சந்திரனுக்குரிய கிழமையான திங்கட்கிழமை அன்று சந்திர மங்கள யோகத்தோடு கூடிய கிரக நிலைகள் அமையும் விதத்தில் பிறக்கிறது.

சந்திரனை இராசிநாதனாகக் கொண்ட உங்களுக்கு இந்தப் புத்தாண்டு சிந்தித்த காரியங்களில் எல்லாம் வெற்றியையே வழங்கப் போகிறது.

**கவர்ந்திழுக்கும் ஆற்றல் பெற்றவர்**

மனதுக்காரகன் என்றும், மாதாகாரகன் என்றும் வர்ணிக்கப்படும் சந்திரன் உங்கள் இராசிநாதனாக விளங்குவதால் சாதாரண மனிதர்களிலிருந்து சக்கரவர்த்தி வரை பேச்சுத்திறமையால் கவர்ந்திழுக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு.

குண்டூசி அளவுள்ள விடயத்தை யானை அளவாக மிகைப்படுத்திப் பார்ப்பவர்கள் நீங்கள். மற்றவர்கள் செய்ய முடியாது என்று ஒதுக்கிய காரியங்களைக் கூட நீங்கள் மகத்தாக செய்து காட்டுவீர்கள்.

சந்திரனை சொந்த வீடாகக் கொண்ட

## சிவல்புரி சிங்காரம்

நீங்கள் எதைப் பற்றிச் சிந்தித்தீர்களோ, அது அப்படியே நடந்துவிடும். நேர்மறையான சிந்தனைகள் உள்ளத்தில் உதித்தால் நல்ல விதமாக அது நடக்கும். எதிர்மறையான சிந்தனைகளையே நினைத்தால் எல்லாமே ஏறுக்கு மாறாகவே நடக்கும்.

**எப்படி இருக்கும் ஜய வருடம்?**

இப்படிப்பட்ட அமைப்புகளைப் பெற்ற உங்களுக்கு இந்தப் புத்தாண்டு சனி மற்றும் செவ்வாயின் வக்ர இயக்கத்தோடு பிறக்கிறது. செவ்வாய் உங்கள் இராசிக்கு நன்மை செய்யும் கிரகமாகும். விரய ஸ்தானத்தில் குரு சஞ்சரித்து சுக்ரனைப் பார்க்கிறார். சுக ஸ்தானம், ருண, ரோக ஸ்தானம், அஷ்டம ஸ்தானம் ஆகியவற்றில் குருவின் பார்வை பதிகிறது.

பொதுவாக குரு 12 இல் சஞ்சரித்தாலும் அதன் பார்வை 6 ஆம் இடத்தில் பதிவது யோகம்தான். ஒரு தொகை செலவழிந்த பிறகே அடுத்த தொகை உங்கள் கரங்களில் புரளும்.

வலுவிழந்து இந்தாண்டு பிறக்கிறது. அதே நேரத்தில் யோகம் செய்யக் கூடிய செவ்வாயும் வக்ர இயக்கத்திலேயே இருக்கிறார். எனவே, உடன் பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்துகொள்வார்களா என்பது சந்தேகம்.

சனியும், சுக்ரனும் பரிவர்த்தனை ஆகி இருப்பது ஒரு வழிக்கு நன்மைதான். வாங்கிய சொத்துக்களின் மீது இருந்த கடனுக்கு வட்டிகட்ட முடியவில்லையே என்று கவலைப்பட்ட நீங்கள் வேறொரு சொத்தை விற்று அந்த கடனை அடைக்க முடிவு செய்வீர்கள்.

தனாதிபதி சூரியன் உச்சம் பெற்றுக் கேதுவோடு இணைந்து இருப்பதால் திடீர், திடீர் என பண வரவு வந்து திகைக்க வைக்கும்.

சகோதர ஸ்தானத்தில் சந்திரன் செவ்வாயோடு இணைந்து சந்திர மங்கள யோகத்தை உருவாக்குகிறார். எனவே, சகோதர வழியில் ஒரு சுப காரியம் வருடத் தொடக்கத்தில் நடைபெறும்.

12 ஆம் இடத்து குருவால் பயணங்கள் அதிகரிக்கும். நூதனப் பொருட்களை வாங்கி குவிப்பீர்கள். இடமாற்றம், வீடு மாற்றம், நாடு மாற்றம் என்று ஏதேனும் ஒரு மாற்றம் வந்து சேரலாம்.

கறைகாட்டி செலவுகளை சிக்கனப்படுத்துவீர்கள். போராடிய சகோதர வர்க்கத்தினர் உங்கள் சொற்கேட்டு மறுமலர்ச்சியடைவர். அண்டை அயலாரின் ஒத்துழைப்போடு அந்நிய தேச வாய்ப்புகளும் கைகூடும்.

பெற்றோர்கள் தங்கள் செயலுக்கு நன்றி காட்டவில்லை, மற்ற சகோதரர்களுக்கு செய்யும் ஒத்துழைப்பைப் போல நமக்கு செய்யவில்லை என்று ஏங்கியவர்கள் இப்பொழுது அன்னை தந்தையரின் அன்பிற்கு பாத்திரமாகி திக்குமுக்காடப்போகிறீர்கள்.

ராகு- கேது பெயர்ச்சிக்கு பரிகாரம் செய்வதன் மூலமும் அனுகூலம் தரும் ஸ்தலங்களில் யோக பலம் பெற்ற நாளில் சர்ப்ப சாந்திகளை செய்வதன் மூலமும் நற்பலன்களை நாளும் வரவழைத்துக் கொள்ள இயலும்.

**பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகும் சனிபகவான்!**

ஜய வருடம் மார்கழி மாத தொடக்க நாள் முதல் பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார். 7,8 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனி பகவான் 5 இல் சஞ்சரிக்கும் பொழுது குழந்தைகளின் சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும்.

தும் அளவிற்கு பணம் புரளும். மேலான புகழ்மிக்க மனிதர்களின் தொடர்பு ஏற்படும்.

சச்சரவோடு வாழ்ந்தவர்கள் இனி சமாதானமாகி உங்களைச் சார்ந்திருக்கப் பிரியப்படுவர். அதன் பார்வை 5,7,9 ஆகிய இடங்களில் பதிகிறது.

**ஐந்தினை குருதான் பார்த்தால்**
**அனைத்திலும் வெற்றி கிட்டும்**
**ஏழினை குருதான் பார்த்தால்**
**இல்லற வாய்ப்பும் கிட்டும்**
**ஒன்பதைக் குருதான் பார்த்தால்**
**பொன்பொருள் குவியும் என்பார்**
என்பது ஜோதிட நியதி.

எனவே, குருவின் பரிபூரண பார்வையால் பிள்ளைகளின் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். இல்லறம் ஏற்கத் துடிக்கும் இளைய தலைமுறையினராக இருந்தால் அவர்கள் மணமாலை சூடிக் கொள்ளும் வாய்ப்பு கிட்டும். தாய், தந்தை பாசம் குறைவாக இருப்பவர்கள் இப்பொழுது பெற்றோர்களின் அன்பிற்குப் பாத்திரமாகி பிரச்சினைகளிலிருந்த விடுபடுவர். உற்றார், உறவினர்கள் உங்கள் முன்னேற்றத்திற்கு வித்திடுவர். வாகன யோகம் உண்டு. கடல் தாண்டிச் செல்லும் வாய்ப்பு கைகூடும். குருவின் வக்ர காலத்தில் மட்டும் கூடுதல் கவனம் செலுத்துங்கள்.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு இலாகா மாற்றம் எளிதில் கிடைக்கும்.

அந்நிய தேசத்திலிருந்து வரும் அழைப்புகள் ஆச்சரியப்பட வைக்கும். அதை ஏற்றுக் கொள்வதா, வேண்டாமா என்பது உங்கள் தெசா புத்தி அடிப்படையில் தெரிந்து கொள்ள வேண்டும்.

**நலம் தரும் இராகு, கேது பெயர்ச்சி!**

ஆனி மாதம் 7 ஆம் திகதி (21.06.2014) அன்று கன்னி இராசியில் ராகுவும், மீன ராசியில் கேதுவும் சஞ்சரிக்கிறார்கள். வருடக் கடைசிவரை அங்கேயே இருக்கிறார்கள். உங்கள் இராசிக்கு 3 ஆம் இடத்தில் ராகுவும் 9 ஆம் இடத்தில் கேதுவும்



சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் உன்னதமான பலன்கள் ஒவ்வொன்றாக வந்து

புதிய இழப்புக்களை ஈடு செய்யும் விதத்தில் தொழில் மாற்றச் சிந்தனைகளும், தொடர்புகளும் ஏற்படும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பிவந்து சேருவர். சனியின் வக்ர காலத்தில் கொஞ்சம் கூடுதல் கவனம் தேவை.


மாசி மாதம் 30 ஆம் திகதி முதல் வருடக் கடைசி வரை வக்ர இயக்கத்திலேயே சனி சஞ்சரிக்கிறார். இக்காலத்தில் அலைச்சல் அதிகரிக்கும். ஆதாயம் குறையும். தொழில் எதிர்பார்த்தபடி நடைபெறவிடாமல் ஏமாற்றங்களை கூட்டாளிகள் சந்திக்க வைப்பர். உங்களின் புத்திசாலித்தனமான செயற்பாடுகளால்தான் பொருளாதாரத்தைப் பெருக்க இயலும்.

**வழிபாட்டின் மூலமே நன்மை கிடைக்கும் காலம்!**

14.07.2014 முதல் 31.08.2014 வரை துலாம் இராசியில் செவ்வாய் சனி சேர்க்கை உருவாகிறது. இக்காலத்தில் ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்க்ள் வரும். அன்றாடப் பணியில் தொய்வு ஏற்படும். வியாபார விரோதங்கள் வளரும். மிகுந்த கவனத்துடன் செயற்படுவது நல்லது. சிறப்பு வழிபாடு செயற்பாடுகளில் வெற்றிய்யக் கொடுக்கும்.

**குருப்பெயர்ச்சி பலன்!**

இதுவரை விரய ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான் வைகாசி 30 ஆம் திகதியன்று (13.06.2014) ஜென்ம இராசி



**கடக இராசியில் பிறந்த பெண்களுக்கு!**

பிள்ளைகள் வழியில் சுபகாரியங்கள் நடைபெறும்!

ஜயவருடத்தில் குரு பகவானின் பார்வை அர்த்தாஷ்டமச் சனியின் மீது பதிவதால் ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். அடுக்கடுக்காக அதிர்ஷ்ட வாய்ப்புகள் வந்து கொண்டே இருக்கும். பண வரவு திருப்தி தரும். பக்கத்து வீட்டாரின் பகை மாறும். சகோதர வழியில் சலசலப்புகள் ஏற்படலாம். கணவன்- மனைவிக்குள் கனிவும் கலகலப்பும் அதிகரிக்கும். குருப் பெயர்ச்சிக்குப் பின்னால் கொடுக்கல்- வாங்கல்கள் சிறப்பாக இருக்கும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேருவர். அடகு வைத்த நகைகளை மீட்டு வந்து அணிந்து அழகு பார்ப்பீர்கள். பொது நல ஈடுபாடு கொண்டவர்களுக்கு புதிய பொறுப்புகள் வந்து சேரும். சனிப் பெயர்ச்சிக்குப் பின்னால் சங்கடங்கள் சிலவற்றைச் சந்திக்க நேரிடும். அனுமன் வழிபாடும் அரவுக் கிரக வழிபாடும் ஆனந்தம் வழங்கும்.

# ராகு மாற்றமும் கேது மாற்றமும் யோகம் தரும்!

அரசு வழிச் சலுகைகள் ஆச்சரியப்படும் விதத்தில் கிடைக்கும். பொருளாதார நிலை உயரும். அருளாளர்களின் தொடர்பும் உங்களுக்கு அடிக்கடி ஏற்படும்.

அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம்

சேரும். முன்னேற்றத்தில் இருந்த முட்டுக்கட்டைகள் அகலும்.

சின்னச் சின்ன ஆசைகளை எல்லாம் நிறைவேற்றிக்கொள்வீர்கள். சிறுதுளி பெரு வெள்ளம் என்பது போல சேமிப்பில் அக

யில் சஞ்சரிக்கப் போகிறார். உங்கள் இராசி குருவிற்கு உச்ச வீடாகும். உச்சம் பெற்ற ஒரு கிரகம் உங்கள் இராசியில் இருந்தால் அச்சமில்லாத வாழ்க்கைக்கு அடித்தளமிடும் என்பதில் சந்தேகமில்லை. மிச்சம் வைக்


**சிறப்பு வழிபாடுகள்!**

**பொதுவாக இராசிநாதன் சந்திரன் என்பதால் பௌர்ணமி விரதமிருந்து அம்பிகை வழிபாட்டை மேற்கொள்வது நல்லது. யோக பலம் பெற்ற நாளில் பிள்ளையார், அமிர்தகடேஸ்வரர், அபிராமி அம்மன் ஆகிய தெய்வங்களை வழிபட்டு வருவதன் மூலம் எல்லா நலங்களும் வளங்களும் பெருகும்!**

**நாளை சிம்மம்....**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோலுரிக்கப்படும் இந்தியா!



இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் கொண்டு வரப்படும் தீர்மானங்கள் எல்லாமே இந்தியாவை சர்ச்சைக்குள் மாட்டிவிடுபவையாகவே இருக்கின்றன. கடந்த இரண்டு வருடங்களைப் போலல்லாது, இந்தமுறை மாறுபட்ட முடிவை எடுத்திருந்தபோதிலும், சர்ச்சையிலிருந்து இந்தியாவினால் விடுபட முடியாதுள்ளது. இந்தியா ஏன் இந்த முடிவை எடுத்தது? இந்தியாவின் சார்பில் இந்த முடிவை எடுத்தது யார்? என்ற விவாதங்கள் இன்னமும தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றன.

புதுடெல்லியை கடந்த 10 வருடங்களாக ஆட்சி செய்த காங்கிரஸ் அரசாங்கத்தின் அந்திம காலத்தில் எடுக்கப்பட்ட முக்கியமான முடிவாக இது இருப்பதால், இது குறித்த விவாதங்கள் அதிகளவில் நடப்பது தவிர்க்க முடியாதது. ஏனென்றால், பெரும்பாலும் ஆட்சி மாற்றம் நிகழப்போவது உறுதியாகி விட்டதால், இந்தியாவின் இந்த முடிவு அடுத்து வரப்போகின்ற அரசாங்கத்தையும் பாதிக்கும் ஒன்றாக இருக்கும்.

எனவே, அடுத்து அமையப்போகும் அரசாங்கத்தின் வெளிவிவகாரக் கொள்கையின் மீது தாக்கத்தை ஏற்படுத்தவல்ல இந்த முடிவு குறித்து ஊடகங்களும் இராஜதந்திரிகளும் அரசியல் தலைமைகளும் சற்றுக் கூடுதலாகவே கவனம் செலுத்துவதைக் காணமுடிகிறது.

இந்தப் பின்னணியில் இந்தியாவினது முடிவு குறித்து எழுகின்ற விவாதங்களும் விமர்சனங்களும் இந்திய வெளிவிவகார அமைச்சை சற்றுக் குழப்பத்துக்குள்ளாக்கி விட்டுள்ளது போலவே தோன்றுகிறது. ஏனென்றால், கடந்த இரண்டு வருடங்களாக இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஆதரித்த இந்தியா, திடீரென இம்முறை நடுநிலை வகித்தது சர்ச்சையாகவே பார்க்கப்படுகிறது.

எனவே, இந்திய வெளிவிவகார அமைச்சு வழக்கத்தை விடவும் கூடுதலாகவே தம்மை நியாயப்படுத்தி விளக்கமளிக்க முனைந்துள்ளதைக் காணலாம். ஜெனீவா தீர்மானத்துக்குப் பின்னதாக, இந்திய வெளிவிவகார அமைச்சு பல சந்தர்ப்பங்களில் தமது நிலைப்பாட்டை நியாயப்படுத்த முனைந்துள்ளது.

ஜெனீவாவில் இந்தியப் பிரதிநிதி திலிப் சின்ஹா வெளியிட்ட அறிக்கை, அதற்கடுத்து புதுடெல்லியில் இந்திய வெளிவிவகாரச் செயலர் சுஜாதா சிங் வெளியிட்ட அறிக்கை, அதற்கடுத்து அவர் பி.ரி.ஐக்கு வழங்கிய பேட்டி, கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் யஸ்வந்த்குமார் சின்ஹா வெளிநாட்டுச் செய்தியாளர்களுக்கு நடத்திய செய்தியாளர் சந்திப்பு என்று ஜெனீவா நிலைப்பாடு குறித்து நியாயப்படுத்த பல்வேறு முயற்சிகளையும் இந்தியா மேற்கொண்டுள்ளது.

இதில் இன்னொரு விவகாரமும் கவனிக்கத்தக்கது. அதாவது ஜெனீவா தீர்மானம் குறித்து தமிழ்நாட்டைச் சேர்ந்த மத்திய அமைச்சர்கள் ப.சிதம்பரம், ஜி.கே.வாசன், நாராயணசாமி, சுதர்சன நர்ச்சியப்பன் ஆகியோர் தவிர இந்திய மத்திய அரசின் மூத்த அமைச்சர்களோ, இந்தியப் பிரதமரோ, காங்கிரஸ் தலைவர்களோ எந்தக் கருத்தையும் இதுவரை வெளியிடவில்லை.

இது தேவையற்ற சர்ச்சையை தேர்தல் நேரத்தில் வளர்த்துக்கொள்வதை தவிர்ப்பதற்கான உத்தியாக இருக்கலாம். தற்போதைய நிலையில் ஜெனீவா நிலைப்பாடு குறித்து மத்திய அமைச்சர்களோ, காங்கிரஸ் தலைமையோ கொடுக்கக்கூடிய எந்தவொரு விளக்கமும் விபரீதமான விளைவுகளுக்கு வத்திடும் வாய்ப்புகள் உள்ளன. ஏனென்றால், இந்தியாவினது முடிவு சர்ச்சைக்குரியதானதாகவும் குழப்பங்கள் நிறைந்ததாகவுமுள்ளது. தெளிவான விதத்தில் இந்தியா வினது நிலைப்பாடு வெளிப்படுத்தப்பட்டிருந் தால், இந்தச் சர்ச்சை வலுப்பெற்றிருக்காது.

கடந்த வருடங்களில் கூட இந்தியா தீர்மானத்தை ஆதரித்திருந்தாலும், அந்த தீர்மானந்தை நீர்த்துப்போகச் செய்வதிலும் முக்கிய பங்காற்றியதான குற்றச்சாட்டுகள் இருந்து வந்தன. அந்தக் குற்றச்சாட்டு பொய்யானது என்று இந்திய அரசு எத்தனையோ முறை மறுத்திருந்தாலும், அது கருத்தில் எடுக்கப்படவில்லை. இந்த நிலையில், மீண்டும் இந்த முறை தீர்மானத்தை நிறைவேற்ற விடாமல் தடுப் பதற்கும் அதனை நீர்த்துப்போகச் செய்வதற்கும் பாகிஸ்தானுடன் கூட வெளிப்படையாக கைகோர்த்து நின்றது இந்தியா.

எனவே, கடந்த முறைகளில் தீர்மானங்களைப் பலவீனப்படுத்துவதற்கு இந்தியா எந்த முயற்சிகளையும் மேற்கொள்ளவில்லை என்று கூறியதும் உண்மைதானா என்ற கேள்வியை எழுப்ப வைத்துள்ளது.

இந்தப் பின்னணியில் எதற்காக இந்தியா இந்தமுறை நடுநிலை வகிக்கும் முடிவை எடுத்தது என்ற கேள்விக்கு சரியான, உறுதியான ஒரே பதில் இந்தியாவிடமிருந்து வரவில்லை என்பது கவனிக்கத்தக்கது. அதாவது யாருடைய நலனுக்காக இந்தியா இந்த முடிவை எடுத்தது என்பதற்கு எந்த விளக்கமும் இல்லை. ஜெனீவா தீர்மானத்துக்குப் பின்னதாக, இந்தியத் தரப்பில் கருத்து வெளியிட்டவர்கள் பலரும் பலவிதகாரணங்களைக் கூறியுள்ளனர்.

இந்தியாவினது தேசிய நலன் கருதி என்று, இலங்கையில் உள்ள தமிழர் களினது நலன் கருதி என்று, தமிழ்நாட்டு மீனவர்களின் நலன கருதி என்று, சீனத் தலையீட்டை கட்டுப்படுத்துவதற்காக என்று, இலங்கையின் மீது அளவற்ற தலையீட்டைச் செய்வதால் என்று இந்தியாவினது நிலைப் பாட்டுக்கான காரணங்கள் வேறுபட்டுள்ளன.

எவ்வாறாயினும், ஒன்றை மட்டும் விளங்கிக்கொள்ள முடிகிறது. அது என்னவென றால், எல்லாத் தரப்பினரையும் திருப்பதிப்படுத்த இந்தியா முனைகிறது என்பதே அது. அதனால் தான், அவரவருக்கேற்ப காரணத்தை கூறிச் சமாளிக்க முனைகிறது.

இந்தியாவை பொறுத்தவரையில், இலங்கையின் உள்விவகாரங்களுக்குள் வெளிநாட்டுத் தலையீடுகள் இருக்கக்கூடாது என்பதே அதன் ஒரே நிலைப்பாடாக உள்ளது. அதனால், சர்வதேச விசாரணை என்ற விடயத்தை அதனை ஏற்க முடியாதுள்ளது. இதுதான் முதலும் இறுதியுமான இந்தியாவினது முடிவுக்கான காரணம். மற்றெல்லாமே துணைக் காரணங்களாகவோ அல்லது எல்லாத் தரப்புகளையும் திருப்திப்படுத்துவதற்காக கூறப்பட்ட காரணங்களாகவோ இருக்கலாம். எதற்காக சர்வதேச விசாரணை என்பதை இந்தியா எதிர்க்கிறது என்று பார்த்தால், அது இலங்கையினது நலனைக் காப்பாற்றுவதற்கான முயற்சியாகவே வெளித் தெரியலாம். ஆனால், இந்தியா சர்வதேச விசாரணை முயற்சிகளை எப்போதுமே எதிர்த்து வந்த தற்கு இந்தியாவினது தேசிய நலனே பிரதான காரணம்.

சர்வதேச விசாரணைக்கு இந்தியா ஆதரவளித்தால், தானும் ஒரு கட்டத்தில் பொறியில் சிக்கிக்கொள்ள நேரிடும் என்ற கலக்கம் இந்தியாவுக்கு உள்ளது. காஷ்மீரில் இந்தியாவினது மனித உரிமை மீறல்கள் குறித்து எப்போதும் பாகிஸ்தான் பிரச்சினை எழுப்பி வந்துள்ளது. 1994ஆம் ஆண்டில் ஐ.நா. பொதுச்சபையில் இந்தியாவின் மனித உரிமை மீறல்களுக்கு எதிரான தீர்மானத்தை பாகிஸ்தான் கொண்டுவந்தது. அது இந்தியாவினது இறைமைக்குப் பெரும் அச்சுறுத்தலாகப் பார்க்கப்பட்டது. அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அட்டல் பிகாரி வாஜ்பாய், இப்போதைய இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்துடன் இணைந்து, ஐ.நா. விவாதத்தில் பங்கேற்று, இந்தியாவை நெருக்கடியில் இருந்து பாதுகாத்திருந்தார்.

அதுபோன்ற நிலை வரக்கூடாது என்பதற்காகவே இந்தியா இத்தகைய விவகாரங்களில் குறிப்பாக மனித உரிமை மீறல் விவகாரங்களைச் சுட்டிக்காட்டி கொண்டு வரப்படும் தீர்மானங்களை ஐ.நாவில் ஆதரிப்பதில்லை. அது இந்தியாவின் ஒரு கொள்கையாகவே கடைப்பிடிக்கப்படுகிறது. அதையும் மீறித்தான், உள்நாட்டு நெருக்குவாரங்களிலிருந்து தப்பிப்பதற்காக இலங்கைக்கு எதிராக 2012, 2013ஆம் ஆண்டுகளில் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களை இந்தியா ஆதரித்திருந்தது.

இந்தமுறை அத்தகைய நேரடி அரசியல் அழுத்தங்கள் இந்திய அரசுக்கு இருக்கவில்லை. அதுமட்டுமன்றி, ஜெனீவா தீர்மானத தினால், காங்கிரஸ் தலைமையிலான கூட்டணியினால், தமிழ்நாட்டில் ஆதாயம் தேடிக்கொள்ளும் வாய்ப்பும் இருக்கவில்லை. எனவே, முடிவெடுக்கும் விடயத்தில் மத்திய அரசு தலையீடு செய்ய முனையவில்லை.

அது இந்திய வெளிவிவகார அமைச்சின் கதவுகளை அகலத் திறந்துவிட்டது. அதன் வழியாகவே புதுடெல்லியினது முடிவு எடுக்கப்பட்டது. ஆனால், இப்போது இந்த முடிவை எடுத்தது யார் என்ற கேள்வி எழுந்துள்ளதுடன், ஒருவரையொருவர் சாட்டிக்கொண்டு ஒதுங்க முனைவதையும் காணமுடிகிறது.

ஜெனீவா தீர்மானத்தை இந்தியா ஆதரித்திருக்க வேண்டும் என்பதே தமது கருத்து என்று கூறியிருந்த மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம், இது அமைச்சரவையிலோ, காங்கிரஸ் கட்சி செயற்குழு மட்டத்திலோ எடுக்கப்பட்ட முடிவல்ல என்றும் வெளிவிவகார அமைச்சு மட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவே இது என்றும் கூறியிருந்தார்.

ஆனால், இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலர் சுஜாதா சிங், பி.ரி.ஐக்கு அளித்திருந்த பேட்டியில் வெளிநாட்டுக்கொள்கை விவகாரங்களில் அரசியல் தலைமையின் முடிவுகளின் அடிப்படையிலேயே அதிகாரிகள முடிவுகளை எடுப்பதாகவும் அதுபோலவே இதுவும் அரசியல் மட்டத்தின் முடிவே என்றும் குறிப்பிட்டிருந்தார்.

வெளிப்படையாக கூறுவதானால், நிதி அமைச்சர் ப.சிதம்பரத்தின் கருத்தை நிராகரித்தார் என்று கூறலாம்.

இதற்கிடையே ஜெனீவாவில் தீர்மானம் மீதான வாக்கெடுப்பு நடப்பதற்கு முதல் நாள் அதாவது, கடந்த மாதம் 26ஆம் திகதி இந்திய வெளிவிவகார அமைச்சர் தம்முடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு, இம்முறை இந்தியா வேறுபட்ட அணுகுமுறையை கடைப்பிடிக்கவுள்ளதாக கூறியதாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அலரி மாளிகையில் நடந்த உயர்மட்டக் கூட்டத்தில் தெரிவித்திருக்கிறார்.

அதாவது, அதிகாரிகள் மட்டத்திலேயே இம்முறை முடிவெடுக்கப்படும் என்று சல்மான் குர்ஷித் கூறியதாக அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் கூறியுள்ளார். இது இந்திய வெளிவிவகாரச் செயலர் சுஜாதா சிங்கினது கருத்துக்கு முரணானதாகவே உள்ளது. இந்திய அமைசசர் ப.சிதம்பரத்தின் கருத்தும் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸின் கருத்தும் கிட்டத்தட்ட ஒத்துப் போகின்றன. அவ்வாறாயின், இந்திய வெளிவ்வகார அமைச்சு மட்டும் எதற்காக இதனை அரசியல் முடிவாக காட்ட முனைகிறது என்ற கேள்வி எழுகிறது.

ஒருவேளை இந்திய வெளிவிவகார அமைச்சுக்கு இந்த முடிவை எடுப்பதற்கு பச்சைக்கொடி காண்பித்து விட்டு, இந்திய அரசியல் தலைமை ஒதுங்கியிருந்திருக்கலாம். எவ்வாறாயினும், இந்த முடிவை திரும் பத் திரும்ப நியாயப்படுத்த முனைகிற எந்தத் தரப்புமே, இந்த முடிவுக்குத் தாமே பொறுப்பு என்று கூறத் தயாராக இல்லை.

ஏனென்றால், இந்த முடிவின் தாக்கம் ஜெனீவா கூட்டத்தொடருடன் முடிந்து போகக்கூடிய ஒன்றல்ல. அதையும் தாண்டி இலங்கை விவகாரத்தில் இந்தியாவினது உறவு விடயத்தில், இதன் தாக்கம் தொடர்ந்து செல்லும் வாய்ப்புகள் உள்ளன.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் மூலம் சர்வதேச விசாரணை நடத்தப்படவுள்ள நிலையில், இந்தியாவின் நிலை குறித்த கேள்விகள் தொடர்ச்சியாக எழுவதற்கு வாய்ப்புகளுண்டு. அதிலும் உள்ளக விசாரணையை இந்தியா வலியுறுத்த ஆரம்பித்துள்ளது.

அதாவது, சர்வதேச விசாரணைகளுக்குப் பதிலாக இலங்கை அரசின் உள்ளக விசாரணைக்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகம் உதவ வேண்டும் என்று இந்தியத் தூதுவர் யஸ்வந்த் குமார் சின்கா கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

இங்கு இந்தியாவினது பரிதாப நிலை என்னவென்றால், இதுவரை இலங்கை அரசாங்கம் உள்ளக விசாரணைகளை நடத்தத் தயாராகவில்லை. இந்த நிலையில், சர்வதேச விசாரணை க்கு எதிரான தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்திவிட்ட இந்தியா, தமிழர்களின் நலன் கருதியே அந்த முடிவை எடுத்ததாகக் கூறிய இந்தியா, எவ்வாறு தமிழர்களுக்கு நியாயத்தைப் பெற்றுக் கொடுக்கப் போகிறது என்பது கேள்வியாக உள்ளது.


சர்வதேச விசாரணைப் பொறிமுறையை நிராகரிப்பதற்காக உள்ளக விசாரணைப் பொறிமுறையை வலியுறுத்த முனைந்துள்ள இந்தியா, அந்த உள்ளக விசாரணைப் பொறிமுறையின் உருவாக்கத்தில் எவ்வாறு பங்களிக்கப் போகிறது என்பது சிககலான விடயம். ஏனென்றால், ஏற்கனவே இந்தியாவுக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளே இலங்கை அரசாங்கத்தினால் நிறைவேற்றப்படாத நிலையில், இதனை நடைமுறைப்படுத்துவது இந்தியாவினால் முடியுமா என்று தெரியவில்லை.

அதைவிட, உள்ளக விசாரணைப் பொறிமுறை ஒன்றை அமைக்க இலங்கையை இணங்கவைக்க முடியுமென்றால், அதை ஏன் கடந்த இரண்டு வருடங்களில் செய்யவில்லை என்ற கேள்வியையும் இந்தியா எதிர்நோக்க வேண்டி வரலாம். இந்த வகையில் பார்க்கும்போது ஜெனீவா என்பது இலங்கைக்கு கொடுக்கும் நெருக்கு வாரங்களை விட, இந்தியாவுக்கு கொடுக் கின்ற நெருக்கு வாரங்களே அதிகம் போலத் தெரிகிறது.

-கே.சஞ்சயன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்குமுதல்வரை சந்திக்க விருப்பம் கொண்டுள்ளேன்





வடக்கு மாகாண சபை முதலமைச்சர் விக்னேஸ்வரனை சந்திப்பதற்கு நான் சந்தர்ப்பம் கேட்டிருந் தேன். ஆனால் அவர் அதற்கான சந்தர்ப்பத்தை வழங்கவில்லை என்பது உண்மைதான் என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார். எனினும் வட மாகாண முதலமைச்சருடனான சந்திப்பு தொடர்பில் இன்னும் எதிர்பார்ப்பை கைவிடவில்லை என்றும் அவருடன் சந்திப்பை மேற்கொள்ள முடியும் என்று நம்புவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

வட மாகாண சபை முதலமைச்சர் விக்னேஸ்வரனை சந்திப்பதற்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷ சந்தர்ப் பம் கோரிய நிலையில் முதலமைச்சர் அதனை நிராகரித்துவிட்டதாக வெளிவந்த தகவல்கள் குறித்து வினவியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். அவர் இந்த விடயம் குறித்து மேலும் குறிப்பிடுகையில்,

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் என்ற வகையில் நான் நாட்டின் அனைத்து மாகாணங்களினதும் முதலமைச்சர்களுடன் தொடர்புகளை பேணிவருகின்றேன். அந்தவகையிலேயே வட மாகாண சபை முதலமைச்சர் விக்னேஸ்வரனை சந்தித்து பேசுவதற்கு முயற்சித்தேன். ஆனால் அவர் அதற்கு சந்தர்ப்பம் வழங்கவில்லை. வட மாகாணத்தின் அபிவிருத்தி செயற்பாடுகளுடன் நேரடியாக தொடர்புபடாவிடினும் இந்திய வீட்டுத்திட்டம் விடயத்தில் சில தொடர்புகள் உள்ளன.

எனவே அவ்வாறான விடயங்கள் குறித்து வட மாகாண சபை முதலமைச்சரை சந்தித்து கலந்துரையாடும் தேவை உள்ளது. அவர் தற்போது சந்தித்து பேசுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்காவிடினும் முதலமைச்சருட னான சந்திப்பு தொடர்பில் நான் இன்னும் எதிர்பார்ப்பை கைவிடவில்லை.

விரைவில் அவருடன் சந்திப்பை மேற் கொள்ள முடியும் என்று நம்புகின்றேன் என்றார். (அ)

## 33 ஆயிரம் லீற்றர் விமான எரிபொருள் நாசம்

(கொழும்பு)

மத்தல விமான நிலையத்திற்கு விமான எரிபொருளை எடுத்துச் சென்ற கொள்கலன் வண்டி விபத்துக்குள்ளாகி தீக்கிரையாகியுள்ளது.

இந்த சம்பவம் சூரியவெவ, மீகபுர பிரதேசத்தில் நேற்று சனிக்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் நடந்துள்ளது.

கொழும்பு கொலன்னாவையில் இருந்து மத்தல விமான நிலையம் நோக்கி சென்ற கொள்கலன். வண்டியே இவ்வாறு தீப்பிடித்துள்ளது.

வீதி ஓரத்தில் நிறுத்தப்பட்டிருந்த பஸ் வண்டி மீது கொள்கலன் வண்டி மோதியுள்ளது. விபத்துக்குள்ளான கொள்கலனில் 33 ஆயிரம் லீற்றர் விமான எரிபொருள் இருந்துள்ளது.

தீயினால் கொள்கலன் முற்றாக எரிந்துள்ளது. இந்த விபத்து காரணமாக ஏற்பட்ட இழப்பு இன்னும் மதிப்பிடப்படவில்லை. (அ)

## போதைப்பொருள் குறித்து தகவல் வழங்க விசேட இலக்கம் அறிமுகம்

போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த விசேட வேலைத் திட்டத்தை அமுலாக்குவதற்கு புலனாய்வுத் தகவல் நிலையமும் அமைக்கப்பட்டுள்ளது. 1984 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு இதுபற்றிய தகவல்களை தெரிவிக்கலாம். தகவல்கள் இரகசியமாகப் பேணப்படும்.

"மதுவுக்கு முற்றுப்புள்ளி" கோட்பாட்டை யதார்த்தமாக்கும் வேலைத் திட்டத்தின் மற்றுமொரு அங்கமாக சட்டவிரோத போதைப் பொருள், புகையிலை, மதுபான, கைத்தொழில் புலனாய்வு தகவல் நிலையம் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டு தேசிய சபையின் 30 ஆவது கொண்டாட்டம் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது. புதிய நிலையம் இராஜகிரியில் அபாயரகமான ஔடதங்கள் கட்டுப்பாட்டு தேசிய சபையில் அமைந்துள்ளது.

போதைப் பொருள் வர்த்தகம் தொடர்பான தகவல்களை திரட்டல், ஆய்வு செய்தல், மீளாய்வு, பரிமாற்றம் போன்றவை இதன் மூலம் மேற்கொள்ளப்படும்.

"1984 என்ற தொலைபேசி இலக்கம் ஊடாக போதைப்பொருள் பாவனை தொடர்பான தகவல்களை எவரும் அறிவிக்கலாம். இத் தகவலை அறிவிப்போரின் இரகசியம் பாதுகாக்கப்படுமென நிலையத்தின் திறப்பு விழாவின் பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டு தேசிய சபையின் தலைவி லேஷா டி சில்வா சந்திரசேன உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர். (அ)

## ஐ.தே.கவின் தலைமைக் குழு மகாநாயக்கர்களை சந்தித்தது

நாட்டின் அரசியல் நிலைமை கள் குறித்து ஐக்கிய தேசியக் கட்சி யின் சிரேஷ்ட தலைவர்கள் அஸ்கி ரிய மற்றும் மல்வத்த மகாநாய க்கர்களை சந்தித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைக் குழுவின் தலைவர் கரு ஜயசூரிய மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் காசிம் ஆகியோர் பங்கேற்றனர். இதன்போது தேசிய ஒற்று மையை கட்டியெழுப்புவதற்காக தமது கட்சியை புனரமைத்து வருவ தாக ஐக்கிய தேசியக் கட்சியினர் தெரிவித்தனர்.

கடந்த தேர்தலின்போது பாரிய ஒழுங்கீனங்கள் ஏற்பட்டுள்ளதாக தேர்தல் கண்காணிப்பு நிலைய மான பப்ரல் தெரிவித்திருந்தது. எனினும் அது எந்த ஊடகங்க ளிலும் பிரசுரிக்கவோ ஒளிபரப்ப ப்படவோ இல்லை என்று இரண்டு தலைவர்களும் மகாநாயக்கர் களி டம் சுட்டிக்காட்டினார்கள்.

இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு தகவல் அளித்த கரு ஜயசூரிய. அரசாங்கம் அபிவி ருத்தி என்று கூறிக்கொண்டிருக் கையில் நாட்டு மக்கள் மூன்று வேளை உணவுக்காக கஷ்டப்பட் டுக் கொண்டிருப்பதாக குறிப்பிட்டார்.

கலாசார சீரழிவுகள் உச்சக்கட்ட த்துக்கு சென்று குற்றங்கள் அதிக ரித்து செல்வதாகவும் அரிசி ஒரு கிலோ 80 ரூபா வரை அதிகரித்து ள்ளமையையும் அவர் சுட்டிக்காட் டினார். (அ)

## பொதுபல சேனாவும் மு.காவும் தீவிரவாத குழுக்கள்-ஐ.தே.க.

(கொழும்பு)

பொதுபலசேனா மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பன ராஜபக்ஷ அரசாங்கத்தினால் அனுசரண்ண வழங் கப்பட்ட தீவிரவாத குழுக்கள் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் மேல் மாகாணசபை உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் குற்றம் சாட்டியுள்ளார்.

இந்தக் குழுக்கள் சிங்கள மக்கள அல்லது முஸ்லிம் மக்களின் நலன்களை கருத்திற் கொள்ளாது. தமது அரசியல் நலன்களை கருத்திற்கொண்டு செயற்படும் குழுக்களாகும்.

இந்த நிலையில் ஐக்கிய தேசியக் கட்சி இந்தக்குழுக்களை நிராகரிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

மனோ கணேசன் 2009 ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சியு டன் இணைந்து போட்டியிட்ட போது அவருக்கு மாகாண சபையில் மேல்மாகாணத்தில் மூன்று ஆசனங்கள் கிடைத்தன.

எனினும் இந்த முறை அவர் தனித்து போட்டியிட்டதன் காரணமாக ஒரு ஆசனத்தை அவர் இழக்க நேரிட்டது.

அவரை பொறுத்தவரை அவரு க்கு வடமாகாண முதலமைச்சர் சீ.வி விக்னேஸ்வரனே வாக்குத்த ளமாக இருந்தார்.

மேல் மாகாணசபையை பொறுத்தவரையில் தமிழ் மக்கள், மனோ கணேசனுக்கு வாக்களித்தனர். எனினும் ஜனாதிபதி தேர்தல் என்று வரும் போது தமிழர்கள் நிச்சயமாக ஐக்கிய தேசியக்கட்சிக்கே வாக்களிப்பர்.

ஜே.வி.பியை பொறுத்தவரை முன்னரை விட தற்போது அதன் வாக்குவீதம் அதிகரித்துள்ளது. சரத் பொன்சேகாவின் வளர்ச்சியும் முன்னேற்றம் கண்டுள்ளது.

இந்தநிலையில் இந்த இரண்டு கட்சிகளும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து இயங்க இணக்கம் வெளியிட்டுள்ளதாக அவர் குறிப்பிட் டார். (செ-11)

## விபத்தில் இருவர் படுகாயம்

பயணிகளை ஏற்றிக்கொண்டிருந்த இலங்கை போக்குவரத்துக்கு சொந்தமான பேருந்துடன் மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் மோதியதில் அதில் பயணித்த இளைஞர்கள் இருவரும் படுகாயமடைந்துள்ளனர். இச்சம்பவம் உடுப்பிட்டி பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்ற இலங்கை போக்குவரத்துக்குச் சொந்தமான பேருந்து ஒன்று உடுப்பிட்டி விமலேந்திரா தியேட்டருக்கு முன்பாக பயணிகளை ஏற்றிக்கொண்டு நின்ற வேளை பின்னால் மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் பேருந்து மீது மோதியதால் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் ச.திலக்ஷன், சி.ரமேஸ் ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ-60)

## வாரம் ஒரு தகவல்

### மூளைக்கு வலிக்குமா?

"இது என்ன... மிகவும் கஷ்டமான சத்திர சிகிச்சையா" வைத்தியர்?

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. நீங்கள் தைரியமாக இருங்கள்"

"ஏன் வைத்தியர்! மூளையிலே ஏதாவது ஒரு பகுதி நோய் வந்து பழுதடைந்து போயிருந்தால் அந்தப் பகுதியை மட்டும் வெட்டி எடுத்து விட்டால் சரியாகி விடுமா?"

"சில பகுதிகளை மட்டும் தான் (Non eloquent area) அப்படிச் செய்ய முடியும்! இப்பொழுது உதாரணத்திற்கு நாங்கள் பேசுவதற்கு காரணமான பகுதியினை மூளையிலே இருந்து வெட்டி எடுத்தால் எங்களால் பேசவே முடியாமல் போய் விடும்! ஈரல் செல் மாதிரி மூளை செல் மறுபடியும் உற்பத்தியாகின்ற பகுதி அல்ல!"

"அது சரி வைத்தியர்... உடம்பிலே எந்தப் பகுதியில் சத்திர சிகிச்சை செய்தாலும் வலியை உணர்ந்து கொள்வது மூளை தானே?" அப்படி இருக்கும் பொழுது மூளையிலேயே சத்திர சிகிச்சை என்றால் வலி அதிகமாக இருக் குமோ?

" மூளையிலே உள்ள ஒரு விசேடம் என்ன தெரியுமா? அதற்கு வலியே தெரியாது. மூளையை வெட்டினாலும் கீறினாலும் எந்த வலியும் இருக்காது! மூளைக்கு எந்த நரம்பு இணைப்பும் இல்லை! மூளையிலேயிருந்து மற்றைய பகுதிகளுக்குத்தான் நரம்புகள் செல்கின்றன !"

"அப்படியா?"

"ஆமாம்! ஆனாலும் மூளையின் மேல் தோல் ஓரளவு உணர்வுகள் கொண்டது. சத்திரசிகிச்சை நேரத்திலே மயக்க மருந்து கூட சிறிதுதான் கொடுப்பது வழக்கம். நீங்கள் கொஞ்சம் கூட கவலைப்பட வேண்டாம். இங்கே அதிகளவு வைத்தியர்கள் இருக்கிறார்கள். இருந்தாலும் என்னுடைய கையாலேயே உங்களுக்கு சத்திரசிகிச்சை செய்ய வேண்டும் என்பது எனது ஆசை!"

"மிகவும் நன்றி வைத்தியர்! பிடியுங்கள் உங்களுடைய சத்திர சிகிச்சைக்கான கட்டணம்!"


"நாளைக்குத் தானே சத்திரசிகிச்சை செய்ய வேண்டும்! இன்று ஏன் பணம் கொடுக்கின்றீர்கள்?"

"என் கையாலேயே உங்களுக்கு கட்டணம் கொடுக்க வேண்டும் என்பது என்னுடைய ஆசை!"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளை இந்தியா தடைசெய்ய ஜெயலலிதாவே காரணம்



## வீரமணி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை இந்தியா தடை செய்வதற்கு அண்ணா திராவிடர் முன்னேற்றக கழகமே காரணம் என்று, திராவிடர் கழகம் குற்றம் சுமத்தியுள்ளது.

அந்த கட்சியின் தலைவர் கி.வீரமணி விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இந்த குற்றச்சாட்டு முன்வைக்கப் பட்டுள்ளது.

அண்ணா திராவிடர் முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர், ஜெயலலிதா ஜெயராம், இலங்கை தமிழர் விவகாரத்தில் ஒரே நிலைப் பாட்டில் இருந்ததில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரை கைது செய்து. தமிழ் நாட்டுக்கு கொண்டு வர வேண்டும் என்று அவரே உத்தரவிட்டிருந்தார்.

மேலும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக பல்வேறு தீர்மானங்களை அவர் தமிழக சட்ட சபையில் நிறைவேற்றி இருக்கிறார்.

இவ்வாறான நிலைப்பாடுகளாலேயே இந்திய மத்திய அரசாங்கம் அதனை தமக்கு சாதமாக பயன் படுத்திக் கொண்டு விடுதலைப் புலிகளை தடை செய்தது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# மேற்குலகின் திட்டத்தை பொதுபல சேனா செயற்படுத்தி வருகிறது -அமைச்சர் டிலான்

பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் மற்றும் வட்டரெக்க விஜித தேரர் ஆகிய இருவரையும் மனநல மருத்துவரிடம் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும் என அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

இந்த பௌத்த பிக்குகளின் மனநோயை குணப்படுத்தி சமநிலையை பாதுகாத்து தருமாறு அமைச்சர் மருத்துவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேற்படி இரண்டு பௌத்த பிக்குகளின் செயல்களால் பௌத்த மதத்திற்கு நன்மை ஏற்படுவதை விட தீமையே ஏற்படும். இவர்கள் இருவரும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள்.

பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் ஞானசார தேரர் உள்ளிட்ட குழுவினர் நவநீதம்பிள்ளை உட்பட மேற்குலக ஏகாதிபத்திய வாதிகளின் ஒப்பந்தத்தையே தற்போது நிறைவேற்றி வருகின்றனர்.

நாட்டில் மத நல்லிணக்கம் இல்லை எனவும் பௌத்தர்கள் கொடூரமானவர்கள் என்று மேற்குலக ஏகாதிபத்தியவாதிகள் முன்னெடுத்து வரும் நிலைப்பாடுகளை உறுதிப்படுத்தும் வகையிலான செயற்பாடுகளையும் இந்த அமைப்புக்கள் மேற்கொண்டு வருகின்றன.

பௌத்தர்களிடம் இருக்கும் அகிம்சை தோற்றத்தை மட்டுமல்லாது நாட்டில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் ஒத்துழைப்புடன் வாழ்வதை சகிக்காத மேற்குலக ஏகாதிபத்திய வாதிகளின் தேவைகள் இவர்கள் மூலம் நிறைவேற்றப்படுகின்றன.

இதனால் அவர்களின் இந்த செயற்பாடுகளை வன்மையாக கண்டிக்கின்றோம். இவர்கள் பௌத்த தர்மத்தை மேம்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுக்கவில்லை.

பௌத்த தர்மத்திற்கு அவமதிப்பை ஏற்படுத்தும் செயலில் ஈடுபட்டு வரு கின்றனர்.

உலகத்திற்கு மத்தியில் சகல இலங்கையர்களை இவர்கள் அவமதிப்புக்கு உட்படுத்தி வருகின்றனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் நடந்து கொண்ட விதத்தால் தனக்கு மரண பயம் ஏற்பட்டதாக வட்டரெக்க விஜித தேரர் கூறியுள்ளார்.

கொழும்பு கொம்பனித் தெருவில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தாம் நடத்த ஏற்பாடு செய்த ஊடக சந்திப்பிற்குள் புகுந்த ஞானசார தேரர் உட்பட பொதுபல சேனா அமைப்பினர் ஊடக சந்திப்பை நடத்த விடாது குழப்பினர்.

ஞானசார தேரர் தன்னை ஒரு வார்த்தை கூட பேச விடாது அச்சுறுத்தியதுடன் பலவந்தமாக மன்னிப்பு கோருமாறும் மிரட்டினார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (2)



சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு கடந்த வருடத்திற்கான தேசிய ரீதியிலான குறுந் திரைப்பட போட்டி Women and media cauective (WMC) என்ற அமைப்பினால் நடத்தப்பட்டது. இப்போட்டியில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த சிவராஜ்ஜின் படைப்பான சமநிலை என்ற குறுந்திரைப்படம் தேசிய ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது. இதற்கு போட்டிப் பரிசாக 40 ஆயிரம் ரூபா வழங் கப்படுவதை படத்தில் காணலாம். (படம்:-மானிப்பாய் செய்தியாளர்)

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனவள ஆலோசனை

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உளரீதியான ஒத்துழைப்புகளையும், மனவள ஆலோசனைகளையும் வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

அரசாங்கம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தினால் இதுவரையில் மேற்கொள்ளப்பட்டு வந்த அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் போன்றவை தொடர்பில் வடக்கு மற்றும் கிழக்கு மக்களுக்கு விளக்கமளிக்கும் வகையில் இந்த மனவள ஆலோசனை அமையும் என்று ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின்பரிந்துரைகளுககு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மனவள ஆலோசனை திட்டங்களை எவ்வாறு முன்னெடுப்பது என்பது தொடர்பில் அரசாங்கம் தீவிரமாக ஆலோசனை நடத்தி வருவதாகவும் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள், குழந்தைகள் மற்றும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட முதியவர்கள், விசேட தேவையுடைய நபர்கள் ஆகியோருக்கு இவ்வாலோசனைகள் வழங் கப்படவுள்ளதாகவும் தெரிவிககப் பட்டுள்ளது. (அ)

# ரஷ்யாவுக்கான பிரதித் தூதுவராக இராணுவ அதிகாரி நியமனம்

(கொழும்பு)

இலங்கையின் இராணுவத்தின தலைமை அதிகாரியாக பணியாற்றி வருகின்ற மேஜர் ஜெனரல் கிரிசாந்த டி சில்வாவை, ரஷ்யாவுக்கான பிரதித் தூதுவராக அரசாங்கம நியமிக்கவுள்ளதாக கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இவர் இலங்கை இராணுவத்தின் இரண்டாம் நிலைத் தளபதியாகவும் உள்ளார்.

இரண்டு ஆண்டுகளுக்கு இவர் ரஷ்யாவில் பிரதித் தூதுவராகப் பணியாற்றவுள்ளார்.

தற்போது ரஷ்யாவுக்கான பிரதித் தூதுவராகப் பணியாற்றும் மேஜர் ஜெனரல் நந்தன உடவத்தையிடம் இருந்து இவர் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவுள்ளார். (அ)

# சிங்களவர்களை பாதுகாக்கவே குரல் கொடுத்து வருகிறோம்

## பொதுபல சேனா கூறுகிறது

சிங்கள சமூகத்தை பாதுகாக்கவே குரல் கொடுக்கின்றோம் என பொதுபல சேனா அமைப்பின் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவிததுள்ளார்.

சிங்களவர்களுக்கு ஏற்பட்டுள்ள அழிவு பற்றி எங்களுக்கு மட்டுமே தெரியும். அதனாலேயே இவ்வாறு சிங்கள மக்களுக்காக போராடுகினறோம்.

நாட்டில் மீண்டும் இனவாதம் ஏற்பட்டு விடக் கூடாது என்பதனை புரிந்து கொண்டு செயற்பட வேண்டும்.

பகிரங்க மேடைகளில் பேசி இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங் கப்பட வேண்டும்.

அண்மையில் நிப்போன ஹோட்டலில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது வட்டரெக்க விஜித தேரரை நான் தாக்கவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பில் பல ஊடகங்கள் செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்தன.

முட்டாள்களினால் வெளியிடப் படும் ஊடக அறிக்கைகளுக்கும், கருத்துக்ளுக்கும் பதிலளிக்கப் போவதில்லை.

கொம்பனித்தெரு பொலிஸார் விசாரணைக்காக அழைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்ட போதிலும் உத்தியோகபூர்வமாக இது வரையில் அவ்வாறான எந்த உத்தரவும் கிடைக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார். (அ)

# இலங்கைப் பொருளாதாரம் சவால்களை எதிர்நோக்குகிறது

இலங்கைப் பொருளாதாரம் சில சவால்களை எதிர்நோக்கி வருவதாக உலக வங்கி குற்றம் சுமத்தியுள்ளது.

2003ஆம்ஆண்டுமுதல்2012ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இலங்கையின் பொருளாதாரம் 6.4 வீத வளர்ச்சியை பதிவு செய்துள்ளது.கடந்த ஆண்டு 7.3 வீத பொருளாதார வளர்ச்சி பதிவாகியுள்ளது.

பொருளாதார வளர்ச்சி பதிவு செய்யப்பட்டாலும் சில கட்டமைப்பு ரீதியான மாற்றங்களை ஏற்படுத்த வேண்டிய அவசியம் எழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யுத்தம் இடம்பெற்ற வலயத்தில் கல்வி, பாதை அபிவிருத்தி, வாழ்வாதார மேம்பாடு போன்ற பல்வேறு துறைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ள போதிலும், நீண்டகால கொள்கை வகுப்புக்கள் இன்றியமையாதது என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# 153 விகாரைகள் மூடப்பட்டுள்ளன

(கொழும்பு)

இலங்கையில் இதுவரையில் 153 பௌத்த விகாரைகள் மூடப் பட்டிருப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

பௌத்த பிக்குகளின் பற்றாக்குறை காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, அமைச்சர் தினேஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

இதேவேளை நாட்டில் தற்போது சமய வளர்ச்சிக்கான எந்த நட வடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதில்லை என்றும் அதற்கு பதிலாக சூதாட்ட மையங்கள், மதுபான நிலையங்கள் போன்ற 'விடயங்களே வளர்ச்சி அடைந்து வருவதாக ஆங்கில பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

அத்துடன் பௌத்த விகாரைகளை பேணி பாதுகாக்க வேண்டிய பௌத்த துறவிகள் தற்போது பதவி ஆசையில் பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஈழத்தமிழர்களுக்கு மோடி துரோகம் செய்யமாட்டார்

## வைகோ தெரிவிப்பு

தமிழீழத்தை பா.ஜ.க. ஏற்றுக் கொள்ளாது என ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தனி ஈழம் என்பது நம்முடைய கொள்கை. ஆனால், நம்முடைய கூட்டணிக் கட்சிகள் அனைத்தும் இந்தக் கொள்கையை ஏற்க வேண்டும் என நாம் கருத முடியாது. எல்லோருக்கும் ஒரே கொள்கை என்றால் இங்கு பல கட்சிகள் எதற்கு?

மத்தியில் காங்கிரஸ் அரசை அகற்ற வேண்டும் என்ற பொதுவான நோக்கத்துடன் நாம் தேர்தலை எதிர் கொணடுள்ளோம். இஸ்லாமியர்களுக்கு நரேந்திர மோடி அரசுதான முழுமையான, பாதுகாப்பான அரசு என்பதை பல்வேறு புள்ளி விபரங் களுடன என்னால் தெரிவிக்க முடியும்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையிலும், முல்லைப் பெரியாறு அணை விவகாரத்திலும் மத்திய அரசு நமக்கு இழைத்த துரோகத்தை மோடி ஆட்சிக்கு வந்தால் செய்ய மாட்டார் என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்

## ஏழைப்பங்காளன்

பட்டினத்தார் கையில் திருவோடு;
நீ படும் பாட்டுக்கு இது ஒரு கேடு;
நாளும் பொழுதும் பொருளிலே ஆசை;
நாலுவேளையும் சாமிக்கும் பூசை
முழுக்க நனைந்தவனுக்கு
முக்காடுதான் எதற்கு?
முற்றும் துறந்தவனுக்கு
சொத்துக்களும் எதற்கு?
எதுவுமே வேண்டாமென
ஏழைபோல் வாழ்ந்தவன்
இறைவனைக் கண்டதுண்டு
கோடிகள் சேர்த்து உயரக்
கோபுரம் கட்டுவது
கொண்டாட்டம் விழா
களியாட்டம் போடுவது
இவற்றில்தான் இறைவனுண்டா?
துன்பத்திலே பங்குகொள்;
துயரத்திலே துணையாய் நில்
ஏழைக்கு உதவிபுரி
எவரையும் சமமாய் மதி
அப்போது இறைவன் வருவான்
ஏனெனில் இறைவன் என்பவன்
ஏழைகளின் பங்காளன்

**வாணியழகன்**
**முரசுமோட்டை**

## மண்வாசம்

தூறல் மழையினிலே உற்சாகமாய்
நனைந்த அற்புத நினைவுகள்
கண்ணீர் சொரியும் போது
கண்ணீர் துடைத்த கரங்கள்
என்மீது அக்கறையும் அன்பும்
காட்டிய என் அம்மா
இன்னல் சூளும் போது இடர்
தீர்த்த என் அன்பு அப்பா
செல்லச் சண்டை போட்ட
என் சகோதரங்கள்
ஆபத்தில் தோள் கொடுத்த நண்பர்கள்
ஆறுதல் சொன்ன சொந்தங்கள்
தாய்க்கு நிகரான என்தாய் பூமி
சுவாசத்தில் கலந்த மண்வாசம்
இத்தனையும் தொலைத்து
தனிமரமாய் அந்நிய தேசத்தில்
வாழ்கிறேன் விடியலுக்காய்
ஏங்கிக் கொண்டிருக்கிறேன்

யோ.சிந்துஷா
திருநெல்வேலி

## உலக அழிவு

பூத்திருக்கும் பூக்களை ரசிக்கும் பாசமானவர்கள்
இருக்கும் இவ்வுலகில் காத்திருக்கும் கருக்களை
அழிக்கும் மோசமானவர்கள் உள்ளனர் நம் அருகில்
இனத்துக்காக உயிரை இரத்தமாகச் சிந்தும் தமிழா
நித்தம் எழுந்திரு எளிதா இனம் எனும் குப்பை
கழிவை அகற்ற எதிர்பார்ப்போம் ஒரு உலக அழிவை

ஆனந்த் அபி, பருத்தித்துறை

## வருவாயா

மண்ணை நோக்கி மழை வருமே தவிர
விண்ணை நோக்கி அல்ல
உன்னை நோக்கிநான் வருவேன்
என்னை நோக்கி நீ வரமாட்டாய்
ஏனெனில் புதைகுழியில் நீ உறங்குவதால்

க.செல்வமலர், இடைக்காடு

## உயிரே நிஜமாகுமா?

உன்னோடு நான் சேரவேண்டும்- அது
உடலோடு உயிராக வேண்டும்
மனதோடு மனம் சேர வேண்டும்- உன்
மடிமீது தலைசாய வேண்டும்
கண்ணோடு கண்பேச வேண்டும்- நாம் காணும்
கனவெல்லாம் நிஜமாகவேண்டும்

ச.மௌலதாஸ்
வட்டுக்கோட்டை

## இமயம் தொட...

தாவும் போது தவறினும்
தன்னைப் பாதுகாத்திடும்
அணிலிடம் நீ கற்றுக்கொள்
எங்கேயும் எதிலும்
எச்சரிக்கையாய் இரு
உனக்கு பரீட்சயமான
விடயமாயினும்
ஆழ்ந்து சிந்தித்து செயற்படு
வெற்றி உன்னை தேடிவரும்

மாவை.நா. கஜேந்திரன்

## செய்யும் வகை அருள்வாய்

தெருவோடு உறவாடும் ஊரோடு உறவாட
வேரோடும் வகையாக உள்ளோடும் ஒழுங்கை
பாம்போடுமாப்போல வளைந்து நிமிருகின்ற
முடக்குகளில் மரத்தடியில் இருப்பார் இவரவரே
கொண்டலடி வைரவருக்கு பூப்போட்டு விளக்கும் வைத்தார்
கைமாறாக மகனுக்கு வெளிநாட்டு விசா கேட்டார்
அருள்செய்து வைரவரும் தன்னாலே தான் கெட்டார்
வெளிநாட்டுக் காசிலே மண்டபம் கட்டி பூட்டி வைத்தார்
பூசைக்குத் தட்டுத் தாம்பாலம் குத்துவிளக்கு
எல்லாமே வைக்க பழைய இரும்புக்காரனிடம்
படுபாவி திருடிவிற்று தன்தொழில்
தருமம் கெடாமல் திருப்பணி செய்தார்

சு.சிவராசா, நாவற்குழி

# மௌனத்தின் தேடல் – 199



## காரணம்

புதைகுழியுடன் புதைக்கப்படுவது
சதையும் எலும்புமான
மனித எச்சங்கள் மட்டுமல்ல
மகத்துவமான மனிதநேயமும்தான்
அதற்குப்பதில் மிருகத்தனத்தை
குழிதோண்டி புதைத்திருந்தால்
நாம் தாய்நாடு துயரத்தை
சுமக்கத் தேவையில்லை

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

## நாம் ஒரு தமிழன்

தமிழனின் துன்பக் குரலை
கேட்கக் கூடாது
என்பதற்காகத்தான்
காதை மூடி வைத்திருக்கிறேன்
ஏனென்றால்
நானும் ஒரு தமிழன்

ப.அரவிந்தன்
கரணவாய் மத்தி

## புதிய அத்தியாயம்

தமிழா!
மன்னார் புதைகுழியில்
எத்தனையோ மனிதஓடுகள்
அது இனியும் தொடராது
வீறுகொண்டு எழுந்து
புதிய தலைமுறையினரை
வெளிச்சத்தில் வாழ விடு

இரா.ஜெ.துஷ்யந்த்
அளவாவோடையூர்

## கொலைவெறி

மண்ணில் விழுத்தி அடித்து
கன்னத்தில் கை புதைத்து
கண்பிதுங்க அழுத்தி
விண்ணுலகுக்கனுப்ப
எண்ணுகின்றானோ- இவன்
தண்டனை பெறாது தப்பத்தெரிந்த
புண்ணியம் பாவம் அறியா
பண்பற்ற கொலை வெறியன்

துரை, தென்மட்டுவில்

## வெங்கொடுமை

செங்கோன் முறையா?
வன்கண் பகையா?
வெங்கொடுமைச் சிறையா?
ஓ...
வேண்டாத சித்திரவதையா?
அடிமேல் அடியா?
உதிரம் கொட்டும் வரையில்,
உதைமேல் உதையா?
இறுதி வரையிலுமே
மனிதா- இதுதான்
உன் கதையா?

வாணியழகன்
முரசுமோட்டை

## எங்கே மனிதம்...!

மனிதத்தைக் கொன்ற
பிணந்தின்னிக் கழுகுகளின்
இச்சைகளுக்குப் பலியாகி
காரணங்கள் இல்லாத
காணாமற்போனோர் பட்டியலில்
இன்று நான், நாளை...?

உதயம்ரூபன்
நயினை

## மனிதநேய மரணிப்பு

மனிதநேயங்கள் மரணித்து
குழிதோண்டி
புதைக்கப்பட்டதன் விளைவு
கொலைக் கொடூரங்களை
சுகப்பிரசவமாக்கிவிட்டது

சு.சிவாஜினி
சுன்னாகம்

## நப்பாசை

பயங்கரவாதத்தை இருப்பதாகச் சொல்லி
கொல்லாமலும் கொன்று போட்டு
சுத்திகரிப்பு
வாய் சொல் போரிலும்
வெல்ல முடியாத நீதி தேவனை
நசித்துக் கொல்லாமல்
கொன்றுவிட்டு மெல்ல
உலகை அடக்கி ஆளலாம்
என சொல்லமுடியாத நப்பாசை போலும்

சி.சுகிர்தமலர்
உரும்பிராய் மேற்கு

## சொந்தக்காரர் யார்?

முள்ளிவாய்க்காலில்
முடிந்துபோன
யுத்தத்திலே
மண்ணுக்குள்ளே
மடிந்து போன
நம் உறவுகளின்
மண்டையோடா...?
மன்னார் மனிதப்புதைகுழியில்
தோண்டியெடுக்கப்பட்ட
காணாமற் போன
நம் உறவுகளா...?
கற்பனையிலே
வரையப்பட்ட
கருத்து ஓவியமா...?

எஸ்.பி.கரன்
சண்டிலிப்பாய்

## மாண்புகெட்ட மானிடனே

கொலைவெறி பிடித்த
மானிடா!
முழி பிதுங்கி முகம்
சோர்வடைந்து
குற்றுயிராக பூமித்தாய்க்குள்
அமுக்கித்தள்ளுகின்றீரே- இந்த
அப்பாவியைப் போல்
எத்தனை அப்பாவிகள்
கொலைவெறி பிடித்தவர்களால்
நாசூக்காகக் கொலைசெய்யப்பட்டு
மறைக்கப்படுகின்றார்கள்

வளர்மதி யுகன்
யா. செங்குந்த இ.க.

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் –200



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 16.04.2014 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிகரகுவா நாட்டில் மீண்டும் சக்திவாய்ந்த நிலநடுக்கம்

(மனகுவா)

நிகரகுவா நாட்டின் தென்மேற்கில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

கடந்த வியாழக்கிழமை ஏற்பட்ட நிலையில் மீண்டும் நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந் நிலநடுக்கம் ரிக்டர் அளவு கோலில் 6.6 ஆக பதிவானது. தலைநகர் மனகுவாவில் கட்டடங்கள் குலுங்கியதாகவும் சேதம் குறித்து உடனடி தகவல்கள் ஏதும் இல்லை.

சல்வடாரில் கூட உணரப்பட்டதாகவும் அமெரிக்க புவியியல் ஆய்வு தெரிவிக்கிறது.


பசுபிக்கடல் அருகே 86 மைல் ஆழத்திலும் கிரானடா நகரின் தெற்கே 15 மைல் தொலைவிலும் தாக்குதல் இருந்ததாக தெரியவந்துள்ளது.

சுனாமி எச்சரிக்கை ஏதும் விடப்படவில்லை.மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டிருந்ததாகவும் பாடசாலைகள் ஏற்கனவே விடுமுறையில் இருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

# ரஷ்யா மீது பொருளாதார தடை; அமெரிக்கா எச்சரித்தது

(வோஷிங்டன்)

**உக்ரைன் விவகாரத்தில் பதற்றத்தை அதிகரித்தால் ரஷ்யா மீது புதிய பொருளாதார தடை விதிப்போம் என அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா எச்சரிக்கை விடுத்துள்ளார்.**



உக்ரைனின் தன்னாட்சி பகுதியாக இருந்த கிரீமியா, பொது வாக்கெடுப்பு நடத்தி கடந்த மாதம் ரஷ்யாவுடன் இணைந்தது.

இதை அமெரிக்கா மற்றும் மேற்கத்தேய நாடுகள் அங்கீகரிக்கவில்லை.

கிரீமியாவை தன்னுடன் இணைத்த ரஷ்யா மீது பொருளாதார தடையும் விதிக்கப்பட்டது.

இந்த நிலையில் கிரீமியா போன்று ரஷ்ய மொழி பேசுகிற மக்களை அதிகமாகக்கொண்டுள்ள கிழக்கு உக்ரைனிலும் இத்தகைய நிலை உருவாகியுள்ளது.

அங்கு கார்கிவ், லுஹான்ஸ்க், டனட்ஸ்க் நகரங்களில் உள்ள முக்கிய அரசு கட்டடங்களை ரஷ்ய ஆதரவாளர்கள் ஆக்கிரமித்து, தங்களை தாங்களே தனி குடியரசு என அறிவித்தனர்.

ரஷ்யாவுடன் இணைவது தொடர்பாக பொதுவாக்கெடுப்பு நடத்த வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

உக்ரைன் பிரச்சினையின் ஒரு அங்கமாக, எரிவாயு சப்ளை செய்ததற்கு தங்களுக்கு தரவேண்டிய பெருந்தொகையை (2.2 பில்லியன் டொலர்கள்) உக்ரைன் தராமல் கடன் வைத்துள்ள நிலையில், அந்த நாட்டுக்கான எரிவாயு சப்ளையை குறைத்தால், அது ஐரோப்பிய நாடுகளுக்கான விநியோகத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தும் என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் எச்சரிக்கை விடுத்தார்.

எரிசக்தியை ரஷ்யா ஆயுதமாகப் பயன்படுத்தி மிரட்டுவதாக அமெரிக்கா குற்றம்சாட்டுகிறது.

இதற்கிடையே உக்ரைன் எல்லையில் ரஷ்யா 40 ஆயிரம் வீரர்களை குவித்து வைத்துள்ளது.

இது தொடர்பான செயற்கைக் கோள் படங்களை நேட்டோ (அமெரிக்காவின் நட்பு நாடுகள்) வெளியிட்டுள்ளது.


இது அந்த பிராந்தியத்தில் பதற்றத்தை அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் செக் குடியரசின் தலைநகர் பிரேக்கில், 'நேட்டோ' பொதுச்செயலாளர் ஆன்டர்ஸ் போக் ராஸ்முஸ்சென் நேற்றுமுன்தினம் நிருபர்களிடம் பேசினார்.

அப்போது அவர், உக்ரைன் பிரச்சினையில் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்றால் ரஷ்யா முதல் நடவடிக்கையாக தனது படைகளை உக்ரைன் எல்லையில் இருந்து வாபஸ் பெற வேண்டும் என கூறினார்.

அத்துடன், 'ரஷ்யா மேலும் இராணுவ நடவடிக்கை எதையாவது எடுத்தால் அது மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தும், மேலும் பொருளாதார தடைகளை எதிர்கொள்ள வேண்டி வரும்' எனவும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

இதற்கிடையே அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, ஜேர்மனி பிரதமர் ஏஞ்சலா மெர்க்கலுடன் தொலைபேசியில் பேசினார். அப்போது இரு தலைவர்களும் உக்ரைன் நிலைவரம் குறித்து விரிவாக விவாதித்தனர். உக்ரைன் பிரச்சினையில் ரஷ்யா நெருக்கடியை அதிகரித்தால் அதன் மீது புதிய பொருளாதார தடைகளை விதிப்போம் என ஏஞ்சலா மெர்க்கலிடம் ஒபாமா கூறினார்.



சோவியத் யூனியனில் இருந்து பிரிந்த உக்ரைன் நாட்டின் ஒரு மாகாணமாக இருந்த கிரீமியா தற்போது ரஷ்யாவுடன் இணைக்கப்பட்டுள்ளது. இதனால், கிரீமியாவின் செவஸ்டோபோஸ் கடற்படை தளத்திலிருந்து உக்ரைன் கப்பல்கள் உக்ரைனுக்கு திரும்பி செல்வதைப் படத்தில் காணலாம். உக்ரைன் எல்லையில் குவிக்கப்பட்டுள்ள படைகளை வாபஸ் பெறும்படி, அமெரிக்காவும், ஜேர்மனியும் ரஷ்யாவை எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாக்.தீவிரவாதிகளிடையே மோதல்; 19 பேர் உயிரிழப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் இடம்பெற்ற வெவ்வேறு தீவிரவாத குழுக்களில் ஏற்பட்ட மோதலில் 19 பேர் பலியாகியுள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.

பாகிஸ்தானில் ஏராளமான தீவிரவாத குழுக்கள் உள்ளன. பாகிஸ்தான் தெக்ரிக்-இ-தலிபான் என்ற தலிபான் தீவிரவாதிகள் அதிக அளவில் உள்ளனர். இவர்கள் பல்வேறு குழுக்களாக உள்ளனர். அனைவரும் வடக்கு வசிரிஸ்தான் மலைப் பகுதியில் தங்கள் ஆதிக்கத்தை நில நாட்டியுள்ளனர்.

அவர்களுக்குள் அதிகார பகிர்வு போட்டி அவ்வப்போது நடைபெறும. இந்த நிலையில் சமீப காலமாக கொல்லப்பட்ட ஹக்கிமுல்லா மசூத் பிரிவை சேர்ந்த சாஜ்னா மற்றும் கொமாண்டர் கான் தலைமையிலான பிரிவுகளுக்கு இடையே கடும் சண்டை நடந்து வருகிறது.

டெக்சில் தத்தா கெய்ல் பகுதியில் ஹக்கானி பிரிவை சேர்ந்த தலிபான் தீவிரவாதிகளின் வாகனம் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அதில் கொமாண்டர் உட்பட 3 பேர் கொல்லப்பட்டனர். 2 பேர் காயம் அடைந்தனர்.

ஆப்கானிஸ்தான் எல்லையில் உள்ள ஷவால் பகுதியில் சாஜ்னா தலைமையிலான தலிபான் தீவிரவாதிகளின் வாகனம் மீது ரொக்கெட் வீசப்பட்டது. அதில் 10 பேர் பலியாகினர். மற்றொரு குண்டு வெடிப்பு தாக்குதலில் வாகனம் வெடித்து சிதறியது. அதில் 6 பேர் பலியாகினர். இந்த தாக்குதல்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

## சீன ஏவுகணை பிரிவில் பெண்கள்

(பீஜிங்)

சீனாவின் மக்கள் விடுதலை இராணுவத்தில் முதன்முறையாக ஏவுகணைளை இயக்கும் பிரிவில் பெண்கள் குழு சேர்க்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பின் இரண்டாம் பீரங்கி படையில் உள்ள முதல் கன்வென்ஷனல் ஏவுகணைப் பிரிவில் இந்தப் பெண்கள் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று இராணுவ நிர்வாகம் அறிவித்துள்ளது.

இவர்கள் அனைவரின் சராசரி வயது 20 ஆகும். பயங்கர இராணுவ பயிற்சியில் இவர்கள் அனைவரும் நன்கு செயற்பட்டதாக இராணுவத் தகவல்கள் கூறுகின்றன.

இந்த குழுவில் உள்ள மொத்த பெண்களின் எண்ணிக்கையை இராணுவம் வெளியிடவில்லை.

ஆனால் இதில் செயற்படும் அதிகாரிகள் மற்றும் பெண் வீரர்களில் 91 சதவிகிதத்தினர் கல்லூரிப் படிப்பு அல்லது அதற்கும் மேற்பட்ட உயர் கல்வியைக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கூடங்குளத்தில் அணு உலைகள்; இந்தியாவுடன் ரஷ்யா ஒப்பந்தம்

(புதுடில்லி)

கூடங்குளத்தில், 33 ஆயிரம் கோடி ரூபா செலவில் மேலும் 2 அணு உலைகள் அமைப்பது தொடர்பாக இந்தியாவுக்கும் ரஷயாவுக்கும் இடையே ஒப்பந்தம் கையெழுத்தானது.

நெல்லை மாவட்டம் கூடங்குளத்தில் ரஷ்யாவின் உதவியுடன் அணுமின் நிலையம் அமைக்கப்பட்டு உள்ளது. இங்குள்ள தலா ஆயிரம் மெகாவோட் உற்பத்தி திறன் கொண்ட இரு அணு உலைகளில், முதல் அணுஉலையில் ஏற்கனவே மின் உற்பத்தி தொடங்கி விட்டது. 2 ஆவது அணு உலையில் விரைவில் உற்பத்தி தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இங்கு, ரஷ்யாவின் உதவியுடன் மேலும் இரு அணு உலைகளை அமைக்க முடிவு செய்யப்பட்டது. கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் இதற்கான ஒப்பந்தம் கையெழுத்தாக இருந்தது. ஆனால் அணு உலை விபத்து இழப்பீடு தொடர்பான பிரச்சினையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டதால் முட்டுக்கட்டை உண்டாகி ஒப்பந்தம் கையெழுத்தாவது தள்ளிப்போனது.

இந்த பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பாக இரு நாடுகளின் பிரதிநிதிகளுக்கும் இடையே பலமுறை பேச்சுவார்த்தை நடைபெற்றது. கடந்த மாதம் அணுசக்தி துறை செயலாளர் ஆர்.கே.சிங் தலைமையிலான குழுவினர் ரஷ்ய அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையில் முட்டுக்கட்டை நீங்கியது. அதன்பிறகு ஒப்பந்தத்துக்கு, பாதுகாப்பு துறைக்கான மத்திய மந்திரிகள் குழு ஒப்புதல் அளித்தது.

இந்த நிலையில் பாராளுமன்ற தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதால், ஒப்பந்தம் மேற்கொள்ள தேர்தல் ஆணையாளரின் அனுமதியும் பெறப்பட்டது.

இதைத்தொடர்ந்து, கூடங்குளத்தில் 33 ஆயிரம் கோடி ரூபா செலவில மேலும் 2 அணுஉலைகள் (3 ஆவது மற்றும் 4 ஆவது அணு உலைகள்) அமைப்பது தொடர்பாக இந்தியாவுக்கும் (இந்திய அணுமின் கழகம்), ரஷ்யாவுக்கும் இடையே கடந்த வியாழக்கிழமை ஒப்பந்தம் கையெழுத்தானதாக நேற்றுமுன்தினம் மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஒப்பந்தம் கையெழுத்தான போதிலும் அணுஉலைகளை அமைப்பது தொடர்பான பணிகளை தொடங்க அணுசக்தி ஒழுங்குமுறை வாரியத்தின் அனுமதியை பெற வேண்டி இருப்பதாகவும் அந்த வட்டாரங்கள் கூறின.

அணுஉலை விபத்து இழப்பீடு சட்டத்தின்படி, ஏதாவது விபத்து ஏற்பட்டால் இழப்பீடு வழங்குவதற்காக ஆயிரத்து 500 கோடிக்கும் அதிகமான தொகையை காப்புறுதி செய்ய வேண்டும். அதன்படி காப்புறுதி செய்ய அரசு திட்டமிட்டு இருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

## படகு கவிழ்ந்து விபத்து; 22 பேரை காணவில்லை



(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவில் உள்ள பாபுவா மாகாணத்தில் படகு ஒன்று நீரில் மூழ்கி விபத்துக்குள்ளானது.

இப் படகில் 30 பேர் பயணம் செய்துள்ளதாகவும் இதில் பயணம் செய்த அனைவரும் நீரில் மூழ்கியதாகவும் தகவல் வெளிவந்துள்ளது.


தகவல் அறிந்த பொலிசார் விரைந்து வந்து மீட்பு பணியில் ஈடுபட்டு 8 பேரை மீட்டுள்ளனர். மிகுதி 22 பேரையும் மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ரதோற்சவம் நாளை தேர் வடம் பிடித்து இறையுலகில் இடம் பிடிக்க வாரீர்...

## ...ரைப் புத்தாண்டு தினத்தன்று



...த்தேர் வடம்பிடிக்க வாரீர்!

... குருபூசை தின விழாக்கள் நடைபெறும் இந்நாட்களில் சுவாமிகளுடைய சிந்தனையில் ... ஆண்டுத் திருவிழாக்காலம் அமைவதையிட்டு கிளிநொச்சி மக்களாகிய நாம் மிகுந்த ...னப் பணி நடந்தவேளை களஞ்சியப் பொறுப்பாளராக நடமாடியதால் அவர்களுடைய ...விடத்திற்கும் இக்காலத்திற்கும் ஏற்ற தெய்வமான மதுரை மீனாட்சியின் மூர்த்தமாயுள்ள ...ரை பூரணைதோறும் இரணைமடுக்குள நீரால் நயமும் நலமும் பெறும் கிளிநொச்சி ... சுவாமிக... வாக்கிற்கேற்ப எந்த இடர் இன்னல் வந்தாலும் கடந்த 50 ...ப்படைபவர் கிளிநொச்சி மக்களே! கிளிநொச்சி பிராந்தியம் தோறுமுள்ள ஊர்களில் ...நலா அழைத்து வீதிகளைச் சுத்தம் செய்து இல்லங்களின் வாயில்களில் வாழை ...ான பெருங்கொடையளித்து குடும்பத்தோடு பூசித்து மனநிறைவு காண்பர்.

...ய நெற்களஞ்சியமாக்கும் அம்மனின் தீர்த்த நீரில் அருட்கருணையை எண்ணி ... முதியவர் பாராமல், உயர்வு தாழ்வு காட்டாமல், ஊர் வேறுபாடு இல்லாமல் ...டுக்கு ஆண்டு உயர்வு, ஆண்டுதோறும் நாளாந்த நிகழ்வு. இது மக்களைத் ...ற்றுதற்குரியது. முன்னர் அரிசியும் பிற படையல்களும் வழங்கிய இம்மக்கள் ...ம் என உயர்வான நீர்வளம் கொடுத்து மகிழ்கின்றனர். இத்தகைய மக்களை ...க்கள் மனதைவிட்டு அகலாதவர். அவர் முன்னின்று அமைத்துத் தந்த மூர்த்தி, ...ம்படுத்துபவர். கடந்த 50 ஆண்டுகளில் நான்கு திருக்குடமுழுக்குக் கண்ட ...தேர்களில் மைந்தர்கள் முன்னே வர அம்மன் பின் அசைந்துவரும் காட்சி ...க்கும் சீமாட்டி நைந்த நொந்த அடியார்களுக்கு அருள்பொழியும் அமுதவல்லி ...டிக்க வாரீர்!

...திநாதன் ,தர்மகர்த்தா



**யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்**
**கௌரவ சி.சிறீதரனின் செய்தி**
***தேரேறும் அம்பாள் தீவினைகள் அறுக்கட்டும்***

ஏழை மக்களின் வாழ்வோடு இரண்டறக் கலந்து இடர் வரும் பொழுதெல்லாம் நம்பிக்கையாக ஒளிகாட்டும் கிளிநொச்சி கனகாம்பிகை அம்பாள் பரிவார மூர்த்திகளோடு தேரேறும் இத்திருநாளில் அன்புக்கு இலக்கணமான தாயவளிடம் இருந்து கேட்பதற்கு எம்மக்களிடம் ஆயிரம் ஆயிரம் வேண்டுதல்கள் உண்டு. அழகுபூத்த அமைதி மண்ணில் இன்று வாழ்வு கலைந்து தவிக்கும் இதயங்களுக்கு வல்லமை மிகுந்ததாய் அம்பாள் கண்ணீர் துடைத்து வரம் அருள்வாளாக. எம்பெருமாட்டி தேரேறும் அழகுக்கோலத்தை காணும் பாக்கியம் இத்திருநாளில் எம்மக்களுக்கு கிடைத்துள்ளது. எம்மக்களை அன்னை நன்கறிவாள். அவள் நீதியை நிலைநாட்டும் தேவி. பாவியரை சங்கரிக்கும் காளி. கண்முன்னே தன் புண்ணிய தீர்த்தத்தை அள்ள நினைக்கும் கபடநோக்கம் கொண்டவர்க்கு அவள் சேதி சொல்லியுள்ளாள். அவள் என்றும் நல்லதற்கே துணைபுரிவாள். அவளின் வாள் பொறுமை இழக்கும்போது இந்த உலகத்தில் நீதி தழைக்கும். அது நடந்தேறும். வன்னி மண்ணில் சித்திரத்தேர் கொண்டு சிறப்புற்ற கனகாம்பிகை அம்பாள் பெரும்போர் சூழ்ந்த பின்னும் பெரும் துயரில் மனிதர்கள் வீழ்ந்த பின்னும் எல்லாம் அறிந்தவளாய், எல்லாம் சுமந்தவளாய், இரணைமடு எனும் புண்ணிய பதியில் ஓர் நல்ல நாளுக்காய் காத்திருக்கிறாள். அந்நாளில் உலகமெலாம் வாழும் தமிழர்களின் துயர்தீர்த்து தன் கருணைக் கடலை காட்டுவாள். எனவே பக்த பெருமக்களே! தேரேறும் எம் கனகாம்பிகை அன்னையிடம் உங்கள் மனக்கிடக்கைகளை அவள் பாதார விந்தங்களில் வேண்டுதலாய் சமர்ப்பியுங்கள். அபிராமியின் கடைக்கண்களில் அகிலத்தை ஆளும் சக்தியை வணங்கி எமது மண்ணும் மக்களும் நிம்மதியும் சுபீட்சமான நிரந்தர வளங்களும் உரிமைகளும் பெற பிரார்த்திப்போமாக.



**ஆலய மஹோற்சவ குருவின் ஆசிச்செய்தி**

எல்லா உலகங்களையும் படைத்தும் காத்தும் அழித்தும் மறைத்தும் அருளியும் அருவுருவமாக எங்கும் நிறைந்துள்ள எல்லா உயிர்களிடத்தும் அன்பு கொண்டு பரிபூரணமாக விளங்கும் ஆதிபராசக்தி இரணைமடுப்பதியிலே கனகாம்பிகையாக வீற்றிருந்து கடைக்கண்ணால் அருள்புரிகின்றாள். சித்திரைத் திங்கள் புதுவருட நன்னாளில் மூன்று சித்திரத்தேரில் புத்திரரோடு இணைந்து பவனி வரும் நேரம் அஞ்ஞான இருள் அகற்றி மெய்ஞ்ஞான ஒளி எல்லா உயிர்களும் பெற அன்னையைப் பிரார்த்திக்கின்றேன்.

***லோகா சமஸ்தா சுகினோ பவந்து***

விவிதவித்தியன் சிதம்பரலட்சுமி திவாகரக்குருக்கள், இரணைமடு கனகாம்பிகை அம்பாள், ஆலய பிரதம குரு, வவுனியா ஆதி விநாயகர் ஆலய பிரதம குரு.



கிளிநொச்சி மாவட்ட விவசாய பெருமக் களின் வாழ்வாதாரத்திற்கு உயிர் நாடியாக இருக்கின்ற வளங்களில் ஒன்று இரணை மடுக்குளம். இக்குளத்தில் களஞ்சிய காவலனாக இருந்த தவத்திரு. யோகர் சுவாமி களின் சிந்தனையில் உதித்த ஆலயம் இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலயம். அம்பிகை தனது பரிவார மூர்த்திகளுடன் தேர் ஏறி வலம்வந்து எம்மாவட்ட விவசாயிகளுக்கும் ஜீவராசிகளுக்கும் கருணை மழை பொழிய பிரார்த்திக்கின்றேன்.

**அ.செல்வராசா பிரதி விவசாயப்பணிப்பாளர் கிளிநொச்சி.**



**வாழ்த்துச் செய்தி**

நீர்வளச்சிறப்பினில் நிமிர்ந்திடும் வளநகர் கிளிநொச்சியின் தாயவள் எங்கள் இரணைமடு கனகாம்பிகை. கிளிநொச்சி என்றால் எல்லோருக்கும் நினைவில் உதிப்பது இரணைமடுக்குளமும் கனகாம்பிகை அம்மன் கோவிலும் தான். இரணைமடுவின் காவற்தெய்வமாகவும் கிளிநொச்சி மக்களுக்கு அருள்பாலிக்கும் தெய்வமாகவும் விளங்கும் அருள்மிகு கனகாம்பிகை அம்மன் ஜயவருடப்பிறப்பில் தேரேறி வருவது அனைவருக்கும் மகிழ்ச்சி தரக்கூடிய விடயமாகும். பாவங்கள் போக்கும் இத்திருநாளில் அம்பாளின் பாதார விந்தங்களை தொழுது அருளைப் பெறுவோமாக.

**கோ.நாகேஸ்வரன், கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர்**



**அரச அதிபர் வழங்கும் வாழ்த்துச் செய்தி**

கிளிநொச்சியின் வாழ்வும் வளமும் மையங்கொண்டுள்ள இரணைமடு பெரு நீர்ப்பாசனத்தின் நிறைவே எமது மாவட்டத்தின் மகிழ்வின் பிறப்பிடமாகவுள்ளது. இவ்வகையில் இந்தக் குளத்தினை நம்பிவாழும் பெருந்தொகையான மக்களின் நம்பிக்கைகளுடன் கலந்துள்ள இக்குளத்தின் அருகிருக்கும் கனகாம்பிகை அம்மனின் ஆலயத்தின் தேர்த்திருவிழா குறித்து வெளிவரும் இச் சிறப்பு மலருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

**திருமதி ரூபவதி கேதீஸ்வரன், அரச அதிபர், கிளிநொச்சி.**



**ஆலய அறங்காவலர் சபைத் தலைவர்**

பாரிசாத பூவதன்மேல் பைங்கிளி ஏந்து செங்கரத்தாள்
வாரிவழங்கும் வரத கரம் வருபிணி நீக்கும் அபயகரம்
காரியம் யாவும் சித்தியளிக்கும் கனகாம்பிகையின்
திருக்கோலம்- புத்திரரோடு
தேரினில் கண்டு பணிவோருக்கு நினைத்தவை யாவும்
கிட்டுந்தானே

**அன்னையின் அருள் அகிலம் எல்லாம் ஆளும்**

எஸ்.என்.செல்வராசா

SINGER PLUS
A9 Road,
Karadippokku Junction
Kilinochchi.
TP:021 228 0199, 021 567 5677
முகாமையாளர் மற்றும் ஊழியர்கள்.

A.K.R.
Motors
133, A9 Road, Kilinochchi.
TEL: 021 228 5375

...KS
...d,

A9 a சப்ளையர்ஸ்
நீதிமன்றம் முன்பாக
பா...லை பொருட்கள், அலுவலகப் பொருட்கள், டோனர்கள், காட்ரிச் மற்றும் கணனி பொருட்கள் விற்பனையாளர்கள்.
தொ.பே.இ. 021 2285595, 0777 890915, 0777697184, 0777 311152.
மின்னஞ்சல்: a9asuppliers@yahoo.com

Nikalya
Nikallarasi Vanipam
Dealers in Hardware,items,Electrical Goods, paints
PVC Pipe & Fittings etc
A-9, Road, Kilinochchi, Tel:021 2285383, 077 8171503
Branch:Mullai Road, Visuvamadu.

MUTHTHUPPILLAIYAR
VANNACHCHOLAI
Dealers in all Kinds of Textiles
Specialist in Wedding Sarees
முத்துப் பிள்ளையார்
வண்ணச்சோலை
Kilinochchi Tel: 021 2285137
Mallavi Tel: 021 2060710

...ORT
...ARE
...tion,
...44 3105

அனைத்து மங்களகரமான நிகழ்வுக்கும் ஒரே இடம்
SIVAGURU WEDDING HALL
சிவகுரு திருமண மண்டபம்
A9 Road, Kilinochchi
Opposite The Food City
Fax-021 228 5380,
TP: 021 228 0155-0770242060
email- Sivagakuruparanthan62@yahoo.com

கந்தன் களஞ்சியம்
ஏ9 வீதி, கிளிநொச்சி.
தொ.பே.இ. 021 228 3705

மணி ஐயப்பா நகைப்பூங்கா
கந்தசுவாமி கோவில் முன்பாக
ஏ9 வீதி, கிளிநொச்சி.
077 2735406

...ncy
...chchi.

வித்தியா டெக்ஸ்டைல்
HNB முன்பாக, கனகபுரம் வீதி,
கிளிநொச்சி.
தொ.பே.இ. 077023022

Mullai Rest
A/C NON A/C ROOMS & Conference Hall
Tel: 021 228 5358, 0778400893
S.Chandrasegaram, Director.
077 8885777/ 0775951819
No.09,Uthayanagar
Kanagapuram Road,
Kilinochchi.

கல், மண் நீக்கப்பட்ட சிறந்த அரிசி வகைகள்
மொத்த வியாபாரம் நெல் கொள்வனவு அரிசி மொத்த வியாபாரம்
வேல்முருகன் அரிசி ஆலை
Vel Murugan Rice Mill
Amerson Road, Karadippokku, Kilinochchi
S.M.R
TP: No. 0776357024
எமர்சன் வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி.

...hop
...t Items
...139

பிள்ளையார் அருள்
P.A. Pillayar Arul
Vannachcholai.
A9-Road,
Kilinochchi.
TP:021 2285789, 0773500082

Proprietor
M.Parththeepan
Parththeepan Art
Digital Printing
Digital Board, Sticker & All kind
Digital Printing Service
A9 Road, Kilinochchi
Kanagapuram Road, Kilinochchi.
TP:021 228 3922-0777402847
e-mail: Parththeepanart@yahoo.com-Parththeepanart@gmail.com

பிரியங்கா நகைமாளிகை
தங்கப்பவுண் நகை வியாபாரம்
NEW PRIYANGA JEWELLERS
Ganuine 916 Gold
கச்சேரி முன்பாக கிளிநொச்சி.
0212285433, 0213208611,
0777175059
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்,
021 222 5644

...kam
...ilinochchi

மீனாட்சி நகைமாடம்
மதியரசி நகைமாடம்
இளவரசி நகைமாடம்
கலைவாணி நகைமாடம்
கனகபுரம் வீதி,
கிளிநொச்சி.
0776399352

நிவி Phone Shop
கனகபுரம் வீதி
(புகையிரத கடவை அருகில்)
கிளிநொச்சி.
தொ.பே.இ. 0770542730- வேந்தன்

நாதன்'ஸ்
ஆயுர்வேத மருந்துக்கடை
T.P.No.
0770666024
டிப்போ சந்தி அருகாமை,
கனகபுரம் வீதி, கிளிநொச்சி.

...பாக்குவரத்து வசதி மற்றும் அன்னதானம் என்பன ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. ஆலய அறங்காவலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேருந்து தரிப்பிட நிழற்குடைகள் பாடசாலைகள் முன் அமைப்பு

(மன்னார்)

மன்னாரிலுள்ள மூன்று பாடசாலைகளுக்கு முன்பாக பேருந்து தரிப்பிட நிழற்குடைகளும், மன்னார் தனியார் பேருந்து நிலையமும் புனரமைக்கப்படவுள்ளதாக வடமாகாண மீன்பிடி போக்குவரத்து, வர்த்தக வாணிப மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மன்னார் நகரசபைக்கு நேற்றுமுன்தினம் விஜயம் செய்த அமைச்சர் பா.டெனிஸ்வரன் மற்றும் அமைச்சின் செயலாளர் ஆர்.வரதீஸ்வரன் ஆகியோர் நகரசபையின் செயலாளர், பிரதி நகர முதல்வர் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர் ஆகியோருடன் விசேடசந்திப்பொன்றை மேற்கொண்ட போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்படி, மன்னார் நகரப்பகுதியில் உள்ள புனித சவேரியார் ஆண்கள்கல்லூரி, புனித சவேரியார் பெண்கள் கல்லூரி, சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி ஆகிய பாடசாலைகளுக்கு முன்பாக பேருந்தில் வருகின்ற பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் வெயில் மற்றும் மழை காலங்களில் எதிர்நோக்குகின்ற அசௌகரியங்களை கருத்திற்கொண்டு பேருந்து தரிப்பிட நிழற்குடை அமைப்பதற்கான திட்டத்தினை நடைமுறைப்படுத்த உத்தரவிடப்பட்டன.

இத்திட்டம் நடைமுறைப்படுத்தவுள்ள இடங்களை அமைச்சருடனானகுழுவினர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

இத்திட்டத்தினூடாக பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் நன்மையடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதனைத் தொடர்ந்து மன்னார் தனியார் பேருந்து நிலையத்துக்கு விஜயம் மேற்கொண்டு மன்னார் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினரை சந்தித்த அமைச்சருடனான குழுவினர் மன்னார் தனியார் பேருந்து நிலையத்தை புனரமைப்பது தொடர்பாக கலந்துரையாடினர்.

கலந்துரையாடலின் முடிவில் பேருந்து நிலையம் வெகு விரைவில்புனரமைக்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

தொடர்ந்து தனியார் பேருந்து நிலையத்தை பார்வையிட்டனர். பின்னர் அமைச்சர் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான அஸ்மின் அயூப் மற்றும் கேசவன் சயந்தன் ஆகியோருடன் சட்டவிரோத மணல அகழ்வு சம்பந்தமாக கலந்துரையாடலையும் மேற்கொண்டார்.

(9-6)

# ஆனந்தபுரத்திற்கான குடிநீர் விநியோகத்தை விஸ்தரிக்குக

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள ஆனந்தபுரம் கிராம சேவையாளர் பிரிவிற்கு வழங்கப்படுகின்ற நீர் போதுமானதாகவில்லையென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆனந்தபுரம் கிராமத்திற்கு புதுக்குடி யிருப்பு பிரதேச செயலகத்தின் ஒழுங்குபடுத்தலின் ஊடாக பிரதேச சபையினரால் 10இற்கு மேற்பட்ட நீர்த்தாங்கிகள் அமைக்கப்பட்டு குடிநீர் விநியோகம் இடம்பெற்று வருகின்றது.

எனினும் ஆனந்தபுரம் கிராமத்தின் 5 ஆம் 6ஆம் வட்டாரங்களிற்கு வழங்கப்படுகின்ற குடிநீர் போதிய அளவில் இல்லையென மக்கள் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு குடிநீர் வழங்கல் ஒழுங்கு முறையிலும் இடம்பெறுவதில்லை.

தற்போது வரட்சிக் காலநிலையுள்ளதால் மக்களுக்கான குடிநீரை ஒழுங்கு முறையில் வழங்குவது அவசியமாகும்.

ஆகவே தினமும் காலை மாலையென இரண்டு வேளைகள் கிராமத்தின் மேற்குறித்த பகுதிகளுக்கு பிரதேச சபையினரால் குடிநீர் விநியோகிக்கப்பட வேண்டுமென மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

(9-267)

# கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

(கிளிநொச்சி)

உருத்திரபுரம் பாலையடி பிள்ளையார் ஆலயத்திற்கு முன்பாக தேசிய அடையாள அட்டை, வாகன சாரதி அனுமதிப் பத்திரம் உள்ளிட்ட ஆவணங்கள் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய கிளிநொச்சி செல்வாநகர் என்ற முகவரியையுடைய முத்துச்சாமி பார்த்தீபன் என்பவருடைய 900994559V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையும் பணப்பை, ATM அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், வாகன காப்புறுதி பத்திரம், டயலொக் சிம், வங்கியில் அடகு வைத்த பற்றுச் சீட்டுக்கள் என்பனவே கண்டெடுக்கப் பட்டுள்ளன.

இவ் ஆவணங்கள் உருத்திரபுரம் கூழாவடியில் அமைந்துள்ள இராணுவ காவலரணில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் உரியவர் இவற்றை பெற்றுக் கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(9-254)





கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகபிரிவின்- திவிநெகும புத்தாண்டு சந்தை அண்மையில் டிப்போ சந்தியில் நடைபெற்றபோது...

(படங்கள் :- சிவநகர் செய்தியாளர்)

# யானைகளின் தொல்லை; பீதியுடன் மக்கள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் சில இடங்களில் யானைகளின் தொல்லை அதிகரித்துள்ளதனால் அச்சத்துடன் வாழ வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளதாக மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இம்மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள திருமுறிகண்டி, புளியங்குளம், முத்து ஐயன்கட்டு, கனகரத்தினபுரம், கரிப்பட்ட முறிப்பு ஆகிய இடங்களில் யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது.

அத்தோடு துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் புத்துவெட்டுவான் ஐயன்கன்குளம் ஆகிய இடங்களிலும் யானைகளின் தொல்லை காணப்படுகின்றது.

இவ்விரு இடங்களிலும் பாடசாலை மாணவர்கள் பிரத்தியேக வகுப்புக்களுக்கும் பாடசாலைகளுக்கும் செல்லும் போது அச்சத்துடனேயே செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மேற்குறித்த இடங்களில் ஒரு மாத காலமாகவே யானைகள் அட்டகாசம் அதிகரித்துள்ளது.

இரவு பகல் வேளைகளில் வீடுகளுக்குள் புகுகின்ற யானைகள் பயன் தரு மரங்களையும் வீடுகளில் அடுக்கி வைக்கப்பட்டுள்ள நெல் மூடைகளையும் நாசம் செய்கின்றன.

இது தொடர்பில் பிரதேச செயலருக்கு அறிவித்தல் வழங்கியும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

எனவே இம்மாவட்டத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் யானைகளின் தொல்லையைக் குறைக்க வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-267)




# ஹிஜ்ராபுரம் கிராமத்தில் புதிதாக சிறுவர் பூங்கா

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட ஹிஜ்ராபுரம் கிராமத்தில் 15 இலட்சத்து 24 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட சிறுவர் பூங்கா, முள்ளியவளையில் 44 இலட்சத்து 57 ஆயிரம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட பொதுச் சந்தை, கேப்பாப்பிலவில் 6 இலட்சத்து 30 ஆயிரம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட பொதுச்சந்தை ஆகியன கடந்த 9 ஆம் திகதி புதன்கிழமை திறக்கப்பட்டுள்ளன.

மேற்படி ஹிஜ்ராபுரம் கிராம சேவையாளர் பிரிவின் சிறுவர் பூங்கா பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நெல்சிப் திட்டத்தினூடாகவே அமைக்கப்பட்டுள்ளது. அத்தோடு கேப்பாப்பிலவில் அமைக்கப்பட்ட புதிய பொதுச் சந்தையுடன் முள்ளியவளையில் புனரமைக்கப்பட்ட பொதுச் சந்தை ஆகியன கரைதுறைப்பற்று பிரதேச சபையின் வருமான நிதியிலிருந்து பெறப்பட்ட 50 இலட்சத்து 87 ஆயிரம் ரூபா செலவிலும் அமைக்கப்பட்டுள்ளன.

இவற்றின் திறப்பு விழாவில் வணிக கைத்தொழில் அமைச்சர் றிசாட் பதியுதீன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் உனைஸ் பாரூக், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் சு.ரவீந்திரநாதன், முல்லை மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ந.பிரபாகரன், ஜனாதிபதியின் முல்லை மாவட்ட இணைப்பாளர் ச.கனகரத்தினம், வடமாகாண சபை உறுப்பினர் ஜெனேபர் ஆகியோர் கலந்து கொண்டனர். (9-267)

# சமூக விஞ்ஞான செயலமர்வுகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தினால் பல்வேறு பாடங்களிற்கான செயலமர்வுகள் நடத்தப்பட்டுவருகின்றன.

இந்நிலையில் சமூக விஞ்ஞான பாடச் செயலமர்வுகள் ஆரம்பமாகி பரந்தன் ஆசிரிய மத்திய நிலையத்தில் கடந்த வியாழக்கிழமை முதல் நடைபெற்று வருகின்றது.

இச் செயலமர்வு காலை 8.30 மணி முதல் பிற்பகல் 5.30 மணி வரை இடம்பெறுகின்றது.

இதன்படி எதிர்வரும் 16 ஆம் திகதி புதன்கிழமை குடியுரிமைக் கல்விக்கான செயலமர்வும் எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை வரலாறு பாடத்திற்கான செயலமர்வும் நடைபெறவுள்ளன.

இவ்விரு பாடங்களிலும் புதிய கற்பித்தல் உத்திகள், கற்றல் உபகரணம் தயாரித்தல் ஆகியவை பயிற்றப்படவுள்ளன.

எனவே தரம் 6 முதல் தரம் 11 வரை மேற்குறித்த பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்களை, ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி, பாடநூல் போன்றவற்றுடன் தவறாது சமூகமளிக்குமாறு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் அறிவித்துள்ளார்.

(9-254)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மையான மகிழ்ச்சி நல்ல செயல்களைச் செய்து முடித்த போதுதான் வரும்
- பெஞ்சமின் ஃபிராங்க்ளின்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# சுட்டுக் கொலையை சுட்டுக் கொல்வோம்

ஐயா! நாட்டில் இப்போது என்ன நடக்கிறது? இப்படியான கேள்வியே மக்களிடம் எழுவதாக உள்ளது.

இந்தக் கேள்விக்குப் பதில்; வீதி திருத்தம் என்றோ, துரையப்பா ஸ்ரேடியத்தில் இசை நிகழ்ச்சி என்றோ பதிலளிக்க முடியுமா என்ன?

இப்போது நாட்டில் என்ன நடக்கிறது? என்ற கேள்வியானது ரோந்துப் பணியில் மீளவும் படையினர் ஈடுபட்டுள்ளமை, கிளிநொச்சி தர்மபுரத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகக் கூறப்படும் கதை, அதனைத் தொடர்ந்து தாயும் மகளும் கைது இப்படியாக ஒவ்வொரு நாளும் நடந்த நாடகம், திடீர் என மூவர் சுட்டுக் கொலை என்ற கட்டத்தில் தொடருமா? முற்றுமா? என்பது தெரியாமல் உள்ளது.

இந்தச் சம்பவங்கள் நிஜமானதுதானா? என்று கேட்பவர்கள், விண்டவர் கண்டிலர்; கண்டவர் விண்டிலர் என்ற தத்துவத்தைக் கூறிக் கொள்கின்றனர்.

விண்டவர் கண்டிலர்; கண்டவர் விண்டிலர் என்பதற்குப் பொருள் தெரியவில்லை என்று விழித்தால், உள்ளது இல்லதாகாது; இல்லது உள்ளதாகாது என்ற சற்காரிய வாதத்தைக் கூறி முடிக்கின்றனர்.

ஐயா! விளக்கம் கேட்டதற்கு இன்னும் கடுமையான பொருள் கூறுவது முறையோ! என்று நாம் முணுமுணுத்தால்; கைதுகள் உண்மை, தேடுதல் வேட்டைகள் உண்மை, மூவரைச் சுட்டுக் கொன்றது உண்மை, தர்மபுரத்தில் சுட்டது உண்மையா? என்பதுதான் புரியாப் புதிர் என்கின்றனர்.

இங்குதான் சற்காரிய வாதம் பொருள் தருகிறது என்கின்றனர். இத்தகையதோர் நிலைமையால்தான் ஐயா! இங்கு என்ன நடக்கிறது என்ற கேள்வி எழுகிறது.

இந்தக் கேள்விக்கான பதிலை எப்படிக் கூறுவது. முன்பு நாங்கள் உரிமைக்காகப் போராட்டம் நடத்தினோம். அப்போதெல்லாம் அவர்கள் போர் வேண்டாம் என்றனர்.

2009 மே மாதம் போர் முடிந்து போயிற்று. போருக்குப் பின் எங்களின் நிலைப்பாடு அமைதி என்றானது. ஆனால் போர் வேண்டாம் என்றவர்கள் இப்போது போர் வேண்டும் என்று கூறுகின்றனர்.

போர் வேண்டும் என்பதற்குள் ஆழமான கருத்துமுண்டு. அதாவது வடக்கில் போர்ச் சூழல் நிலவுவதான நிலைமை இருக்கவேண்டும். அதேநேரம் அந்தப் போர்ச் சூழலில் புலிகள் மீள வருவதாக, மீளச் சுடுவதான கதைகள் இருக்க வேண்டுமே தவிர, அந்தக் கதையாவும் கற்பனை என்பதாகவும் இருத்தல் அவசியம்.

அப்படியானால் போர்ச் சூழலை எப்படி ஏற்படுத்துவது என்ற கேள்வி எழும்.

அட! இதுகூடத் தெரியாதா? பள்ளி வாழ்க்கையில் துள்ளித் திரியும் போது, நீ புலி; நான் ஆமி என்று நாங்களே பிரிந்து நின்று விளையாடினோமல்லவா? அதுபோல விளையாடுவது என்று பெரியவர்கள் முடிவெடுத்தால் யார் என்ன செய்வது? ஜெனிவாத் தீர்மானத்தின் காரம் போக்க அவசர தேவையாக வடக்குக் கிழக்கில் ஒரு யுத்த சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

அதற்கான ஒரு ஏற்பாடுதான் இதுவெனினும், சுட்டுக் கொலை என்பதைச் சுட்டுக் கொல்லாத வரை இந்த நாட்டில் பிரச்சினைகள் வெவ்வேறு வடிவங்களில் ஏற்படவே செய்யும்.

# மிருகங்களுக்கான சலுகைகள் கூட முஸ்லிம்களுக்குக் கிடையாதா?

## வட மாகாண சபை உறுப்பினர் றிப்கான் ஆதங்கம்

1990இல் மன்னார் மாவட்டத்தில் இருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட அனாதரவற்ற முஸ்லிம்களுக்கு பொது பல சேனாவால் இன்று நெருக்குவாரங்கள் ஏற்பட்டுள்ளன. மிருகங்களிற்கு கொடுக்கப்படும் சலுகைகள் கூட முஸ்லிம்களுக்கு கிடையாதா? இப்படியான ஒரு சோதனை நிலைமையே அகதி முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ளது என வடமாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இந்த நாடு அனைவருக்கும் சொந்தமானது. அந்த வகையில் முஸ்லிம் மக்களுக்கும் சொந்தமான நாடு இது. இந்த நாட்டை அழகான முறையில் கொண்டு செல்லும் ஜனாதிபதியின் பெயரை நாசப்படுத்தும் செயல்களையும், துரோக செயல்களையும் செய்கின்ற பேரினவாதிகளின் முற்போக்கு செயல்களையும் அடாவடிதனத்தையும் தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்றுச் சனிக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

முஸ்லிம்கள் குற்றவாளிகளாக எங்கே எப்போது இந்த நாட்டிற்கு எந்த விதத்தில் துரோகம் செய்தார்கள்? என்று கேட்க விரும்புகின்றேன். பொது பல சேனா என்றால் என்ன? இனவாதத்தை உருவாக்குபவர்களா? மாற்று மதங்களை அழிப்பவர்களா? இது வேண்டுமென்றால் உங்கள் நாடாக இருக்கட்டும். நாங்கள் நாட்டைக் கேட்கவில்லை, இந்த நாட்டில் பிறந்து வாழ்ந்து வருபவர்கள் நாங்கள். இங்கு இருப்பதற்கு ஒரு துண்டு காணிகளை மாத்திரமே கேட்கின்றோம்.

நாங்கள் இனவாதிகள் அல்ல, மத வாதிகளும் அல்ல, மதத்திலோ, மார்க்கத்திலோ எங்கள் முஸ்லிம் சமுதாயத்தினர் இறை அச்சத்துடன் ஒற்றுமையாகவும் அமைதியாகவும் இந்த நாட்டில் வாழ்கின்றவர்கள். தேரர்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகின்றேன், மதங்களை பேணி நடக்க வேண்டும். பௌத்த மதத்தை பொறுத்த வரை எல்லா இனத்தவர்க்கும் ஒரு கௌரவத்தை உண்டு பண்ணக்கூடிய மதமாகும்.

யாரிற்குமே வதை செய்வதையோ, மன உளைச்சலையோ கொடுக்காத ஒரு உன்னதமான மதமாகும். அந்த உன்னதமான பௌத்த மதத்தை அதுவும் முழுதாக படித்த ஒரு கூட்டம் காட்டு மிராண்டித்தனமாக நடப்பது ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாதொரு விடயமாகும்.

அது மட்டுமின்றி நாங்கள் தனி நாடு கேட்கவில்லை. பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த இடத்தில் திரும்பவும் இருப்பதற்கு அரசாங்கத்தினால் அங்கீகாரம் பெற்றுக்கிடைத்த இடங்களிலேயே இருக்கின்றோம். நீங்கள் சொல்லுவதை முஸ்லிம்களோ அல்லது தமிழ் பேசும் மக்களோ கேட்க வேண்டிய அவசியம் இல்லை.

இந்த நாட்டில் நீங்கள் யார்? எங்களைப் போல் ஒரு பிரஜா உரிமை பெற்றவர்கள். உங்களிற்கு இருக்கிற அனைத்து உரிமைகளும் இந்த நாட்டில் வாழ்கின்ற அனைத்து இன மக்களிற்கும் இருக்கிறது என்பதை ஜனாதிபதி பல முறை சொல்லியிருக்கிறார்.

இது உங்களுக்கு விளங்கவில்லையா? இனி இப்படியான தேவையற்ற விடயங்களில் தலையிட எந்த அருகதையும் கிடையாது. இப்படியான செயல்களை முற்றாக நிறுத்த வேண்டும். மாற்று மதங்களில்தலையிடுவதற்கு பொது பல சேனாவிற்கு அதிகாரம் கிடையாது.

உங்களது செயற்பாடுகளை அடக்கும்நேரம்வெகு தூரத்தில்இல்லை. இறைவன் நிச்சயமாக உங்கள் செயல்களைப் பார்த்துக்கொண்டிருக்கிறான். எங்களிடம் படைபலமோ, ஆயுதபலமோ இல்லை. ஆனால் இப்பிரச்சினையை நாங்கள் இறைவனிடமே பாரப்படுத்தியுள்ளோம். இதற்கான தண்டனையை இறைவனே அளிப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-6)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### கண்டேன்



நில்லாத நீர்சடைமேல் வைத்த நிமலனை
நினைக்கு மடியவர் மனங்கோயில் கொண்டானை
எல்லாமு மல்லவு மாயிருப் பானை
என்னா ரமுதினை எளிவந்த பிரானை
கொல்லானை யின்னுரி போர்த்துகந் தானைக்
கூடலிற் பரியெல்லாம் நரியாக்கி னானை
செல்லார் வரைகளும் அருவியும் பொழில்களும்
தேங்கும் இலங்கை மாநகரானை

# குருத்து ஞாயிறுடன் எம் வாழ்வை மாற்றுவோம்; எருசலேம் அனுபவம் பெறுவோம்

தவக்காலத்தில் இன்று குருத்து ஞாயிறு ஆகும். திருவழிபாட்டு முறைப்படி இன்றைய நாள் இயேசுவின் பாடுகளின் ஞாயிறு என்றுதான் அழைக்கப்படுகிறது. இயேசுவின் துன்பங்களையும் இறப்பையும் பற்றி இந்த வாரம் முழுவதும் நாம் சிந்திக்க இருக்கிறோம்.


இன்று உலகெங்கும் குருத்தோலை ஞாயிறு கொண்டாடப்படுகிறது. அனைத்துத் தேவாலயங்களிலும் குருவானவரால் புனித நீர்கொண்டு மந்திரிக்கப்பட்ட குருத்தோலைகளைக் கத்தோலிகர்கள் கையிலேந்தி திருப்பலிக்கு முன்னதாக தேவாலய முன்ற லிலிருந்து ஊர்வலமாகச் சென்று ஆலயத்திற்குள் நுழைவதை ஒரு வழக்கமாக வைத்திருக்கிறார்கள்.

இயேசுவுக்கு சொந்த ஊர் மக்கள் வழங்கிய வரவேற்பை நினைவு

இலட்சியவாழ்வு வாழும் எவருடைய வாழ்வும் இப்படித்தான் கசப்பானதாக, கடினமானதாக வெற்றியும் தோல்வியும் கலந்த ஒரு இனிய அனுபவமாகவேயிருக்கும்.

குருத்து ஞாயிறு இந்த இரு வேறு நிலைகளையும் நமக்கு உணர்த்துகிறது. தோல்வியில் நம்பிக்கையையும் வெற்றியில் நிதானத்தையும் சமன் செயது வாழ உணர்த்துகிறது.

அர்ப்பண வாழ்வில் இலட்சிய பயணத்தில் வேதனையும் விரக்தியும் விமர்சனமும்நம் வாழ்க்கையை விகாரப்படுத்திவிடலாம். குருத்து வெளிப்படுத்தும் இளமை, புதுமை, செழுமை இங்கு நம்பிக்கை உரம் ஊட்டும் என்பதாலே இயேசு இதை அனுமதிக்கிறார். இந்த குருத்து ஞாயிறு தந்த உயிர்ப்பின் நம்பிக்கையில் பெரிய வெள்ளியைச் சந்திக்கும் வலிமையைப் பெற்றார். இந்த



அனைத்தையும் தலை கீழாக மாற்றின. வழக்கமாய் எருசலேமில் நடத்தப்படும வெற்றி ஊர்வலங்கள் அரசு அதிகாரிகளால் அல்லது மதத் தலைவர்களால் ஏற்பாடு செய்யப்படும்.

முதல் குருத்து ஞாயிறன்று நடந்த இந்த ஊர்வலமோ மக்களால் எதேச்சையாக,மானபூர்வமாக ஏற்பாடு செய்யப்பட்டதாயிருந்தது. "ஏற்பாடு செய்யப்பட்டது" என்பதை விட "இயல்பாகவே நிகழ்ந்தது"என்று சொல்வதே மிகவும் பொருந்தும். இயேசுவைச் சுற்றி இயல்பாகவே எழுந்த இந்த கூட்டத்தைக் கண்ட அதிகார வர்க்கம் ஆட்டம் கண்டிருக்க வேண்டும். அவர்கள் உருவாக்கியிருந்த அதிகார உலகம் தடம் புரண்டதைப்போல் உணர்ந்திருக்க வேண்டும

## பரமபிதா காட்டிய பாதை

கூறும்விதமாக யூத கிறிஸ்தவர்களால் முதலில் கொண்டாடப்பட்டு வந்த இந்த குருத்தோலை நிகழ்வு நாளடைவில் எகிப்து,சிரியா என்று பரவி பிறகு கிறிஸ்தவர்களின் முக்கிய நினைவேந்தல் ஆனது என்கிறது வரலாறு.

இந்த குருத்து ஞாயிறு நமக்கு உணர்த்தும் செய்தி நாம் அனைவரும் எருசலேமுள் நுழைவதற்கு தயாராக இருக்கவேண்டும் என்பதே. எருசலேம் என்பது இறைவன் வாழும் இடம்.

கடவுளின் மாட்சியும் மகிமையும தங்கியுள்ள எருசலேம் தேவாலயமே இதற்குச் சான்று. இந்த எருசலேமுள் நுழைவதையே தன் இலட்சியமாக இயேசு கொண்டிருந்தார்.

எருசலேம் நோக்கிய இயேசுவின் பயணம் தொடங்கிய நேரம் முதல் எருசலேமில் நுழைந்த பொழுதும் அதன் பின் அங்கு நிகழ்ந்த ஒவ்வொரு நிகழ்ச்சியும் இதயத்திற்கு இதமானது அல்ல.

உயிர்ப்பன் நம்பிக்கையை நினைவூட்டும் குருத்துஞாயிறைக் கொண்டாடும் நாம் வாழ்வின் பெரிய வெள்ளிகளை வலிமையோடு சந்திப்போம்.

இயேசு எருசலேமுக்குள் சென்ற போது மக்கள் குருத்தோலைகளை பிடித்துக் கொண்டு அவருக்கு எதிர்கொண்டு போய் "ஓசான்னா ஆண்டவரின் பெயரால் வருகிறவர் போற்றப்படுவாராக! இஸ்ராயேலின் அரசர் போற்றப்படுவாராக" என்று சொல்லி ஆர்ப்பரித்தனர்.

நாம் கழுதையை மதிப்பிற்குரியதாக பெரிதுபடுத்தாவிடினும் விவிலியக் காலத்தில் கழுதையை மதிப்போடு நடத்தி வந்தார்கள். கழுதை அமைதியான ஒரு விலங்காகக் கருதப்பட்டது. குதிரையோ போர்க்களத்திற்கு வீரர்களைக் கொண்டு செல்லும் விலங்காகக் கருதப்பட்டது.

முதல் குருத்து ஞாயிறு நிகழ்வுகள்

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

இயேசு தன் பணிவாழ்வை ஆரம்பத்திலிருந்து யூத மதத் தலைவர்களுக்கு எல்லாமே தலைகீழாக மாறியதுபோல் இருந்தது.

இந்தத் தலைகீழ் மாற்றங்களின சிகரம் இந்த குருத்துஞாயிறு. இதைத் தொடர்ந்து இயேசு அந்த மதத் தலைவர்களின் அரணாக இருந்த எருசலேம் கோவிலில்நுழைந்து அங்கிருந்த அமைப்பையும் தலைகீழாக்கினார்.

எனவே இந்த குருத்து ஞாயிறு அதிகாரஅமைப்புகளைப் பல வழிகளிலும் புரட்டிப்போட்டதன் மூலம் ஒரு புரட்சியையே ஏற்படுத்தியிருந்தது. எனவே இந்த குருத்து ஞாயிறுடன் எம் வாழ்வை மாற்றுவோம் எருசலேம் அனுபவம் பெறுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18 வருட கனவை நனவாக்கிய இலங்கை சிங்கங்கள்

இலங்கை அணி உலகக் கிண்ணம் ஒன்றை கைப்பற்றும் என 18 வருடமாக தவமாக காத்திருந்த இலங்கை கிரிக்கெட் ரசிகர்களுக்கு கடந்த ஏப்ரல் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைதான் அந்த தவத்தின் பயன் கிடைக்கப் பெற்றது.

இலங்கை முதல் முறையாக இருபது-20 உலக கிண்ணத்தை கைப்பற்றியது.

1996 ஆம் ஆண்டும் முதல் முறையாக இலங்கை அணி 50 ஓவர்கள் கொண்ட உலகக் கிண்ணத்தை அர்ஜுன ரணதுங்க தலைமையில் கைப்பற்றியது.

**மலிங்க மற்றும் இலங்கை பந்து வீச்சாளர்களின் இறுதி ஓவர்களில் கட்டுப்பாடான பந்து வீச்சு, திட்டமிடல், களத்தடுப்பு வியூகங்கள் இலங்கை அணியின் உலகக் கிண்ண கனவை நனவாக்கியது.**

அதன் பிற்பாடு 2007, 2011 ஆம் ஆண்டுகளில் 50 ஓவர்கள் கொண்ட உலகக் கிண்ண இறுதிப் போட்டியிலும் 2009, 2012 இருபது-20 உலகக் கிண்ண இறுதிப் போட்டியிலும் மஹேல, சங்கக்கார தலைமையிலும் விளையாடிய போதும் உலகக் கிண்ணத்தை கைப்பற்ற முடியாமல் போயிற்று.

உலகக் கிண்ண இறுதிப் போட்டிவரை இலங்கை அணி வெற்றி நடை போட்டாலும் இறுதியில் இலங்கை அணிக்கு துரதிர்ஷ்டமே மிஞ்சியது.

உலக கிண்ணம் ஒன்றை கைப்பற்றியே ஆக வேண்டும் என்ற இலங்கை அணியின் நீண்டகால கனவு இராசிக்கார இலங்கை அணியின் திடீர் அணித் தலைவர் லசித் மலிங்க தலைமையே அக் கனவை நனவாக்கியது.

உலகின் தலை சிறந்த கிரிக்கெட் வீரர்களும் இலங்கை அணியை அடையாளப்படுத்தும் இலங்கை கிரிக்கெட்டின் இருபெரும் சிகரங்களான மஹேல ஜெயவர்த்தனவும் குமார் சங்கக்காரவும் சர்வதேச இருபது-20 போட்டியில் இருந்து விடைபெறும் அத் தருணத்தில் அந்த இரு கனவான்களுக்கும் பரிசாக உலக கிண்ணம் ஒன்றை கைப்பற்றியே ஆக வேண்டும் என்ற இலங்கை கிரிக்கெட் அணியின் கூட்டு முயற்சிக்கு கிடைத்த வெற்றி, இலங்கை கிரிக்கெட்டுக்கும் இலங்கை கிரிக்கெட் ரசிகர்களுக்கும் மனதை மறக்காத விடயமாயிற்று.



இந்தியா டெஸ்ட் அந்தஸ்து கிடைத்து 50 ஆண்டுகளுக்குப் பின்னர் தனது முதலாவது உலகக் கிண்ணத்தை 1983 இல் வென்றது. அதன்பின்னர் அவர்கள் அடுத்த உலகக் கிண்ணத்தை வென்றெடுக்க 24 ஆண்டுகள் தேவைப்பட்டது. (தோனி தலைமையில் 2007 இல் இருபது-20, 2002 இல் சம்பியனில் கிண்ணம் இந்தியா, இலங்கை பகிரப்பட்டது ) இந்த நீண்ட கால காத்திருப்புக்கு பின்னர் அடுத்த உலக கிண்ணம் கிடைத்தது.

இலங்கை இந்தியாவுடன் ஒப்பிடும் போது விரைவு டெஸ்ட் அந்தஸ்து கிடைத்தது.

15 ஆண்டுக்குள் 1996 இல் உலகக் கிண்ணத்தை கைப்பற்றியது. இப்போது 18 ஆண்டுகளில் அடுத்த இருபது-20 உலகக் கிண்ணத்தை கைப்பற்றியது.

இலங்கை அணியின் இரண்டு பொற்காலங்களைச் சேர்ந்த இரு தலைமுறை வீரர்களும் ஓர் உலகக் கிண்ணமாவது அவர்களது ஓய்வுக்கு முன்னர் கிடைத்திருப்பது தன்னலமற்று அவர்கள் தாய்நாட்டுக்கு விளையாடியத்தற்கான பரிசாக அமைகின்றது.

இலங்கை அணியை பொறுத்தவரை அவர்கள் அமைத்த வியூகங்கள் மிகப் பெரிய வெற்றியை ஈட்டித்தந்தது.

இந்தியாவின் ஒவ்வொரு துடுப்பாட்ட வீரர்களையும் பொறியில் சிக்க வைக்க அவர்கள் வகுத்த பந்துவீச்சு மற்றும் களத்தடுப்பு வியூகங்களால் ஓட்டங்களை பெறுவதில் இந்தியாவின் விராட் கோலியை தவிர ஏனைய அனைவரும் திக்கித் திணறினார்கள்.

**நியூசிலாந்துக்கு எதிராக ஹேரத்தின் பந்து வீச்சு, இந்தியாவுக்கு எதிராக மலிங்கவின் இறுதி ஓவர், திஸார பெரேராவின் அதிரடி, சங்காவின் 50 ஓட்ட உற்சாகம் இவற்றோடு சங்கா, மஹேலவின் ஆதரவு அணைப்பும் ஆனந்தக் கண்ணீரும் எத்தனை காலம் சென்றாலும் மறக்க முடியாத உலகக் கிண்ண நினைவுகள்.**

அதிலும் யுவராஜ் சிங்கும் வழமையாக இறுதி ஓவரில் சிக்சர் மழை பொழியும் இந்திய அணித் தலைவர் தோனியும் மாட்டிக் கொண்டது தான் மிகப் பெரும் ஆச்சரியம்.

ஒவ்வொரு இந்திய வீரர்களின் பலம், பலவீனம் பற்றி நன்கு அறிந்து அந்த இடங்களில் பந்துகளைத் துல்லியமாக இலங்கைப் பந்து வீச்சாளர்கள் வீசியிருந்தார்கள்.

களத் தடுப்பாளர்கள் புதிய, புதிய இடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தார்கள். திணறிய இந்திய வீரர்களில் திணறாமல் ஆடிய ஒரே ஒரு வீரர் கோலி மட்டுமே.

மலிங்க தலைமையிலான இந்த பெரிய கள வியூகங்களுக்கு மஹேல, சங்காவின் மிகப் பெரிய பங்கும் உண்டு.

கோலி மட்டும் 58 பந்துகளில் 77 ஓட்டங்களை பெற்றார். துடுப்பெடுத்தாடிய ஏனைய அத்தனை இந்திய வீரர்களும் 62 பந்துகளில் 53 ஓட்டங்களை பெற்றனர்.

இந்தியா கடைசி 4 ஓவர்களில் 24 பந்தில் 19 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. அதிலும் 4 ஓட்டங்கள் உதிரிகளாக பெறப்பட்டன.

இதில் யுவராஜ் சந்தித்த 9 பந்தில் 4 ஓட்டங்கள் எடுத்தார். தோனி 7 பந்தில் 4 ஓட்டங்கள் எடுத்தார். கோலி 8 பந்தில் 7 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தார்.

அவ்வாறு துல்லியமாக இலங்கை பந்து வீச்சாளர்கள் அடித்தாட முடியாதவாறு பந்து வீசி இருந்தார்கள்.

உலகின் மிகச் சிறந்த இருபது-20 இறுதி ஓவர்களில் பந்து வீச்சாக இதனை குறிப்பிடலாம்.

லசித் மலிங்க மட்டுமல்ல குலசேகர, சேனநாயக்க ஆகியோரும் கூட மிகக் கட்டுப்பாடாக, முன்னாள், இந்நாள் வீரர்களில் பாராட்டுக்களை பெறும் அளவுக்கு மிகச் சிறப்பாக பந்து வீசி இருந்தார்கள்.

ஒரு பந்து வீச்சாளர் அணித் தலைவராக இருந்து ஓர் அணிக்கு உலகக் கிண்ணம் ஒன்றை பெற்றுக் கொடுத்த முதல் சந்தர்ப்பம் இதுவே.

நியமிக்கப்பட்ட அணித் தலைமை பதவியை அணியின் நலனுக்காக குழப்பம் இல்லாமல் விட்டுக் கொடுத்த சந்திமாலையும் தெரிந்து இருக்க வேண்டும்.

இவ் இலங்கை குழாம் தொடர்ந்தும் இருக்குமானால் 2015 ஆம் ஆண்டு 50 ஓவர்கள் கொண்ட உலகக் கிண்ணமும் இலங்கை கையில் வந்து சேரும்.

**க.மதீசன்**

---

கொக்குவில் ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும்

# அமரர் சச்சிதானந்தம் ஞாபகார்த்த கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்று





கொக்குவில் ஐக்கிய விளையாட்டுக் கழகம் மானிப்பாய் தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் அமரர் ப.சச்சிதானந்தம் அவர்களின் ஞாபகார்த்தமாக இ.ச.பே.நாகரத்தினம் சக நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தும் மாபெரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டமும் பரிசளிப்பும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கோண்டாவில் இராம கிருஷ்ண மகா வித்தியாலய மைதானத்தில் [illegible] மையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கலந்துகொள்வார்.

கிரிக்கெட் இறுதியாட்டத்தில் குருநகர் கார்மெ[illegible] அணியும் கொக்குவில் வராகி [illegible] அணியும் பலப்பரீட்சை நடத்தவுள்ளது.

(கு)

---

# கூடைப்பந்தாட்டம்; உடுவில் மகளிர் சம்பியன்

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கமும் யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் இணைந்து யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 13 வயதுப் பிரிவு கூடைப் பந்தாட்ட அணிகளுக்கிடையில் நடத்திய கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி அணி சம்பியனாகியது.

மேற்படி சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இந்த இறுதிப்போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி அணியினை எதிர்த்து இராமநாதன் மகளிர் கல்லூரி அணி மோதியது.

முதல் சுற்றினை உடுவில் மகளிர் கல்லூரி அணி 15:03 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது. தொடர்ந்து இரண்டாவது சுற்றினையும் 7:1 என்ற புள்ளிகள் அடிப்படையில் உடுவில் வென்றது. இறுதியில் உடுவில் மகளிர் கல்லூரி அணி 22:04 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியனாகியது.

(க-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சினை சந்திக்க ஏங்கும் ஹசி



இந்தியாவின் கிரிக்கெட் ஜாம்பவான் சச்சினை சந்திப்பதற்கு ஆர்வமாக உள்ளது என்று அவுஸ்திரேலிய அணிவீரர் மைக் ஹசி கூறியுள்ளார்.

அவுஸ்திரேலிய அணி வீரர் மைக் ஹசி (38) கடந்த ஐபிஎல் தொடரில் சென்னை அணிக்காக விளையாடினார்.

இருபது-20 போட்டிகள் இளம் வீரர்களுக்கானது என்று பேசப்படும் சூழலில். 38 வயதான ஹசி, கடந்த ஐபிஎல் தொடரில் சென்னை அணிக்காக 17 போட்டிகளில் விளையாடி 733 ஓட்டங்கள் குவித்து. அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர்கள் வரிசையில் முதலிடம் பெற்றார்.

சூதாட்ட சர்ச்சையின் போது சென்னை அணி உரிமையாளர் குருநாத் மெய்யப்பன்தான் என. தெரிவித்து பின் அப்படி சொல்லவே இல்லை என்று பின் வாங்கியதாக செய்திகள் வெளிவந்த நிலையில். இந்த காரணத்துக்காகத்தான். மைக் ஹசியை இம்முறை சென்னை அணி ஏலத்தில் எடுக்கவில்லை என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இருப்பினும் 'நடப்புச் சாம்பியன்' மும்பை அணி. இவரை ரூ. 5 கோடிக்கு வாங்கியது. ஏழாவது பிரிமியர் தொடர் குறித்து மைக் ஹசி கூறியதாவது. கடந்த ஆறு ஆண்டுகளாக சென்னை அணிக்காக விளையாடிய நிலையில். மும்பை அணிக்காக இம்முறை களமிறங்கவுள்ளது சற்று வித்தியாசமாகத்தான் இருக்கும்.

அதேநேரம். சம்பியன் அணியான மும்பையுடன் இணைவதை பெரிதும் எதிர்பார்க்கிறேன். இந்த அனுபவம் இதுவரையில்லாத அளவுக்கு வித்தியாசமாக அமையும் என்று நம்புகிறேன்.

மேலும் மும்பை அணியின் நட்சத்திர வீரர் சச்சின் ஓய்வு பெற்றுவிட்டார் என்றாலும், இவருடன் நேரம் செலவிடவுள்ளோன். அவருடன் கிரிக்கெட் மற்றும் ஓய்வுக்கு பிந்தைய வாழ்க்கை குறித்து விவாதிப்பது போன்றவற்றை எதிர்பார்த்து காத்திருக்கிறேன் என்று கூறியுள்ளார்.



இங்கிலாந்து கிரிக்கெட் வீரர் ஜொனதன் டிரோட், வெஸ்ட் புரோம் விச் அல்பியன் - ரொட்ரன்ஹம் ஹொட்ஸ்பர் அணிகளுக்கு இடையிலான இங்கிலாந்து பிறீமியர் லீக் ஆட்டத்தை கண்டுகளிக்கிறார்.

# சிறுவர்களுக்கான தடுப்பூசிகளை வைத்தியசாலைகளில் வழங்க முடிபு

(கொழும்பு)

குடும்ப சுகாதார அதிகாரிகளினூடாக வழங்கப்படும் சிறுவர்களுககான சகலவிதமான தடுப்பூசிகளையும் வைத்தியசாலைகளினூடாக வழங்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

குடும்ப சுகாதார அதிகாரிகள் தொழிற சங்கப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதால் குடும்ப சுகாதார அதிகாரிகளினால் வழங்கப்பட்டு வந்த தடுப்பூசி வழங்கும் பணிகள் தடைப்பட்டுள்ளன.

தேசிய தடுப்பூசி வழங்கும் திட்டத்தின் கீழ் தடுப்பூசி வழங்குவது சிறுவர்களின் உரிமையாகும். இது அத்தியாவசிய சேவை என சுகாதார அமைச்சு தெரிவித்தது.

தடுப்பூசி வழங்குவது தொடர்பான பிரச்சினை குறித்து சுகாதார அமைச்சின் செயலாளரின் தலைமையில் விசேட கூட்டமொன்று நடைபெற்ற போது இந்தப் பிரச்சினைக்கு மாற்று வழியொன்றை முன்னெடுக்க ஆலோசனை வழங்கப்பட்டது.

இதன்படி சிறுவர்களுக்கு வழங்கும் சகல தடுப்பூசிகளையும் சகல வைத்தியசாலைகளினூடாகவும் கிளினிக் ஊடாகவும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இதற்குத் தேவையான தடுப்பூசிகளை வைத்தியசாலைகளுக்கு துரிதமாக வழங்குமாறு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. (அ)

## கொல்லப்பட்ட...

பெற்றோலிய கிடங்கு மீதும் விடுதலைப் புலிகள் நடத்திய விமான தாக்குதலிலும் தேவியன் விமானியாக செயல்பட்டவர் என அந்தச் செய்தியில் தெரிவிக்கப்படுகின்றது.

2009ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தில் புலிகளின் 2 விமானங்களும் அழிந்தன. இதைத் தொடர்ந்து தமிழகத்துக்கு தப்பி சென்றார் தேவியன். ஐரோப்பாவில் இருந்து நெடியவனால் கோபி இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்ட நிலையில் தேவியனும் இலங்கைக்கு சென்று இணைந்திருக்கிறார்.

இதைத் தொடர்ந்து இலங்கை அரசு கோபியுடன் சேர்ந்து தேவியனைப் பற்றியும் தகவல் தரக்கோரி அறிவிப்பு வெளியிட்டிருந்தது. இந்நிலையில் கடந்த வியாழக்கிழமை நடந்த மோதலில் கோபியுடன் சேர்ந்து தேவியனும் கொல்லப்பட்டதாக இலங்கை இராணுவம் அறிவித்துள்ளது. (செ-6)

## வடக்கு மாகாணம்...

இந்நிலையில் வடக்கில் விடுதலைப்புலிகள் மீள உருவாகியுள்ளனர் என்று கூறி இராணுவத்தினரும் பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரும் பொலிஸாரும் இணைந்து பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் நிலையில் ஓமந்தையில் மீண்டும் சோதனை நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ்.கிளிநொச்சி மாவட்டம் உள்ளடங்கலாக வடக்கு மாகாணத்தில் இராணுவத்தினருடன் இணைந்து பொலிஸாரும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

துவிச்சக்கரவண்டியில் செல்லும் இந்த ரோந்து படையணியில் 7 இராணுவத்தினருக்கு மூன்று பொலிஸார் வீதம் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)

## மூவரின்...

தெரிவித்திருக்கின்றார்.

ஆயினும் காவல்துறையின் ஏற்பாடுகளுக்கமைவாக இந்த இறுதிக்கிரியைகளில் இறந்தவர்களின் நெருங்கிய குடும்ப உறவினர்கள் கலந்து கொண்டார்களா என்பது பற்றிய தகவல்கள் கிடைக்கவில்லை.

கோபி என்று படையினரால் குறிப்பிடப்படுகின்ற செல்வநாயகம் கஜீபனின் மாமனராகிய செகராசசிங்கம் பாலகுருபரன், கஜீபனின் சடலத்தைப் பார்வையிட்ட போதிலும் இறுதிக்கிரியைகளில் தான் கலந்து கொள்ளவில்லை என்றும் தனது மகளும் கஜீபனின் தாயாரும் கலந்து கொண்டார்களா இல்லையா என்பது பற்றிய தகவல் தனக்குக் கிடைக்கவில்லை என்றும் கூறினார். (செ-6)

## மூவர் சுட்டுக்...

விசாரணை இடம்பெற வேண்டும் எனவும் அவர் கூறினார். அரசும் இராணுவமும் கூறிவரும் புலிகள் மீளிணைவுக் கதைகளில் எமக்கு நம்பிக்கை இல்லை. இது சோடிக்கப்பட்ட நாடகம் என்றே நாங்கள் ஆரம்பத்தில் இருந்து கூறி வருகிறோம். மக்களுக்கும் அரசு கூறும் புலி மீளிணைவுக் கதை தொடர்பில் உண்மை நிலைப்பாடு தெரியாது. புலிகள் மீளிணைவு பற்றிய பிரசாரம். அதனைத் தொடர்ந்து மூன்று இளைஞர்கள் கடந்த வியாழக்கிழமை சுட்டுக்கொலை செய்யப்பட்டமை ஆகியன தொடர்பில் இராணுவத் தரப்பிலும் முன்னுக்குப் பின் முரணான தகவல்களே தெரிவிக்கப்பட்டு வருகின்றன எனவும் மாவை எம்.பி. சுட்டிக்காட்டினார். இராணுவம் கூறும் எதனையும் நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. மேலும் புலிகள் மீளிணைவுக் கதையின் பின்னர் நடைபெற்ற பல்வேறு சம்பவங்கள் தொடர்பில் இராணுவத்தரப்பில் தெரிவிக்கப்பட்டு வரும் தகவல்கள் எமக்கு மேலும் சந்தேகத்தையே ஏற்படுத்தியுள்ளன. எனவேதான் இந்தச் சம்பவங்கள் குறித்து தெளிவுபடுத்த வேண்டும் என நாங்கள் அரசாங்கத்தை வலியுறுத்துகிறோம் எனவும் மாவை சேனாதிராஜா மேலும் கூறினார். (செ-6)

# மரண அறிவித்தல்

## வைத்திலிங்கம் வள்ளிப்பிள்ளை



வளலாய் சல்லியடியை பிறப்பிடமாகவும் அரசடி 5-ம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் வள்ளிப்பிள்ளை அவர்கள் நேற்று 12.04.2014 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பண்டா சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை சின்ன தம்பதியரின் மருமகளும், பாக்கியம் (ஓய்வுபெற்ற ஆசிரியை), இராசதுரை (மேசன்) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற தம்பிராசா, பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவலிங்கம் (வினோஜிகா வேர்க்சொப் உரிமையாளர்), ஜெயந்தி, தர்மராசா (ஜேர்மன்), வசந்தி (ஜேர்மன்), சந்திரகுமார் (அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்-யாழ்ப்பாணம்), வனிதா (யாழ் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்), சிவராசா, சுகந்தி, தீனதயாபரன் (யாழ்.போதனா வைத்தியசாலை அம்புலன்ஸ் சாரதி), தமயந்தி, யோகநாதன் சாந்தி(பிரான்ஸ்), பிரபாகரன், அனுலா (யாழ். இளையதம்பி மகா வித்தியாலய ஆசிரியை), கருணாகரன், சபீனா (சுவிஸ்), இராதா கிருஸ்ணன், சோபா (அவுஸ்ரேலியா), ஆனந்தகிருஸ்ணன் (ரிங்கர்), சுகந்தினி, சசிக்குமார் (யாழ்.மாநகர சபை ஊழியர்), திலகவதி, ஸ்ரீ கிருஸ்ணன், அனுஷா (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், துஷ்யந்தன்-அஸ்வெனா, ரூபநந்தன், அஜந்தன், கார்த்திகா, திலீபநந்தன், வினோஜிகா, அகல்யா, சுவஸ்திகா, அவிஸ்கர். (ஜேர்மன்), தபிஸ்கர்(ஜேர்மன்), ஜிந்துஜா, காவியா, சதுவர்ணன், கரிதவர்ணன், மதிவர்ணன், அபிலாஷ், அகிலாஷ் (பிரான்ஸ்), வின்சிகா, கபிசன், வழுதி (சுவிஸ்), யூலி, சாரு, சஞ்சீவன், தீபிகா, சுரங்கன், சாரங்கன், சஞ்சுதன் , வானுப்பிரியா, பிரியங்கா, பக்தஜனனி, துசாரகா, லஜீவன், சாலுஜன், சியான், அஸ்வினி (அவுஸ்ரேலியா) ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.04.2014) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

5-ம் ஒழுங்கை, அரசடி யாழ்ப்பாணம். (6137) தகவல்:- குடும்பத்தினர்.

# 31-ம் நாள் நினைவு நாளும் நன்றி நவிலலும்



## செல்லையா ஆறுமுகம்

(கொழும்பு சுப்பர் மார்க்கெட்டின் மேற்பார்வையாளரும் கிளிநொச்சி பொதுச்சந்தை மேற்பார்வையாளரும்)

பிறப்பு 24.06.1952

இறப்பு 13.03.2014

தை தையோ இடிந்த போதும்
கலங்காத நாம் – அப்பா
உங்கள் நினைவால் கலங்குகின்றோம்

பிரான்சில் இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் மரணச் செய்தி கேட்டு நேரில் வந்து ஆறுதல் கூறிய உள்ளங்கள், தொலைபேசி மூலமும் இணையத்தளத்தின் மூலமும் துயரைப் பகிர்ந்து கொண்ட உள்ளங்கள், மலர்ச்சாலையில் வந்து மலர் வளையங்களை வைத்தும் இரங்கல் உரைகளை ஆற்றிய வெளிநாட்டு, உள்நாட்டு உறவுகள் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ப.அரவிந்தன்,
மல்லாவி.
0779673679 (6136)

தகவல்:
குடும்பத்தினர்
மனைவி,பிள்ளைகள்,
மருமகன்,மருமகள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராணுவ பிர...

ஒன்றின் மூலம் நிரந்தர நல்லிணக்கத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். (செ-11)

## பிரித்தானியா...

பொருட்கள் கலக்கப்பட்டு விநியோகிக்கப்படுவதாக பிரித்தானிய பிரஜைகளுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பிரித்தானிய பிரஜைகள் வழிப்போக்கர்களுடன் இணைந்து மதுபானம் அருந்த வேண்டாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டுப் பிரஜைகள் மீதான வன்முறைச் சம்பவங்கள் அதிகளவில் பதிவாகாத போதிலும். பாலியல் துன்புறுத்தல் சம்பவங்கள் பதிவாகி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நம்பிக்கையான சுற்றுலா முகவர் நிறுவனங்களின் ஊடாக பயணங்களை மேற்கொள்ள வேண்டும் எனவும்.

பணம். கடவுச்சீட்டுப் போன்றவற்றை பாதுகாத்துக்கொள்ள வேண்டியது அவசியமானது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்பகுதி கரையோரங்களில் அமைந்துள்ள சுற்றுலா விடுதிகளில் அதிகளவில் மதுபானத்துடன் போதைப்பொருள் கலக்கப்பட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனிப்பட்ட ரீதியில் பிரித்தானிய பிரஜைகளை இலக்கு வைத்து வன்முறைகள் இடம்பெறுவதில்லை என்ற போதிலும் வெளிநாட்டுப்பிரஜைகள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டியது அவசியமானது என தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக கடன் அட்டை மோசடிகள் அதிகளவில் இடம்பெற்று வருவதாக பிரித்தானிய வெளியுறவுத்துறை குறிப்பிட்டுள்ளது. (செ-6)


### தவறிவிட்டது

இளையதம்பி குணசிங்கம் (503334801V) என்பவருடைய சாரதி அனுமதிப்பத்திரம் முள்ளியவளை -முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் வரையான பிரதான வீதியில் 10.04.2014 அன்று தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(தகுந்த சன்மானம் வழங்கப்படும்)

தொடர்புகளுக்கு: இ.குணசிங்கம் - முள்ளியவளை - 0771392073 (C-7021)






Print your Building Plans in A1 & A2 sizes

LEYDEN PRINTS

Registered with Municipal & Urban Councils

We Specialize in 3D Drawings, Designs & Estimates

No.472, Main Street, Chundikkuli, Jaffna.

Tel/Fax:-021 222 1851 Hot Line:-0777 320 799, 07755 6 99 77

(6079)


# பாரம்பரியக் கொண்டாட்டம் பொதுநலத்தை வளர்க்கட்டும்

## புத்தாண்டு வாழ்த்தில் முதலமைச்சர்

சிறுபான்மையினர் சில விடயங்களைப் பெரும்பான்மையினரிலும பார்க்க நல்ல விதமாக நடத்திக் கொண்டு போகின்றார்கள் என்ற காரணத்திற்காகப் பெரும்பான்மையினர் கோபம் கொண்டு சிறுபான்மையினருக்குத் தீங்கு விளைவிக்க எண்ணுவது தவறு என்று சுட்டிக்காட்டியுள்ள வடக்கு மாகாண முதலமைச்சரும் முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன், எமது நாடு நன்நிலை அடைந்து முன்னேற்றம் காணவேண்டுமானால் அரசியல்வாதிகள் தமது அரசியல் பரிமாற்றங்களில் கொடுத்து வாங்கும் பக்குவத்தைப் பிரதிபலிக்க முன்வர வேண்டும் என்று புத்தாண்டுச் செய்தியில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழ்ப் பேசும் மக்களினதும் சிங்களம் பேசும் மக்களினதும் பொதுவான பாரம்பரியத்தை நினைவுபடுத்தும் விதத்தில் இரு சாராரையும் ஒருங்கு சேர்த்து கொண்டாட வைப்பதுதான் சித்திரைப் புத்தாண்டு. எமது இருதரப்பு அரசியல்வாதிகளும் இப்பேர்ப்பட்ட பொது விடயங்களைப் போற்றிப் பேசாது எமது வேற்றுமைகளையே முன்னிறுத்தி வந்துள்ளனர். அதன் காரணமாகத்தான் இன்று நாட்டில் ஒரு பாரிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

மனிதர்களாகப் பிறந்த நாம் அனைவரும செழிப்பு, மகிழ்ச்சி, அமைதி, மனநிறைவு ஆகியவற்றையே எம் வாழ்க்கையில் எதிர்பார்க்கின்றோம். இவற்றைப் பெறவேண்டுமானால் எம் எல்லோர் இடையேயும் கொடுத்து வாங்கும் பக்குவம் மலரவேண்டும். சிறுபான்மையினர் சில விடயங்களைப் பெரும்பான்மையினரிலும் பார்க்க நல்ல விதமாக நடத்திக் கொண்டு போகின்றார்கள் என்ற காரணத்திற்காகப் பெரும்பான்மையினர் கோபம் கொண்டு சிறுபான்மையினருக்குத் தீங்கு விளைவிக்க எண்ணுவது தவறு.

பிரித்தானியாவில் ஸ்கொட்லாந்தைச் சேர்ந்தவர்கள் ஆங்கிலேயர்களிலும் பார்க்கச் சிறப்பாக செயற்பட்டார்கள். அதற்காக ஸ்கொட்லாந்தைச் சேர்ந்தவர்களுக்குத் தீங்கிழைக்கவோ, தொல்லை கொடுக்கவோ, பக்கச் சார்பாக அவர்களுக்கு எதிராக நடந்து கொள்ளவோ ஆங்கிலேயர்கள் எத்தனிக்கவில்லை. அதனால் தான் பிரித்தானியா உலகின் பலம்மிக்க நாடுகளில் ஒன்றாக இன்றும் இடம் வகிக்கக் கூடியதாக இருக்கின்றது.

சிங்கப்பூரில் பெரும்பான்மையானவர்கள் சீனர்களும் மலேய இனத்தவர்களும் ஆவர். எனினும் மிகச்சிறிய சிறுபான்மையினரான தமிழ்ப் பேசும் மக்கள் தமது கெட்டிததனத்தால் நாட்டில் செல்வாக்குடையவர்களாக இருந்தார்கள். லீ குவான் யூ அவர்கள் நாட்டின் மொழிகளுக்கு உத்தியோகபூர்வ அந்தஸ்து வழங்கும் போது ஆங்கிலம், சீனமொழி, மலாயமொழி, தமிழ் ஆகிய நான்கு மொழிகளுக்கும் சம அந்தஸ்து வழங்கினார்.

சிங்கப்பூர் இன்று உலகில் மிக உன்னதமான ஒரு நிலையில் வைத்துப் போற்றப்படுகின்றது என்றால் அவர்களின் கொடுத்து வாங்கும் பக்குவமே அதற்குக் காரணம்.

எமது நாடு நன்நிலை அடைந்து முன்னேறம் காணவேண்டுமானால் எமது அரசியல்வாதிகள் தமது அரசியல் பரிமாற்றங்களில் இந்தக் கொடுத்து வாங்கும் பக்குவத்தைப் பிரதிபலிக்க முன்வரவேண்டும்.

புத்தாண்டு பிறக்கும் போது எம்மவரிடையே தெளிந்த மனமும் பொது நல சிந்தையும் உதயமாக வேண்டும் என்று வாழ்த்துகின்றேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-6)


### நாளை புதுவருட தினத்தில் விசா ஆலோசனையில் இணைந்தால் 25 வீதக் கட்டணக் கழிவு

(நிபந்தனைகளுடன்)

★ அவுஸ்திரேலியா குடும்ப விசா வெல்வது எளிது.

★ கனடாவில் வைத்திய உத்தியோகத்தர், தாதியர், மருந்தாளர், மின் இணைப்பாளர், தச்சுத் தொழிலாளர், வெல்டர், 8மாதபயிற்சிக்குசெல்லIELTSதேவையில்லை.

★ நியூசிலாந்து, சைப்பிரஸ் படிக்க உழைக்க IELTS தேவையில்லை.

★ இத்தாலிசெல்ல-2வாரங்களில் இலங்கையை விட்டு பறக்கலாம். (நிபந்தனைகளுடன்)

★ Visit Visa, மறுக்கப்பட்ட விசா.

புதுவருட தினமன்று முழுமையும் திறந்திருப்போம்

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்

இல. 175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். தொ. பே: 021 221 9016, 021 499 3502

www. thisaivisa.com

(C-7023)



### Elocution class இற்கான அனுமதிகள்

சர்வதேச அங்கீகாரம் பெற்ற New Era Academy (London) இன் ஐப்பசி மாத பரீட்சைக்கான வகுப்பு அனுமதிகள் (3 வயது தொடக்கம்) ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

குறிப்பு: மாசி மாதம் விண்ணப்பித்தவர்களுக்கான பரீட்சைகள் 23.04.2014 8.00am Festival 2.00 Pm 'பிள்ளையார்இன்' இல் நடைபெறும்.

யாழ். மண்ணில் 2-வது தடவையாக பரீட்சைகள் நடைபெறுவதும் Examiners ஆக வெளிநாட்டவர்கள் இருப்பதும் சிறப்பம்சம் ஆகும்.

தகவல்களுக்கு: இணைப்பாளர் 0772116733

(6129)



### BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

புது வருடத்தை முன்னிட்டு விசேட கட்டணக் கழிவில் சர்வதேசத்தரம் கொண்ட கற்கைநெறிகள்

**Spoken English With Grammar - Quick Learning Course** (1 1/2 Months)

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல். சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.

A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.

வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

(C-7002)

**Diploma In English** (2 Months)

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

**IELTS** Toping centre for registering more IELTS candidates in Jaffna & Approved centre for IELTS online Registration system for Exam

< We gurantee minimum 6.0 band and above >

Duration: 2 1/2 Months

**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

**A1 Exm - Sponsor / Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை

- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

EVENING & WEEKEND CLASSES

Batch1 15-04-2014 @10.00pm ★ Batch2 16-04-2014 @4.00pm ★ Batch3 19-04-2014 @10.00pm ★ Batch4 21-04-2014 @4.00pm

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287

Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074





SPEED LANKA EXPRESS Courier

### வெளிநாடுகளுக்கான தபால் பொதிகள் சேவை

- உள்நாட்டு, வெளிநாட்டு துரித தபால் பொதிகள் சேவை
- உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
- சர்வதேச விமான பயண சீட்டுகளை பெற்றுக்கொள்ளலாம்

(6079)

ஸ்பீட் லங்கா எக்ஸ்பிரஸ் கொரியர் & ரவல்ஸ்

135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே - 0772931062, 0776217926 www.speedlanka.net


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.04.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org